# மனம் ஒரு
# ரங்க ராட்டினம்

"லக்ஷ்மி"

பூங்கொடி பதிப்பகம்

14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர் : : சென்னை-600 004

முதற் பதிப்பு : டிசம்பர், 1979
இரண்டாம் பதிப்பு : மே, 1980
மூன்றாம் பதிப்பு : டிசம்பர், 1987
நான்காம் பதிப்பு : ஜூலை, 1994
உரிமை : டாக்டர் கே. மகேஸ்வரன்

விலை. ரூ. 19.00

19121
3467055

அச்சிட்டோர் :

சப்தஸ்வரம் பிரிண்டர்ஸ்
சென்னை-600 005

# பதிப்புரை

பெண் எழுத்தாளர் வரிசையில்—தமிழகத்தில் இணையற்ற பெருமையாளராகத் திகழ்பவர் திருமதி ''லக்ஷ்மி'' அவர்கள்.

சில பத்திரிகைகளால் சில எழுத்தாளர்கள் பிரபலம் அடைவதுண்டு. ஆனால், இவரால்-இவர் தொடர் கதைகளால் பிரபலம் பெற்ற ஏடுகளே சில உண்டு. இதுவே இவரது எழுத்தாற்றலுக்குச் சிறந்த தோர் எடுத்துக் காட்டாகும்.

இவரது கதைகள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு நீதியைக் கற்பிப்பதாக இருக்கும். இந்த நாவல் கூட தவறுக்கு நியாயம் கற்பிப்பதே மாபெரும் தவறு என்பதனை வலியுறுத்துவதாகவே அமைந்துள்ளது. இந்த நூலை வெளியிடுவதில் பெருமைப்படுகிறோம்

**வே. சுப்பையா**
பூங்கொடி பதிப்பகம்

## 'லக்ஷ்மி'யின் 'பூங்கொடி' வெளியீடுகளில் சில...

| | | |
|---|---|---|
| இரண்டாவது மலர் | 58 | 00 |
| வீரத்தேவன் கோட்டை | 13 | 00 |
| அழகின் ஆராதனை | 30 | 00 |
| பெண் மனம் (தமிழ்நாடு அரசு பரிசு நூல்) | 30 | 00 |
| உயர்வு | 30 | 00 |
| கோடை மேகங்கள் | 32 | 00 |
| ஸ்ரீமதி மைதிலி | 60 | 00 |
| நதிமூலம் | 18 | 00 |
| ஒரு காவிரியைப் போல (சாகித்ய அகடமி பரிசு பெற்றது) | 56 | 00 |
| நீதிக்குக் கைகள் நீளம் | 30 | 00 |
| மீண்டும் வசந்தம் | 38 | 00 |
| நிற்க நேரமில்லை | 26 | 00 |
| அவள் தாயாகிறாள் | 16 | 00 |
| உறவுகள் பிரிவதில்லை | 13 | 00 |
| வாழ நினைத்தால் | 16 | 00 |
| மோகத்திரை | 27 | 00 |
| வெளிச்சம் வந்தது | 30 | 00 |
| மாயமான் | 10 | 00 |
| இனிய உணர்வே என்னைக் கொல்லாதே | 44 | 00 |
| என் வீடு | 22 | 00 |
| என் மனைவி | 26 | 00 |
| பண்ணையார் மகள் | 46 | 00 |
| கங்கையும் வந்தாள் | 46 | 00 |
| அரக்கு மாளிகை | 70 | 00 |
| கை மாறியபோது | 30 | 00 |
| நல்லதோர் வீணை | 33 | 00 |
| மருமகள் | 20 | 00 |
| வசந்திக்கு வந்த ஆசை | 26 | 00 |
| புதை மணல் | 25 | 00 |
| அத்தை | 22 | 00 |
| மரகதம் | 18 | 00 |
| நாயக்கர் மகள் | 60 | 00 |

# மனம் ஒரு ரங்க ராட்டினம்

## 1

[9121]
3467055

அன்று இரவு அனைவரும் சித்தார்த்தை வழியனுப்ப மீனம்பாக்கம் விமான நிலையத்தில் கூடியிருந்தனர். காஞ்சிபுரத்திற்குப் போனபோது அவன் அவளது பிறந்த நாளுக்காக வாங்கிப் பரிசளித்த அந்த ஆரஞ்சு நிற உடல் கனதாரக் கரை பட்டுச் சேலையைக் கட்டிக்கொண்டு வந்திருந்தாள் அவள்.

"எதைக் கட்டிக்கொண்டாலும் கொள்ளையழகு என் திவ்யா" கிசுகிசுத்த சித்தார்த் அவளது கையை மெதுவாக, செல்லமாகக் கிள்ளினான்.

"நீங்க மட்டும்...கோட் ஸூட், தோளில் தொங்கும் பை, காமிரா சகிதம்...அமெரிக்கா பயணத்திற்கு அட்டகாசமாகத்தான் உடுத்திக்கிட்டிருக்கீங்க..." பதிலுக்கு அவளும் பரிகசித்தாள்.

இருவரும் ஒருவரையொருவர் கண்களுக்குள்ளே பார்த்துச் சிரித்துக் கொண்டனர். அம்மா சுகுணா தன் புடவைத் தலைப்பை இழுத்துக் கை மீது போர்த்திக் கொண்டு அவர்களைப் 'பாராததுபோல் பார்த்துப் பெருமையுடன் பெருமூச்செறிந்தாள்.

சில்க் ஜிப்பாவிற்குள் கையைப் போட்டுக் கொண்டு அப்பா ராஜாராம் மேலும் கீழுமாக உலவிக்கொண்டிருந்தார்.

அண்ணன் யோகேந்திரன் புஸ்தகக் கடையில் படையெடுத்து விட்டிருந்தான். புஸ்தகங்களைப் பார்ப்பது போல் அவனது கண்கள் தங்கை குறிப்பிட்ட அந்தப் பெண்ணைப் பலமுறை 'இருட்டுத்தனமாக ஊடுருவிக் கொண்டிருந்தன.

''ஒரு சாக்லெட் வாங்கிட்டு வந்து கொடுக்கட்டுமா? என்னைப் பத்தி சதா இனிப்பா நினைச்சிக்கிட்டே இருக்க...'' கொஞ்சலாகக் கூறிய சித்தார்த் எழுந்து சென்ற போதுதான் அவள் தன்னைச் சுற்றிலும் பார்வையை ஓடவிட்டாள்.

அம்மா! வழக்கம்போல் கனமானதொரு காஞ்சிபுரம் சேலையை உடுத்திக் கொண்டு, தலை நிறையக் கட்டுக் கதம்பமும், நெற்றி நிறையப் பளிச்சென்ற குங்குமமும், காதும் மூக்கும் கழுத்தும் வைரங்களில் பளிச்சிட, கழுவித் துடைத்து அலங்கரித்த கோவில் வெண்கலச் சிலைபோல... அபயஹஸ்தம் ஒன்றுதான் பாக்கி! அதே மோகன முறுவல். சாந்த ஸ்வரூபம். நாற்காலியில் தனியே அமர்ந்திருந்தாள்.

நாற்பது வயது. யாருமே சொல்ல முடியாது. கிள்ளி எடுக்கும் இளமை · தங்க நிறமான மேனியழகு வைர மூக்குத்திக்கு ஏற்ற கூர்மூக்கு. கபடமில்லாத, குழந்தை பரக்க விழிப்பதைப் போன்ற கருவண்டுக் கண்கள். இரண்டு குழந்தைகளின்' தாயாகியும், மணையில் வச்சுக் கல்யாணம் செய்திடலாம். அத்தனை அழகுதான். ஆனா கொஞ்சம்கூடப் புத்தி கிடையாது. பாட்டி—அதாவது அம்மாவின் மாமியார்—இறப்பதற்கு முன் அம்மாவிற்குக் கொடுத்த சான்றிதழ் அது. பாட்டியின் கூற்று உண்மை தான். அம்மா அழகு, பொறுமை. அடக்கம் எல்லாம் அமைந்தவள்தான். ஆனால் அப்பா ராஜாராமின் மனைவியாக இருக்க வேண்டியவளிடம், கொஞ்சம் ரோஷம். ஆக்திரம் ஆவேசம் போன்ற பரபரப்பான உணர்ச்சிகள் தேவையானவையாயிற்றே?

அலங்காரம் செய்த விக்கிரகத்தைப் பக்தர்கள் பார்த்தால், பரவசத்துடன் மெய்மறந்து கன்னத்தில் போட்டுக் கொள்வார்கள். இங்கே அப்பா... அம்மாவை உடைமைப் பொருள்களில் ஒன்றாக அல்லவா கருதினார்? தமது செல்வத்தையும். அந்தஸ்தையும், தம்பட்டம் கொட்ட



வைத்திருக்கும் பென்ஸ் கார்போல, மனைவி என்ற அலங்கார அழகு பொம்மை என்றல்லவா நினைக்கிறார்!

போக்குவரத்துக் கம்பெனியின் முதலாளி. அகில இந்தியாவெங்கும், சாமான்களைக் கொண்டு சென்று விநியோகிக்கும் டிரான்ஸ்போர்ட் கம்பெனி முதலாளி. எம். ஏ. படித்தவர். மேடைப்பேச்சாளர். ஊரில் உள்ள அத்தனை நாகரிக 'கிளப்'களிலும் அங்கம் வகிப்பவர். யாவற்றிற்கும் ஒருபடி மேலாக, அவர் ஒரு பர்மிட் ஹோல்டர் மனிதன் தற்காலத்தில் வியாபாரத்தில் முன்னேற வேறு என்ன வேண்டும்?

அப்பாவைப் பார்த்தால் முப்பத்தைந்து வயது வாலிபர் போல் நடப்பார் அவர் வயது என்னவோ நாற்பத்தெட்டு ஆனால் நாள்தோறும், ஒரு செட் டென்னிஸ், நீச்சல் குளங்களில் நீச்சல், ஞாயிறு வந்து விட்டால் ரேஸ், சில நாட்களில் கிளப்பில் சீட்டாட்டம் என்று பல பெரிய மனிதப் பொழுது போக்குகள் ஒரே ஒரு நல்ல குணம். எங்கு போனாலும் சொல்லிவிட்டுத்தான் போவார், ஒரே ஒரு இடத்தைத் தவிர. அதைப் பற்றி யாரும் கேட்கவும் மாட்டார்கள்.

திவ்யா பற்களைக் கடித்துக்கொண்டாள். சித்தார்த் வெளிநாடுகளில் வியாபார விஷயமாகச் சுற்றப் போகிறான் என்ற நினைவின் உறுத்தல் ஒருபுறம் முதல் நாள் பகல் கேள்விப்பட்ட சங்கதியினால் வேதனையுடன் குழம்பித் தவித்த அமைதியற்ற நிலை மறுபுறம். அவள் கண்களின் ஓரங்களில் கண்ணீர் பளிச்சிட்டது. கட்டுக் கொள்ளாமல் இரண்டு பெரும் திவலைகளாகக் கன்னத்தில் உருண்டன.

விருக்கென எழுந்து வந்தாள் சுகுணா.

''பைத்தியக்காரப் பொண்ணு நீ. சித்தார்த் என்ன வருஷக்கணக்காகவா வெளியூர்ல உட்கார்ந்திருக்கப் போகுது? இப்பத்தான் போல இருக்கும். மூணுமாசமும்

ரூஷ ஃபீஸுமாப் போயிடும். கல்யாணத்துக்கு வேண்டியது தயாரிக்க நமக்கும் கொஞ்சம் அவகாசம் தேவை தானே? கண்ணைத் துடைச்சுக்க." அவன் சொல்லி முடிக்கும் சித்தார்த்தின் தாய் வேகமாக அருகில் வந்து விட்டாள்.

அம்மாவைப் போல் அவள் அப்படி ஒன்றும் அழகில்லை. வருங்கால மாமியாரைப் பார்த்து உடனே தெளிந்து தலையை குனிந்து கொண்டாள் திவ்யா.

"அடா! இப்பவே இப்படின்னா...எங்க வீட்டு மருமகளா வந்த பிறகு அவனை எங்கேயும் போக விடமாட்டே போலிருக்கே" பரிகாசமாக கூறிவிட்டு, திவ்யாவின் கன்னங்களைச் செல்லமாக கிள்ளினாள் அவள். அவளது விரல்கள் வெடவென்று பட்டன. திவ்யாவின் உடல் கூசியது.

அப்பா தமது கிராப்புத் தலையைத் தடவியபடி அந்தப் பெண் சென்ற திக்கிலே கண்ணை ஓடவிட்டதைப் பார்த்து விட்டாள் மகள். வயிற்றிலே நெருப்புத் துண்டுகள் கொட்டுவது போன்ற உணர்வு. மீண்டும் கண்களில் இரண்டு துளிக் கண்ணீர்.

"சுத்த பைத்தியம். கொஞ்சம் சிரிச்சுகிட்டே இரு. சித்தார்த் வெகு தொலைவில போகப் போறது. நாம் தான் தைரியமா இருக்கணும்." அம்மா செல்லமாக அதட்டினாள்.

"நீதானம்மா பைத்தியம். உன் வெகுளித்தனத்திற்கு, நீ மோசம் செய்யப்படும் கொடுமைக்கு, உன் ஏமாளித்தனத்துக்குத்தான் கண்ணீர் வடிக்கிறேனம்மா. சித்தார்த், அமெரிக்கா என்ன, விண்வெளிக்குக் கிளம்பியிருந்தால் கூடக் கலங்கமாட்டேன். நாங்கள் உள்ளமும் உணர்வும் ஒன்றுபட்டு ஒருத்தரை ஒருத்தர் ரொம்பப் புரிந்து கொண்டவங்க. உன்னையும், அப்பாவையும் போலவா நாங்கள்... எனக்குச் சித்தார்த் பற்றி கவலையே இல்லை. ஆனால் அப்பா வீட்டை விட்டு வாசலில் இறங்கியதுமே, கவலைப்பட வேண்டியவள், கண்ணீர்விட வேண்டியவள், எல்லாம்



நீதான் அம்மா பத்தாம் பசலியாக, உனது இழப்புக்களின் ஆழத்தைப் புரிந்துக்க முடியாமல் புன்னகை செய்யும் பொம்மையா இருக்கிறாயே அம்மா!' கத்த வேண்டும் போன்ற ஆவேசம் அவளுக்கு. கண்களைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டாள்.

சித்தார்த்துடன் அப்பா பேசிக் கொண்டு நின்றார். விளக்கு ஒளியில் எல்லார் கவனமும் தன்மீது வந்து விழும்படியாக வளர்ந்து சென்று கொண்டிருந்த அந்தப் பெண்ணை திவ்யா மீண்டும் வெறுப்புடன் உற்றுப் பார்த்தாள்.

அம்மாவைவிட அவள் அழகியல்ல. ஆனால் கவனமாகச் செய்யப்பட்ட ஒப்பனைக்குள்ளே இளமை இனிமையாக ஆடிக்கொண்டிருந்தது. குற்றாலத்து அருவியின் குளுமை போல, பார்ப்பவர் கண்களுக்கு ஜிலு ஜிலுவென்றிருந்தாள். வயது? தோழி சொன்னதுபோல அவர்களை விட இரண்டு வயது மூத்தவளாகத்தான் இருக்க வேண்டும். இருபத்திரண்டு இருக்குமா? அவள் எதற்காக விமான நிலையத்திற்கு வரவேண்டும்? முன் ஏற்பாடா?

இந்தப் பக்கம் சம்பந்திகள். அந்தப் பக்கம் பெற்ற பிள்ளையின் கண்காணிப்பு. மறுபக்கம் மனைவியும் மகளும்—எதிரே வருங்கால மருமகன். இத்தனை பேர் நடுவிலே...அவரது கண்கள் அவளது அழகில் நீந்தி முழுகி, எழுந்து ஜலக் கிரீடை செய்கின்றனவே. சே! சே! தாடை இறுகியது. கோபத்துடன் உதடுகளை அழுந்தக் கடித்தாள். சித்தார்த் அருகில் வந்ததும் அம்மாவும், வருங்கால மாமியாரும் நகர்ந்து கொண்டனர்.

அவளது உள்ளங்கையில் ஆசையுடன் சாக்லேட்டை அழுத்தினான் சித்தார்த். 'கவலைப்படாதே. நான் உன் பக்கம்,' என்பது போன்ற ஆதரவான அழுத்தம் அவளுக்கு ஆறுதலாக இருந்தது.

"தாங்க்யூ சித்தார்த்!" மெல்லிய குரலில் அவள் புன்னகைத்தபடியே, சாக்லெட் உறையைக் கிழித்து வெள்ளிக் காகிதத்தைப் பிரித்து ஒரு விள்ளலை அவனிடம் முதலில் நீட்டினாள்.

"உனக்குத்தான் வாங்கிட்டு வந்தேன்."

"தெரியும் எல்லாத்திலேயும் என்னோட பங்கு போட்டுக் கொள்கிறீங்களே அதனால, இதிலயும் உனக்கு, எனக்கு என்கிற பேதமே கூடாது. தெரியுதா?" கொஞ்சம் உரத்து அழுத்தமாகக் கூவினாள்.

பக்கென்று சிரித்து விட்டான் அவன் அவளால் சிரிக்க முடியவில்லை இந்த மாதிரியான விபரீத விஷயங்களை ஆண்கள் எத்தனை சாதாரணமாக எடுத்துக் கொள்கிறார்கள். வாழ்க்கையே சிலருக்கு விளையாட்டாகவல்லவா இருக்கிறது?

சாயலில் அவள் அம்மாவைப் போல் என்பார்கள் பார்த்தவர்கள். குணத்தில்...அம்மாவைப் போல மட்டித்தனம் அவளுக்குக் கிடையாது. அப்பாவின் கபடமும் கிடையாது. ஒரு சமயம் தாத்தாவைப்போல இருக்கலாம். அவர் ஒழுக்கத்தின் இலக்கணமாக வாழ்ந்து காட்டிவிட்டுப் போனவர் தாத்தாவை அவளுக்குச் சிறிதளவு ஞாபகம் இருந்தது.

"சித்தார்த்! நேரமாயிட்டுது. செக்யூரிடி செக்குக்கு கிளம்பணும்." அப்பா அதட்டியபடி, மிடுக்கு நடை போட்டுக் கொண்டு வந்தார். காதோரத்தில் மட்டும் ஒன்றிரண்டு நரைகள். கண்களைச் சுற்றிலும் ஊன்றிப் பார்த்தால், லேசான சுருக்கங்கள். அப்பா ராஜாராம் இளமையை விடேன் தொடேன் என்று துரத்திப் பிடித்துக் கொண்டிருந்தார்!

சீரான சாப்பாடு. வாரத்திற்கு இருமுறை டென்னிஸ் விளையாட்டு, ஜிம்கானா நீச்சல்குளத்திலே தவறாத நீச்சல் பயிற்சி, இளமையைத் தளரவிடாமல் வைத்திருக்கப் பல



விதமான மாத்திரைகள், லேசான மை பூச்சு, ஷேவிங் க்ரீம், ஸெண்ட் மணம் முதலிய சாதனங்களால் உடலைப் பாதுகாத்துக் கொண்டார்.

ஆனால் மனது...? ராட்டினம்போல, மேலும் கீழும் அசைந்து சுழலும்படி விட்டுவிட்டாரா? இவர் எப்போது திருந்துவார். நாற்பதுக்கு மேல் நாய்க் குணம் வந்து விடும் என்று பாட்டி அடிக்கடி முணுமுணுப்பது நினைவுக்கு வந்தது. அப்பாவிற்கு வந்திருப்பது நாய்க் குணமா அல்லது பேய்க் குணமா?

சித்தார்த் இள முறுவலுடன் அவளது தோளை லேசாகத் தட்டியபோது, அவர்கள் அனைவரும் கவனியாதவர்கள் போல் பாவனையுடன் வேறு புறமாகத் திரும்பிக் கொண்டனர்.

அப்பாவின் கண்கள் இதுதான் சாக்கு என்று இப்போது புத்தகக் கடையில் நின்ற அவள் மீது ஓடியது. ஏதோ ஒரு சுவையான பழத்தை ருசித்துச் சாப்பிடுவது போல் அப்பா உதட்டை நாவால் தடவிக் கொண்டு, கண்களால் அவளைப் பார்த்த பார்வை—திவ்யாவின் அடிவயிற்றில் ஆத்திரம் பெரு நெருப்பாக மூண்டு எழுந்தது.

"பை! பை!...கீப் வெல்...கடுதாசி போடு. விஷ்யூ ஸக்ஸஸ்." அவளுக்கு மட்டும் கேட்கும்படி கிசுகிசுத்த சித்தார்த், பிரிய மனமில்லாதவன் போல் பன்முறை அவளைத் திரும்பிப் பார்த்தபடி உள்ளே சென்றுவிட்டான்.

அதற்குப் பின் விமான நிலையத்தில் அந்த இடத்திற்குள் திடீரெனக் கூட்டம் நிரம்பி வழியத் துவங்கியது. அந்தக்கூட்டத்தில் அவள்எங்கேயோ மறைந்து போனாள்.

பச்சை, நீலம் வெள்ளை என்ற வர்ணக் குவியல்களில் தென்பட்ட சட்டை, புடவை ஓரங்களைப் பார்வையிட்டபடி கண்களால் துழாவினள் திவ்யா. ஊஹூம் அவள் மந்திரமோ மாயமோ என்பதுபோல மறைந்தே போய்விட்டாள்!

அப்பா, அம்மாவுடன் கண்ணாடித் தடுப்பருகே நின்று கொண்டிருந்தார். யோகேந்திரன் ஓடிவந்தான்.

"நீ பார்த்தியா?" ஆசசமாகக் கேட்டுவிட்டு விழித்தான்.

"ம்" என்றபடி எழுந்தாள் அவள். அம்மா அப்பா இருவரும் நின்ற இடத்தில் சென்று ஒட்டிக் கொண்டாள்.

சிறிது பொழுதில் 'ஏர் இந்தியா போயிங்' புறப்படும் ஓசை காதைத் துளைத்தது. தூரத்திலிருந்தே கையை ஆட்டினாள். அந்த நடு இரவில் எந்தப் பக்கத்து ஆசனத்தில் உட்கார்ந்தாலும் தெரியாது. அதுவும் தூரத்தில் நின்று நகர்ந்த விமானத்தில் என்ன தெரியும்?

அதனுடைய இமயமலை போன்ற பெரிய வயிற்றுக்குள்ளே தன் உயிருக்கு இனியவனை, வருங்காலத்துணைவனை, அடைத்துக் கொண்டு விமானம் தரையை விட்டு உயரே பறந்தபோது, அவளுக்கு உண்மையிலேயே அழுகை வந்தது. வெகு தொலைவில் மேகத்தினூடே சென்று ஒரு புள்ளியாக மாறும்வரை மரமாகி நின்ற அவர்கள் அனைவரும் விழிப்புற்றுக் கிளம்பினார்கள்.

அப்பா வழக்கம்போலத் தமது வெள்ளை நிற பென்ஸ் வண்டியில் வந்திருந்தார். இதுபோன்ற பொது இடங்களுக்கும் கல்யாணம் போன்ற வைபவங்களில் கலந்து கொள்ளும்போதும் அப்பா தமது அந்தஸ்து உயர்வை மற்றவர்கள் முன்னால் அழுத்தமாக எடுத்துக்காட்ட நகைக்கூடான மனைவியுடன் பென்ஸ் காரில்தான் புறப்படுவது வழக்கம்.

"மிஸஸ் ராஜாராம்! ரொம்ப அழகா இருக்காளே!" மற்றவர்கள் கண்கள் விரிய வேண்டும்.

"என்ன இது? லேட்டஸ்ட் ஆட்டமாடிக் பென்ஸா. உஷ்!" என்று பார்த்த இளைஞர் கூட்டம் விசிலடிக்க வேண்டும்.



"அவளுக்கென்ன, தலைகாய்ச்சி மரம்!" என்று சுகுணாவின் கழுத்தைப் பார்த்து, ஸதா வர்ணத்தை வாரிக் கொட்டும் அந்த அட்டிகையைக் கண்டு, பெண்கள் ஏக்கப் பெருமூச்சுவிடவேண்டும். இப்படி அவருக்கு ஒரு மட்டமான புத்தி...

இருக்காதா அடிமட்ட நிலையில் அதிகப்படியான பணத்தைப் பார்த்துவிட்ட திடீர் பணக்காரர் அவர். 'செல்ஃப் மேட் மேன்' என்று மார்பை நிமிர்த்தி வயிற்றை முன்னுக்குத் தள்ளி, தன்னுள் மறைந்து கிடக்கும் தாழ்வு மனப்பான்மையை ஓட ஓட விரட்டலே... சுகானுபவங்களை ஓட ஓட வெருட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறார் என்பது அவளுக்கும் அவரை நன்றாகப் புரிந்து கொண்டிருந்த பிள்ளைக்கும் தெரியும். உலகத்திற்குத் தெரியுமா?

எண்ணியபடியே அப்பாவின் பக்கம் திரும்பினாள் மகள். "போகலாமா?" அப்பா அவளைப் பார்த்து லேசாகச் சிரித்தார். அம்மாவிற்காவது வாயில் இரு ஓரத்திலும் சிங்கப் பற்கள். ஆனால் அவருக்கு வரிசையாக முத்துக்கோத்தாற்போல் வாய் நிறைய. அவர் சிரிக்கும்போதே கண்களில் மிதக்கும் பரிவுமாக, கனை கட்டிவிடும் முகத்தைப் பார்த்தால், "இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா?" என்ற மயக்கம் ஏற்படுமே! அப்பாவின் அன்பில் மயங்கி உள்ளூரப் பொங்கி வந்த கோபத்தின் உக்கிரம் ஒரு வினாடியில் அணைய, அவளையறியாமல், 'அப்பா—' என்று குழைந்துபோய் விடுவாள்.

ஆய்வுக் கண்களோடு விஷயத்தைப் பிட்டுப் பிட்டு அலசும் திறமையுள்ள தற்காலத்துப் படித்த இளசு அவள். அவளே அந்த மாயப் புன்னகையில் அடிபட்டுப் போகும் போது...

பட்டிக்காட்டில் பிறந்து அதிகப் படிப்பு ஏதுமில்லாத அம்மா, ஏமாந்த சோணகிரியாகிவிட்டதில் வியப்பு என்ன இருக்கிறது? அப்பா அப்படி ஒரு அசகாய சூரர்.

"எங்களோட வரியாம்மா?" வருங்காலத்தில் அவன் தங்களது பொறுப்பு என்பதைச் சொல்லாமல் சொன்னாள் சம்பந்தியம்மாள். தடதடவென, தகர டப்பாவைப் போல் ஆடிக் குலுங்கிய அந்தப் பழைய ஹெரால்டு வண்டியில் அவர்கள் வந்திருந்தனர். அந்தஸ்தில் அவர்கள் அப்பாவிற்கு ஈடு ஜோடி இல்லைதான். சித்தார்த்தனை அவளுக்குப் பிடித்து விட்டது. அப்பாவிற்கும் பிடித்து விட்டிருந்தது. மத்தியதரக் குடும்பமானால் என்ன என்று துணிந்துதான் கல்யாணப் பேச்சைத் தொடர அனுமதித்தார்.

தமது கம்பெனியிலேயே சித்தார்த்தை வேலைக்கு அமர்த்தினார். இப்போது வெளிநாட்டுப் பயிற்சிக்கும் தமது செலவிலேயே அனுப்பிக் கொண்டிருக்கிறார்.

பெரிய மனிதர் வீட்டுப் பெண். மருமகளாக பல லட்சங்களை வாரிக் கொண்டு வரப் போகிறாள் என்ற மகிழ்ச்சி அந்தம்மாளுக்கு. பல தடவை துவைத்து, துவண்டு, சரிகை பிரிந்து போன பட்டுச் சேலையைச் சுற்றிக்கொண்டு கணவருடன் மகனுக்கு விடை கொடுக்க, எல்லோருக்கும் முன்னதாகவே நிலையத்திற்குக் கிளப்பி விட்டிருந்தாள் அவள்.

"இல்லீங்க நான் என் அண்ணனோட 'பியட்' வண்டியில் போறதாச் சொல்லிட்டேன். திருவல்லிக்கேணி போறவங்க நீங்க. அடையார் வரை வந்துட்டுப் போகணும்."

"எங்க மருமகள் நீ. இது கூடச் செய்யாட்டி—" தமது வழுக்கைத் தலையைத் தடவிக் கொண்டு 'ஹஹா' என்று சிரித்தார் சித்தார்த்தின் அப்பா.

சித்தார்த்கூட வயது வந்ததும் இப்படி வழுக்கையாகி விடுவாரோ...? அம்மாவைப் போல அவருக்குச் சுருண்ட முடி இருக்கிறது. வழுக்கை விழாது. பிழைத்தேன். தனக்குள்ளே எண்ணியபடி சிரிப்பை அடக்கிக் கொண்டான் திவ்யா.



"வீட்டிலிருந்து இரண்டு கார்கள் வந்திருக்கே. எதுக்காக வீண் சிரமம்?" பிடிவாதமாகச் சொல்லிவிட்டு, கை குவித்துவிட்டு அண்ணனைப் பார்த்தாள்.

பொருள் பொதிந்த பாவத்துடன் அவன் முன்னால் நடந்தான். அண்ணாவின் பியட்டிலே அவள் ஏறிக் கொண்டாள்.

நடு இரவைத் தாண்டி மணி ஒன்று இருபதாகிக் கொண்டிருந்தது. சாலையில் போக்குவரத்தின் நெருக்கடி தணிந்திருந்தது. விளக்கு வெளிச்சம் கண்களைக் கூச வைக்க, யோகேந்திரன் வண்டியை நிதானமாக ஓட்டிக் கொண்டு சென்றான்.

பக்கத்திலே அமர்ந்திருந்த திவ்யா பெருமூச்செறிந்தாள்.

"அவளை நல்லா பாத்தியா அண்ணா?" அவளுக்கும் அண்ணனுக்குமிடையே இரண்டு வயதுதான் வித்தியாசம். என்றாலும் அவள் அவனை நீ வா, போ என்றுதான் அழைப்பாள். அம்மா எத்தனை படித்துச் சொல்லியும் மாற்றிக் கொள்ள முடியாத பழக்கம்.

"பார்த்தேன். அவளும் புத்தகக் கடைக்கு வந்திருந்தா. கிட்ட வரச்சியே குப்புன்னு வாசனை. 'இண்டி மேட்'டை அபிஷேகம் பண்ணிட்டுக் கிளம்பியிருப்பா போல இருக்கு. யாரையோ வழியனுப்ப வந்திருக்கா போலத் தெரியுது. ஒரு ஹிப்பிபோல பொடிப்பயல். என்ன ஹி ஹி! அவனுக்கு 'டா, டா' சொல்லிக்கிட்டிருந்தா. முக்கியமா அங்க அவள் வந்த நோக்கமே தன் கடையை விரிக்கத்தான் வந்திருக்கா. அவனோட வேற யாரையும் காணலே. ஒரு சிவப்பு பியட் வண்டி வச்சிருக்கா. தானே ஓட்டிக்கிட்டு திரும்பிப் போனா. அதையும் பாத்திட்டேன். மூஞ்சியைப் பார்த்தா எதுக்கும் துணிஞ்ச ஜாடை, நம்மால் மோத முடியுமான்னு கொஞ்சம் திகைப்பாகக்கூட இருக்கு."

திவ்யாவுக்குக் கோபம் வந்தது. ''முன் வச்ச காலைப் பின் வாங்கலாமா? இதனால என்ன வந்தாலும் சரி.'

''ஆமாம் ஆமாம்'' யோகேந்திரன் ஒத்துப் பாடினான். ''இதில் ஒரு வேடிக்கை பாத்தியா? தினமும் எதை மறந்தாலும், அப்பா நமக்குக் குடுக்கற லெக்சரை மறக்கறதில்லே.' இந்தக் காலத்துப் பசங்களுக்கு மரியாதை கிடையாது. பெரியவங்க எதிரிலே கத்திப் பேசறது, கால்மேல கால்போட்டுகிட்டு உட்கார்ந்து இருக்கிறதைப் பாரு. சிகரெட் குடிக்கிறதாய்க் கேள்விப் பட்டேன்!' இப்படி என் மேல் ஆயிரம் குற்றச்சாட்டுக்கள். அப்பா உங்கமேல இருக்கிற ஆயிரம் குற்றங்களைப் பற்றி, நாங்க விசாரணை செய்யலாமான்னு கேட்கத் தோணுது.'

''கேட்பானேன். ஆராய ஆரம்பிச்சிட்டமே, அது போதும்.''

''அவரை ஒரு வழிக்குக் கொண்டுவர வேண்டியது நம்ம பொறுப்பு'' யோகேந்திரன் கட கடவென சிரித்தான். குறுக்கே ஒரு கார். வண்டி வேகத்தைக் குறைத்தான். பென்ஸ் அடுத்தபடியாக விர் என வந்து நின்றது. அப்பா அதிலிருந்து எட்டி முறைத்தார்.

''ராத்திரி வேளை. கவனமா ஓட்டிக்கிட்டு வா. பராக்குப் பார்க்காதே. நிதானமா போ. பேசாதே!'' அதட்டி விட்டு விர்ரென மேலே ஓட்டினார் வண்டியை.

ஆட்டமாடிக் பென்ஸ் ஆகாயத்தில் பறப்பது போல் நழுவி ஓடியது. தங்கையின் பக்கம் திரும்பினான் யோகேந்திரன்.

''கவனிச்சியா? சதா தொண தொணப்பு—நிதானமாய்ப் போக வேண்டியது நானா அப்பாவா?'' சிரித்தான் அவன். காலை வேளையிலே அம்மா எழுந்து



ஸ்நானம் செய்திட்டு, தன் கையாலேயே பறிச்சுக் கொண்டு வந்து பூக்கூடை நிறையப் பூவைப் பூஜையறையில் வைத்து, அப்பாவுக்குப் பணிவிடை செய்யும் போது அம்மாவைப் பார்த்திருக்கிறே இல்லியா?''

''தினசரி பார்த்து அலுத்துப் போன சங்கதி.''

''மஞ்சள் பூசின முகம். நெற்றியிலே குங்குமப் பொட்டு; அதன் கீழே திருநீறு. தொள தொளன்னு முடிச்சிட்ட கூந்தல். அதில் ஒரு மல்லிகைச்சரம். மெட்டி கிண் கிண்ணுன்னு ஒலிக்க அம்மா பூஜை சாமான்களைத் தூக்கிக்கிட்டு வரும்போது எனக்கு ஏதோ புராணத்திலிருந்து எழுந்து வர்ற கதாநாயகி போல...அதான் அந்த மங்கையர்க்கரசி, புனிதவதி இவங்களைப் போல அத்தனை கடவுள் பக்தி. அதைவிட அப்பா பக்தி! ஆமா, அப்பா வயது வந்ததும் சித்தார்த் அவராட்டமா மாறிட்டா நீ என்ன செய்வே?''

திவ்யா படுகோபமாக அண்ணன் தோளைப் பட்டெனத் தட்டினாள்.

''என்ன பண்ணுவேன்னா கேக்கிறே? எங்க வீட்ல, அப்பாபோல, பூஜை புனஸ்காரமெல்லாம், காலை வேளையில ஆடம்பரமா நடக்காது, கண்டிப்பாய்ச் சொல்லியிருக்கேன். 'மாமனாரைப் பார்த்து, நீங்க எதையும் காப்பி அடிக்கக் கூடாது'ன்னு. பூஜையைக் கூடவான்னு சித்தார்த் கேட்டார். 'ஆமாம் அப்பா செய்கிற பூஜை கடவுளுக்காக இல்லை. அவரது அந்தஸ்தை உயர்த்துற அயிட்டங்களிலே வீடு, தோட்டம், கார், மனைவி, குழந்தைங்க, நாய்கள் போல. காலை வேளையிலே வேலையாட்கள் உற்றார் உறவினர், வருவோர், போவோர் முன்னிலையிலே நடக்கும் ஒருமணி நேர நாடகம். இந்த நாடகமே நம் வாழ்க்கைக்குத் தேவையில்லைன்னு பட்டுன்னு சொல்லிட்டேன்.''

யோகேந்திரன் புன்னகைத்தான். "நீ பெரிய 'ஸ்பிட் பையர்' உன்னைக் கட்டிக்கிட்டு அவன் பாடுபடப் போறான். இந்த ரோஷம் கோபமெல்லாம் உனக்கு எங்கேயிருந்து வந்திச்சு...ம்? நம்ம அம்மா வழிவந்த பாரம்பரியத்தின் பரிசுகள்னு நினைக்கிறேன். சரி சித்தார்த் ஆரம்பத்தில் உனக்குப் பயப்படலாம். ஆனால் போகப் போக வாலை ஆட்ட ஆரம்பிச்சா..."

"ஹும்! அம்மா போலத் தலையாட்டி பொம்மையா இருப்பேனா? அம்மா அந்தக் காலத்து ஆசாமி. திவ்யா இந்தக் காலத்துப் பொண்ணு. மறக்காதே. 'நீயுமாச்சு, உன் அந்தஸ்து, பணம் காசுமாச்சு'ன்னு உதறிவிட்டு என் பெட்டியைத் தூக்கிட்டு வந்துடுவேன்."

"கல்யாணத்துக்கு முந்தியே டைவர்ஸைப் பத்தி யோசிக்கிறியே. நீ பெரிய கிராதகிதான்!" கேலி செய்தான் அண்ணன்.

"உனக்கு வரப்போறவ மட்டும் எப்படி இருப்பாள்னு நினைக்கிறே? அம்மாவைப் போல பத்தாம் பசலியை எதிர்பார்த்தா நீயும் கணேசருக்குத் துணையா கோவில்ல போய் உட்கார்ந்துக்கணும். இந்தக் காலத்துப் பெண்களை முதல்லே புரிஞ்சுக்க."

"போதும் போதும், ஆண்கள் காலில் போட்டு நசுக்க முடியாது. பதிலுக்கு பதிலுன்னு 'கராத்தே' ஆடி விடு வாங்கன்னு சொல்றே நல்லாவே புரியுது"

"பின்னே பேசாமே வாயைக் கிளறாமே வண்டியை விடு. நாம மூணுபேரும் காஞ்சிபுரம் போகும்போது பேசி முடிச்சதைச் செயல்படுத்த முயலு. போதும்" அதிகாரமாகக் கூறினாள் தங்கை.

'யெஸ்டர் டே வென் ஐ வாஸ் எங்க்'—சார்ல்ஸ் அஸனூவாவின் பாடலைச் சீட்டியடித்தபடி வண்டியைச் சீராக ஓட்டிக்கொண்டு சென்றான் அவன்.

# 2

வீட்டைப் புதுப்பித்தபோது திவ்யா பிடிவாதமாகத் தனக்கு இந்த அறையைக் கொடுக்க வேண்டும் என்று தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தாள்.

பணத்தின் கஷ்டத்தையே அவள் பிறந்தது முதல் அறிந்தவள் அல்ல. தோட்டத்தைப் பார்த்த ஜன்னல்கள் ஒவ்வொன்றிலும் விலையுயர்ந்த திரைச்சீலைகள் உச்சியிலிருந்து தரையைத் தொட்டபடி தொங்கின. நுரை ரப்பர் மெத்தை படுக்கை எதிரே தெரிந்த சுவரில் அவள் தேர்ந்தெடுத்த சித்திரம், பிரபலமான ஓவியரின் ராஜஸ்தானத்துப் பெண்ணின் அழகு வடிவம். எத்தனையோ தடவை கண் கொட்டாது பார்த்து மகிழ்ந்து முடிவில் அதை அவள் அந்தக் கடையிலிருந்து வாங்கி மாட்டியிருந்தாள்.

"ஏதாவது சாமி படத்தை மாட்டி இருக்கக் கூடாதா? காலையில் எழுந்திருச்சா..." அம்மா சொல்லிப் பார்த்தாள். அவள் கேட்கவில்லை. பெற்றோர்கள் சொல்வதைச் சட்டென ஒப்புக்கொள்ளும் மட்டிப் பெண் இல்லை அவள். அவளுக்கே என்று உருவாகியுள்ள அந்தத் தனித்தன்மையை அவள் யாருக்காகவும் இழக்க விரும்பவில்லை. உடை, உணவு, ரஸனை எல்லாவற்றிலுமே அவள் தனக்கு என்று சிலவற்றை விரும்பினாள். பிறர் புகுந்து குட்டை குழப்புவதை அறவே வெறுத்தாள்.

தலைமாட்டிலிருந்த அண்ணாசாலை புத்தகக் கடையில் வாங்கிய சில புதுப் புத்தகங்களை எடுத்தாள். 'தி பெஸ்ட் ஆஃப் பிளாண்டி—' டாக்வுட் தம்பதியாரின் வேடிக்கையான வாழ்க்கையைச் சுவைபடச் சித்தரித்தது. படித்துவிட்டுச் சிரிக்க வேண்டும் என்றுதான் வாங்கியிருந்தாள்.

பக்கங்களைப் புரட்டினாள். சிரிப்பு வந்தால்தானே? மனம் எரிமலையாக கொதித்தது. சிரிப்பு எங்கிருந்து வரும்? அடுத்ததாக ராபின் குக் எழுதிய 'கோமா'வைக் கையில் எடுத்தாள். ஊஹூம்.

தோழி ஊர்வசி இரவல் தந்த ஆர்தர் ஹெய்லியின் 'ஓவர் லோட்' என்பதைப் புரட்டினாள்.

"சும்மா திரில்னா திரில்! கீழேயே வைக்கமாட்டே, அப்படி ஒரு திரில்'' தோழி எச்சரித்திருந்தாள்.

அலுப்புடன் கீழே படுக்கையின் அடியில் அதையும் வைத்துவிட்டு விளக்கை அணைத்தாள். நெஞ்சை அழுந் திக் கொண்டிருந்த அந்த விஷயத்திற்கு முன் பிளாண்டி யின் கோமாளித்தனமோ, ஹெய்லியின் திரில்லரோ ஒன்றுமே செய்ய முடியவில்லையே!

அடிக்கடி மூதுகுப் பிடிப்பு வந்து அவதிப்படுவானேன் என்று அவளே தன் அறைக்கு ஏ. சி. தேவையில்லை என்றுதான் தீர்மானித்திருந்தாள். திறந்து வைக்கப்பட்ட ஜன்னல் வழியே சம்பங்கிப் பூக்களின் மணம் கும்மென்று வீசியது. படுக்கையில் புரண்டாள் அந்தப் பெண் ரஸிகா கூடத் தலை நிறையச் சம்பங்கிப் பூவுடன் வகுப்புக்கு வந்த நினைவு. உடனடியாகச்சிந்தனைகள்—முதல் நாள் விஷயத்திற்கு தாவின.

அவள் அந்தப் பெண்கள் கல்லூரியில் பி.ஏ. இறுதி ஆண்டில் படித்துக் கொண்டிருந்தாள். ரஸிகா முதல் ஆண்டு மாணவி. வெளியூரிலிருந்து வந்தவள். தினமும் ஒரு அலங்காரத்திலே...ஒரு சிவப்பு பியட்டிலே வந்து இறங்கிய அவளை எல்லாப் பெண்களும் கவனிக்கத்தான் செய்தனர்.

கல்லூரி திறந்த முதல் நாளே சாப்பாட்டறையில் எவர் சில்வர் டிபன் பாக்ஸைத் திறந்து, ''ஹா பரோட்டா சப்ஜி!'' உரத்த குரலில் அதிசயமாக ஆர்ப்பரித்த அவளை வேடிக்கையாக நிமிர்ந்து பார்த்தாள்.

''எங்கேயாவது பட்டிக்காட்டிலிருந்து வந்திருக்கும்... அழுத்தலாக நடந்து கொள்ளத் தெரியாத இடியட்.'' என்றுதான், அவள், சர்மிளாவைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டினாள்.



பிறகுதான் விஷயமே தெரிந்தது. ரஸிகா...நகரத்தில் மிகவும் பிரபலமாகிக் கொண்டு வந்த பம்பாய் நாட்டிய சகோதரிகளில் இளையவள். அம்ருதா மூத்தவள். அம்மா வுடன் அவர்கள் மூவரும் ஊர்வசியின் வீட்டுக்கெதிரே சில மாதங்களுக்கு முன்னர்தான் குடி வந்திருக்கின்றனர். அப்போது சற்று அசட்டையாகவே அந்தச் செய்தியை ஒதுக்கி விட்டிருந்தாள்.

பணம், பங்களா, நகைகள், உல்லாச வாழ்வு என்று நீந்தி வளர்ந்தவள். மற்ற சில பெண்களைப் போல ரஸிகாவின் காதணியையோ, ஃபாரின் நைலானையோ கண் கொட்டாது பார்த்து ஏங்கவில்லை.

உண்மையைச் சொல்லப் போனால் ஆரம்பத்திலி ருந்தே அவளுக்கு ரஸிகா மீது தாங்கொணாத வெறுப்பு. பெண்களுக்குத் தனியாக உணரும் சக்தி ஒன்று உண்டு என்பார்கள் உளவியல் நிபுணர்கள். எத்தனை உண்மை! முதலிலிருந்தே அவளை அறியாமல் ஏற்பட்ட அந்த வெறுப்புக்கு ஓர் ஆதாரம் இருந்திருக்கிறதே!

படுக்கை மீது மீண்டும் அவள் புரண்டாள். நிலையத் தில் புத்தகக் கடையில் ஏதோ வாங்குவது போல போக்குக் காட்டிக் கொண்டு நின்ற அந்த நீலப்புடவைக்காரி அவள் நினைவில் வந்து மோதினாள்.

பளபளவென்ற ஒப்பனையில் ஜொலித்த உடல், உயர்ந்த கொண்டை, அதிலே ஒரு வெள்ளை ரோஜா; சங்கர் கழுத்திலே கனமான சங்கிலி. புடவை மீது பட்டும் படாததுமாக நெஞ்சுக் குழியோடு சல்லாபித்த ஒரு வைர டாலர் அவள் அப்புறமும் இப்புறமும் திரும்பும் போது பளிச்சிட்டது. அத்தோடு போட்டியிட்ட சாயம் தீட்டிய உதட்டின் புன்னகை, ஓயாத அலைபோல் துறுதுறுத்த கண்கள், அப்பா பக்கம் திரும்பிய போது நெஞ்சையே தாக்கி விட்டது போன்ற பார்வை...

''பீளடி ராஸ்கல்...'' தலையணை மீது முஷ்டியால் ஓங்கிக் குத்தினாள். நெஞ்சை அடைத்த அழுகையை நிறுத்த அவளால் முடியவில்லை.

'அப்பா எங்கள் புனிதமான, கபடமற்ற தாயாருக்கு ஏன் இப்படி துரோகம் செய்தீங்கஅப்பா?' என ஓவென்று அடுத்த அறையில் படுத்துறங்கும் அவர் காதுபடக் கத்த வேண்டும் போன்ற ஆத்திரத்தில் குமுறினாள்.

முதல் நாள் பிற்பகல். கல்லூரி சாப்பாட்டறையில் அவளும் ஊர்வசியும் வந்து உட்கார்ந்தனர்.

இருவரும் லோயர் கே.ஜி.யிலிருந்து ஒன்றாகப் படிக்க ஆரம்பித்து நெருங்கிப் பழகத்தொடங்கிய இணைபிரியாத் தோழிகள். பி.ஏ.யில் கூட இருவரும் எக்னாமிக்ஸையே பாடமாக எடுத்துக் கொண்டார்கள். இருவருக்கும் ஆங்கிலப் பாப் சங்கீதம் பிடிக்கும். மில்ஸ் அண்ட் பூன்ஸ் புத்தகங்களை விழுந்து விழுந்து படிப்பார்கள். 'ஈவ்லின் ஆண்டனீ'யை ரசிப்பார்கள். அரசியலை அலசுவார்கள். பரதநாட்டியத்தை விமரிசிப்பார்கள். இருவருக்கும் சாப்பாடு வகைகள், சில சினிமாப் படங்கள் என்று எண்ணங்கள் ஒன்றாகிப்போன தோழமை. ஊரில் கேட்ட சில கதைகளை ஒருவருக்கொருவர் பறிமாறிக் கொள்ளவும் சளைத்தவர்கள் இல்லை.

ஊர்வசி மாநிறம். ஆனால் களையான முகம். வெட்டித் தெரித்தாற்போன்ற பேச்சு. அவளது தந்தை மின்விசைப் பொருள் நிறுவனம் ஒன்றில் வேலை பார்த்து வந்தார். அநேக நாட்கள் அப்பாவின் ஸ்கூட்டர் பின்னால் ஏறிக் கொண்டுதான் கல்லூரிக்கு வருவாள். சில சமயம் பஸ்ஸிலே வருவதுண்டு. பகல் உணவுக்குக் கல்லூரி கான்டீனை நம்பியிருப்பவள். ஆனால் பி.ஏ. படிக்கத் தொடங்கிய முதல் திவ்யாவின் சாப்பாட்டை அவள் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்பது தோழியின் அன்புக் கட்டளை.



படிக்கிற குழந்தை என்று கருணா, மகளுக்குச் சூடு மாறாத எவர்சில்வர் புட் காரியரில் சாப்பாட்டை நிரப்பி வேலைக்காரப் பையனிடம் கொடுத்து அனுப்புவது வழக்கம்.

அன்று அம்மா அவளுக்குப் பிடித்தமான கதம்ப சாதமும் தயிர்ப் பச்சடியும் புடலங்காய்ப் பொரியலும் கட்டிக் கொடுத்தனுப்பியிருந்தாள். அடி டப்பாவில் மகளின் ஆசைக்குக் கொஞ்சம் காசி அல்வா.

காரியரைத் திறந்து சம்புடங்களைக் கீழே இறக்கி வைக்குமுன் அறை முழுவதும் நெய் மணம் கமாளித்தது.

''ஏய்! கொஞ்சமா சாதத்தை வை. என்ன இது அல்வாவா? நெய்யிலே மிதக்கிறதே. உங்கவீட்டுச் சமையல் ஆளுக்கு ரொம்பத் தாராளக் கை. நீயும் தாராளமாகி விடாதே. அப்புறம் நம்ப ஃபிகர் போயிடும். போதும் போதும். இடுப்புக்கு மேல் இந்தியா டயர்கள் வந்துடும்னு எனக்கு ரொம்ப பயம்.'' பரிகாசமாகப் பேசிக் கொண்டே சாதத்தை அள்ளி வாயில் போட்டுக் கொண்டாள். ''ம்!... ஜோக்கா இருக்கு...சமையல்லே அந்த ஆள் ரொம்ப ரொம்பக் கெட்டிதான்'' நற்சான்று வழங்கியபடி ஊர்வசி மகிழ்ச்சியுடன் திரும்பியபோது ரஸிகா உள்ளே வந்து கொண்டிருந்தாள். தோழியிடம் தலையைத் தாழ்த்தித் தாழ்ந்த குரலில் சொன்னாள் அவள்.

''ரஸிகாவை நான் கூப்பிட்டுப் பேசறேன். நீ அவளை கொஞ்சம் உற்றுக் கவனி.'' எச்சரித்தாள் ஊர்வசி.

என்னவாக இருக்கும்? ஊகிக்க முடியாத திவ்யாவின் தலை ஆவலில் வெடித்தது.

''ரஸிகா, இங்கே வாம்மா.'' கொஞ்சிக் குழைந்தாள் ஊர்வசி.

பெரிய வகுப்பு மாணவி தன்னைச் சமமாக நேச பாவத்துடன் கூப்பிடுகிறாளே என்ற மகிழ்ச்சி ரஸிகா

வுக்கு பற்கள் அனைத்தையும் காட்டியபடி அருகில் விரைவாக வந்து நின்றாள்.

“இந்த பிரேஸ்லேட் ரொம்ப அழகா இருக்கே. எங்கே வாங்கினது?” அவள் கரத்தைப் பிடித்து ஊர்வசி அந்தக் கை அணியை அழகு பார்க்கத் தொடங்கினாள்.

கூடியிருந்த சில மாணவிகள் ஓடிவந்து ரஸிகாவை மொய்த்துக் கொண்டனர்.

“சைனீஸ் ஜேட் பதித்த பிரேஸ்லெட்... ஃபாரின் மேக் போல இருக்கே...” வியப்புடன் கூவினாள் ஒருத்தி.

ரஸிகா பெருமையுடன் முகவாயை நிமிர்த்திக் கொண்டாள். “இது என்னுடையதில்லை. அக்காவுடையது. ஒரு நாள்— இன்னைக்கு இரவலாக அவங்க கிட்டேயிருந்து கேட்டு வாங்கிப் போட்டுக்கொண்டேன். தொலைச்சுடாதே விலை உயர்ந்த பொருள்னு அம்மா கூடச் சத்தம் போட்டாங்க...” செல்லமாகச் சிரித்தாள் அவள்.

“உன் அக்கா இதை எந்தக் கடையிலே வாங்கினாங்க? ரொம்ப அழகா இருக்கே!” ஊர்வசி விடாது துளைத்தெடுத்தாள்.

திவ்யாவுக்குக் கதம்ப சாதம் தொண்டையில் கசந்தது. அந்த நகையை எங்கோ பார்த்திருக்கிறோம் என்று உள் மனத்திலே ஒரு உறுத்தல். திடீரென்று மூளையில் பொறி தட்டியது. குப்பென்று உடல் முழுவதும் அனல் பரவியது போன்ற ஒரு எரிச்சல். “அக்காவுக்கு அவளது விசிறி ஒருத்தர் கொடுத்த பரிசு.” சுருக்கமாகப் பதிலளித்து விட்டு ரஸிகா அங்கிருந்து அப்பால் மறைந்தாள்.

“அம்ருதா ஸிஸ்டர்ஸ் பெரிய நடனமணிகளாச்சே. அதுவும் அம்ருதாவின் குச்சுப்பிடி நடனம் ரொம்பப் பிரசித்தமாச்சே. அவளுக்கு எத்தனை விசிறிகள் இருக்கிறாங்க தெரியுமா?” வியப்புடன் சொல்லி விட்டுக் கையைக் கழுவ எழுந்து சென்றாள் ஒரு மாணவி.



சாப்பாட்டை விரைவில் முடித்துக் கொண்டு தோழிகள் இருவரும் ஸயன்ஸ் லாபரட்டரி அருகே இருந்த அந்தப் பெரிய வாதாம் மரத்தின் நிழலில் புல் தரைமீது வந்து உட்கார்ந்து கொண்டனர். வகுப்பு துவங்க இன்னும் கொஞ்ச நேரம் இருந்தது.

“குச்சுப்பிடி நடனத்தில் மட்டும் அம்ருதா பிரசித்தின்னு நினைக்காதே. அவள் நண்டுப் பிடியிலும் கெட்டிக்காரி. எவனாவது அகப்பட்டா ஒரே பிடி—பிடிச்சுக்கிடுறாள்—” ஊர்வசி வெறுப்பாகப் பேசினாள்.

“என்ன சொல்றே?” திகைத்துப் போனாள் திவ்யா. அவள் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. அவளுள் ஏற்பட்ட சந்தேகத்துக்கு விளக்கம் சொல்லப் போகிறாளா? அடக் கடவுளே!

“இவங்க எங்க வீட்டுக்கு எதிரே குடியிருக்காங்கன்னு முன்னமே சொல்லியிருக்கேன். நினைவிருக்கா? இவங்க நடத்தற வாழ்க்கையைப் பத்தி ஓரளவு புரிஞ்சு கொண்டு விட்டேன். சாயங்காலம் ஆனதும் குழந்தைகள் நாங்க யாரும் வாசல் பக்கம் வந்து உட்காரக் கூடாதுன்னு எங்கப்பா கண்டிப்பா உத்தரவு போட்டிருக்கார்.”

திவ்யாவுக்கு மூச்சே அடைப்பது போன்றதொரு நடுக்கம். “ஏன்? உங்கப்பாவுக்கு நடனம் என்றாலே பிடிக்காதா?”

“அம்ருதாவின் நடத்தைதான் பிடிக்கலை. இவங்க வீட்டுக்கு வரவங்களைப் பத்தி அப்பாவுக்குத் தப்பான அபிப்பிராயம்.”

“அப்படியா? அந்தப் பெண் ரஸிகாவைப் பார்த்தால் கபடமேயில்லாத வெகுளி போல இருக்காளே?”

“ரஸிகாவைப் பத்தி நான் சொல்லலை. அவ அக்கா அம்ருதா பெரிய ஆசாமி. நான்கூட யாருக்கும் தெரியாம சாமான் அறை ஜன்னல் வழியே தினமும் பார்த்துட்டுத் தான் வரேன். போன வருஷம் முழுவதும் இவங்க வீட்டுக்கு

ஒரு தொங்கு மீசை மோட்டார் சைக்கிளில் வருவதுண்டு. சமீப காலத்தில் இவன் அந்தஸ்து உயர்ந்து விட்டிருக்கு—''

''என்ன குழப்பறே...? விளக்கமா சொல்லேன்.''

''நீலவண்ண புத்தம்புது அம்பாஸிடர்...பல நாட்கள் ஏழு மணி அளவுக்கு வந்து இவளை ஏத்திக்கிட்டு போகிறது—''

திவ்யாவுக்கு மூச்சு முட்டிவிட்ட நிலையில் என்னவோ நெஞ்சை அடைத்தது. உதட்டோரத்தில் குப்பென்று அரும்பிய வியர்வைத் துளிகளைப் புறங்கையால் சட்டென்று துடைத்துக் கொண்டாள். ''காருக்குள்ளே இருந்த ஆளைப் பார்த்திருக்கியா?'' தயக்கத்துடன் கேட்டாள்.

''காரை ஓட்டிக் கொண்டு வருகிறவன் முகம் முழுவதும் தெரிந்ததில்லை. பக்கவாட்டிலே லேசாகப் பார்த்தது. நடுத்தர வயது ஆசாமின்னு என் கணிப்பு. ஆனால் காரின் நம்பரை மட்டும் பார்த்து வச்சுகிட்டேன்.''

''பெரிய துப்பறியும் புலி.'' திவ்யா சிரிக்க முயன்றாள்.

''கார் நம்பர் டி.எம்.எஸ்...அது எங்கேயாவது ரோட்டில் பார்க் பண்ணியிருந்தால் கூட எனக்குத் தெரிஞ்சுடும். இங்கே எங்கேயோ தான் அம்ருதாவின் பாய்பிரண்ட் இருக்கான்னு கண்டுபிடிச்சுடுவேன்.'' கலகலவென்று சிரித்தாள்.

''நீ ஏன் போன டெஸ்ட்டில் கோட் அடிச்சேன்னு இப்பத்தான் தெரிகிறது. எதிர்வீட்டைத் துப்புத் துலக்குவதில் பொழுதைக் கழிச்சிருக்கே. சரி...சரி எழுந்திரு நேரமாச்சு.''

திவ்யா அதட்டிக் கொண்டு எழுந்தாள். அவளுக்கேற்பட்ட பரபரப்பில் கைகளும் கால்களும் தடுமாறின.



''இன்னொரு சுவாரஸ்யமான விஷயமும் கேள்விப்பட்டேன். நேத்திக்கு அந்த நீலவண்ண அம்பாஸிடர்காரன் அம்ருதாவை சினிமாவுக்கு அழைச்சிட்டு போயிருக்கான். என் தம்பி அதே சினிமாவுக்கு நைட்ஷோவுக்கு அப்பாவுக்குத் தெரியாம போயிருந்தான், அவன் வந்து சொன்னான். கார் பார்க்கில் அந்த நீல அம்பாசிடரைப் பார்த்தானாம். ஆனால் இடைவேளையின் போது அம்ருதா மட்டும் உயர் வகுப்பில் தனியே உட்கார்ந்திருந்தாளாம்.''

''ஒரு சமயம் அவ மட்டும் படம் பார்க்கக் காரைக் கொடுத்தனுப்பியிருப்பார் அந்தக் காரின் முதலாளி.''

''மக்கு. சும்மாயிரு. இது கூடப் புரியலையா? இப்படி வீட்டுக்குத் தெரியாம திருட்டுத்தனமாய்க் கிளம்பறவங்க... இடைவேளையின் போது கூட வந்தவளை அம்போன்னு தனியே விட்டுட்டு... ஏதாவது ஒரு டாய்லெட்டுக்குள்ளே போய் மறைஞ்சுக்குவாங்க. சமூகத்திலே இவங்களாம் பெரிய மனிதர்கள் அதனால் இருட்டிலேதான் துணிஞ்சு துஷ்டத்தனம் பண்ணுவாங்க. வெளிச்சத்தைக் கண்டதும் வெருண்டு ஓடி ஒளிஞ்சுக்குவாங்க—'' உரக்கச் சிரித்தாள் ஊர்வசி.

''நீ சைக்காலஜியை எடுத்துப் படிச்சிருக்க வேண்டியவள். பொருளாதாரத்தை கட்டிட்டுக் கஷ்டப்படறே—ஆகட்டும்; இனிமேல் நானும் அந்த நீல அம்பாசிடரைக் கவனிச்சுக்கிறேன். ரொம்ப சுவாரஸ்யமான தகவல் இது. தாங் - யூ - !''

வகுப்பு மணி அடிப்பது கேட்டதும் இருவரும் எழுந்தனர். அன்று அதற்குப்பின் அவளுக்கு எதிலுமே கவனம் இருக்கவில்லை. ராஜாராமின் போக்குவரத்து நிறுவனத்தில் லாரிகளைத் தவிர, கம்பெனி உபயோகத்திற்கு என்று மூன்று கார்கள் இருந்தன. அதில் ஒரு பியட்டை அண்ணன் யோகேந்திரன் தன் உபயோகத்திற்கு எடுத்துக் கொண்டு விட்டிருந்தான்.

காலையில் வேலைக்குப் போய் வர ராஜாராம் இன்னொரு பியட்டை உபயோகித்தார்.

சாதாரணமாக அவர் கம்பெனிக்கு புறப்படும் போதும் மற்ற வியாபார சம்பந்தமான காரியங்களைக் கவனிக்கப் போகும் போதும் அவர் வண்டியை ஓட்டுவதில்லை.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர்தான் தாமோதரன் அவர் நிறுவனத்தில் டிரைவராக வந்து சேர்ந்தான். வெள்ளைச் சீருடையில் டிரைவர் தாமோதரன் வண்டியை கரேஜிலிருந்து எடுத்து வாயிலில் கொண்டு வந்து நிறுத்தி விட்டுக் கதவைத் திறந்து வைத்துவிட்டு அவர் வருகைக் காகப் பவ்யமாகக் காத்து நிற்பான்.

கம்பீரமாக ராஜாராம் ஸபாரி ஸூட்டில் வெற்றிலை பாக்கை மெல்லக் குதப்பிக் கொண்டு வராந்தாவினின்று சலவைக்கல் படிகளில் இறங்கிக் காரில் ஏறி அழுத்தலாக உட்கார்ந்து கொள்வார். உலகத்தையே அசட்டையாகப் பார்க்கும் ஓர் ஏளனப் பார்வை. உல்லாசப் புன்னகை இத்யாதியுடன்... தமக்குத் தெரிந்த எதிர்பக்கத்து வானத்தையே விறைப்பாகப் பார்த்தபடி இருப்பார். கதவை மூடிவிட்டுத் தொப்பியைத் தலையில் மாட்டிக்கொண்டு அடக்க ஒடுக்கமாகத் தாமோதரன் வண்டி ஓட்டும் ஆசனத்தில் அமர்வான்.

''ம்...'' என்று லேசாக அவர் கனைத்ததும் அவன் காரைச் செலுத்தத் தொடங்குவான்.

மாலையில் வண்டியைக் கொண்டுவந்து வாசலில் நிறுத்தியதும் வேகமாக இறங்கி மறுபக்கம் ஓடிவந்து கதவைத் திறந்துவிட்டு அவர் இறங்க உபசரித்தபடி நிற்பான். பின்னர் அவரது ப்ரீப் கேஸைத் தூக்கிக் கொண்டு நாய்க்குட்டிபோல் பின்னால் ஓடிவந்து முன்னால் மேஜைமீது வைத்துவிட்டுக் கும்பிட்டு விடை பெற்றுக் கொள்வான்.



இப்படி தினசரி அவர் வீட்டில் ஒரு தர்பார் நடக்கும். வீட்டவர்கள் வெளியே போகவேண்டுமானால் அப்பாவுக்குப் போன் செய்தால் வண்டியோடு தாமோதரனை அனுப்பி வைப்பார். வண்டியை ஒரு பக்கம் நிறுத்திவிட்டு பென்ஸில்தான் வீட்டு அம்மாளையும், பெண்ணையும் அவன் கூட்டிப் போக வேண்டும். அப்படி அப்பாவின் ஒரு உத்தரவு. ஒரு சிலசமயம் கம்பெனியிலிருந்து ராஜாராம் திரும்பி வரும்போது தாமோதரன் அந்த நீலவண்ண அம்பாசிடரை ஓட்டிக்கொண்டு வருவதுண்டு.

டிரைவரை அனுப்பிவிட்டு இருட்டியபின்பு ஏதோ சொந்தக் காரியமாக அப்பா தாமே அதை ஓட்டிக் கொண்டு வெளியே செல்வது வழக்கம்.

அப்பா எங்கே போகிறார் என்று அறிய அவளுக்குள் ஓர் ஆவல் எப்பொழுதும் இருந்ததுண்டு.

அம்மாவுக்கே சொல்லாமல் புறப்பட்டுப் போய் விடுவது அவர் வழக்கம். இப்போதல்லவா புரிகிறது உண்மை! நீலவண்ண அம்பாசிடரை தாமே ஓட்டிக் கொண்டு அவர் அம்ருதாவின் வீட்டுக்குப் போய் வந்து கொண்டிருக்கிறார்.

அம்ருதா இப்போது கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கும் பாய்ஃபிரண்ட் அப்பாவா? அட கர்மமே! எத்தனை காலமாக இந்தச் சங்கதி நடக்கிறது?

அவமானத்திலே குன்றிப் போனாள் அவள். அன்று வீடு திரும்பியதும் முதல் வேலையாக இதைப்பற்றி யோகேந்திரனிடம் பற்ற வைத்தாள்.

கதை முழுவதையும் கேட்டுவிட்டு அண்ணன் வெட்கத்திலே முகம் சிவந்து போனான்.

''சைனீஸ் ஜேட் இழைத்த அந்த பிரேஸ்லெட் அப்பா தான் கொடுத்தார்ன்னு நீ எப்படித் திட்டவட்டமாகச் சொல்ல முடியும்?'' குறுக்குக் கேள்வி போட்டான்.

''நாலு மாசத்துக்கு முந்தி அப்பா ஹாங்காங்வரை போய்வந்தார் இல்லையா? உனக்கு ஒரு டிஜிட்டல் கடி காரம்...அம்மாவுக்கு ஒரு பெரிய பாட்டில் செண்ட்... தமக்கு ஒரு மாமியா காமிரா...எனக்கு பிரஞ்சு ஷிபான் புடவைன்னு வாரிட்டு வந்தார் இல்லையா?''

''ஆமாம், அதைப்பத்தி இப்போ என்ன?''

''அப்பவே நான் ஒரு சின்ன ஆராய்ச்சியிலே இறங்கி யிருந்தேன். அப்பாவுடைய அறையிலே ஓரமாப் போட் டிருக்கிற காட்ரெஜ் மேஜை இழுப்பறையை ஒருநாள் அவர் பூட்ட மறந்து கிளம்பிவிட்டிருந்தார்.''

''திறந்து குடைஞ்சியாக்கும்? என் ரூம்லகூட பூந்து நீ என் சாமான்களைப் புரட்டிப் பார்க்கிறே...கவனிச்சுட்டு தான் வர்ரேன்...''

''நான் ஒண்ணு சொன்னா நீ ஒண்ணு ஆரம்பி. சும்மா வெறும் ஆவலில் இழுப்பறையைத் திறந்தபோது உள்ளே ஒரு அழகான வெல்வெட் பெட்டியைப் பார்த்தேன். எடுத் துத் திறந்தேன். அதுக்குள்ளே ஜெட் பதித்த ஒரு நேர்த்தி யான பிரேஸ்லெட் இருந்தது. கூட பில்லும் இருந்தது. ஹாங்காங் டாலரில் இருந்த பில்லை எனக்குள் கணக்குப் போட்டேன். கிட்டத்தட்ட இரண்டாயிரம் ருபாய்க்கு மதிப்பு வந்தது. அத்தோட அப்பா இங்கே அந்த நகைக்கு கஸ்டம் டியூடி வேறு கட்டியிருந்தார்னு ஒரு காகிதத்தைப் பார்த்துப் புரிஞ்சுட்டேன். இத்தனை சிரமப்பட்டு இந்த பிரேஸ்லெட்டை யாருக்கு வாங்கிட்டு வந்திருக் கார்னு எனக்கு அப்போ ரொம்ப ஆச்சரியமா இருந்தது.''

''அம்மாவுக்காக இருந்திருக்கலாம், இல்லையா?''

'முட்டாள்! அம்மா இதுமாதிரி நகைகளைப் போட் டுக்க மாட்டாங்க. எனக்குன்னு வாங்கிட்டு வந்திருந்தா என் பிறந்தநாளின்போது பரிசாகக் கொடுத்திருக்க லாமே...''



''நீ அப்படி விஷயத்துக்கு வரியா? சொல்லு... சொல்லு.''

''உனக்கு சட்டுனு எதுவுமே புரியறதில்லை. ஏன்தான் நீ இப்படி கனவு உலகத்திலே சுத்தறியோ தெரியலை. அப்பா இதை அந்த அம்ருதாவுக்குத்தான் வாங்கிட்டு வந்திருக்கார். இத்தனை காலமா அப்பாவுக்கு வெளியே இருக்கிற தொடர்பு யார்னு நாம் மண்டையை உடைச் சிட்டு இருந்தோம். இப்ப வெட்ட வெளிச்சமாய் புரிஞ் சிட்டது. அம்ருதா அப்பாவின் லேட்டஸ்ட்டு அஃபெயர். ஒரு ஆறுமாசத்துக்கு மேலே இந்தத் தொடர்பு நடக்கிறது அவளுக்கு அப்பா கொடுத்ததை அவள் தங்கை கையில் நான் பார்த்தேன்.''

''ஒரு சமயம் அம்ருதாவும் இதேபோல ஒரு நகையை மலேயாவுக்கு அவள் ஆடப்போன சமயம் வாங்கிட்டு வந்திருக்கலாம் இல்லையா?''

''எல்லாத்தையும் நான் நன்றா பார்த்து வச்சுட்டு தானே சொல்றேன். முந்தா நாள் அப்பாவுடைய மேஜை பூட்டாமல் கிடந்தது.''

''மறுபடியும் நோண்டினியா?''

''அவலோடு ஆராய்ஞ்சபோது அந்த வெல்வெட் பெட்டியைக் காணலை. இரண்டும் இரண்டும் சேர்ந்தால் நாலுன்னு புரிஞ்சுக்கக்கூட மூளையில்லையா...உனக்குத் தான் மண்டையிலே மசாலா வச்சிருக்கு. இத்தனை பெரிய வியாபாரத்தை நீ பின்னால் எப்படித்தான் சமாளிக்கப் போறியோ'' அதட்டினாள் திவ்யா.

நமுட்டுச் சிரிப்புச் சிரித்தான் அண்ணன்.

அம்ருதாவை அவன் மேடையில் சிலமுறை நடனமாடு கையில் பார்த்திருக்கிறான். ஒருநாள் கல்லூரிக்குத் தன் தங்கையை விட்டுவிட்டுப் போக அந்தச் சிவப்பு வண்டியில் வந்தபோது கவனித்திருக்கிறான். அதனால்தான் அவளை

விமான நிலையத்தில் அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. உடனடியாக யோகேந்திரனை அவன் எச்சரித்துவிட்டிருந்தான்.

பெண்ணுக்குச் சமமான வயசுடைய ஒரு இளசுடன் அப்பா தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறார். வெட்கக் கேடு என்றுதான் பிள்ளைகள் இருவரின் நெஞ்சமும் பதைத்தது.

அதற்குமேல் அன்று அவர்கள் அதிகம் அதைப்பற்றிப் பேச முடியவில்லை. மறுநாள் வெளிநாட்டுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தான் சித்தார்த். அவர்கள் வீட்டில் அன்று இரவு சம்பந்திகளுக்கும் வருங்கால மாப்பிள்ளைக்கும் விருந்து.

''அவங்கள்ளாம் வரநேரம். குளிச்சிட்டு புதுசா நல்லதா உடுத்திட்டுத் தயாரா இருக்கக் கூடாதா?'' அம்மா கீழே இருந்தபடி பலத்த குரலில் கேட்டாள்.

அப்பாவின் பென்ஸ் தோட்டத்திற்குள் தவழ்ந்தோடி வருவதையும் கவனித்துவிட்டாள் திவ்யா.

''விஷயத்தைப் பின்னால் தொடருவோம். இப் போதைக்கு இப்படியே இருக்கட்டும்.'' கூறிவிட்டுப் பர பரப்பாகத் தன் அறைக்குள் மறைந்துவிட்டான்.

மறுநாள் காலை. அவள் கல்லூரிக்குப் போக வில்லை.

சித்தார்த் அவளை வெளியே அழைத்துப் போக விரும்பினான். அப்பா தடை சொல்லவில்லை. ''ஒரு நாள் லீவு எடுத்துக்கோ, தலையா முழுகிவிடும்...''

மெல்ல அம்மாவிடம் பேச்சைத் துவங்க வேண்டும் என்ற ஆதங்கம் அவளுக்கு. அதனால்தான் வீட்டிலே தங்க அன்று ஒப்புக்கொண்டிருந்தாள்.

விடிந்ததும் பல் துலக்கிவிட்டுக் கீழே காப்பி சாப்பிட வந்தவளிடம் அம்மா சுகுணா சொன்னாள்.



''உன் வயதில் கல்யாணமாகிக் குடித்தனம் செய்ய வந்துவிட்டேன். நீ வீட்டு வேலை ஒண்ணுமே கத்துக்காம ஊரைச் சுத்தறே...பின்னாலே நீதான் அவதிப்படுவே...'' என்று ஆரம்பித்து விட்டாள்.

காப்பியைக் குடித்துக் கொண்டே அவள் அம்மாவை ஓரக் கண்களால் பார்த்தாள்.

வழக்கம் போல் அம்மா ஸ்நானத்தை முடித்துச் சுத்தமாக உடுத்திக் கொண்டு புராண காலத்துப் புனித வதியாகத் தோட்டத்திற்குள் மலர்களைப் பறிக்கக் கூடையுடன் கிளம்பிக் கொண்டிருந்தாள்.

''மாடிக் குளியலறை அழுக்குப் பெட்டியில் துணி குவிஞ்சுக் கிடக்கு. எடுத்து வேலைக்காரி கிட்ட தோய்க்கப் போடக் கூடாதா? ஒரு நாள் அம்மாவுக்கு ஏதாச்சும் உதவினா தேஞ்சா போயிடுவே...'' முணு முணுத்தபடி சுகுணா தோட்டத்திற்குள் போய் விட்டாள்.

குளித்து முடித்து விட்டு அப்பா ஊஞ்சல் மீது உட்கார்ந்தபடி காலைப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தார்.

பட்டு வேட்டியும், மேல் துண்டும், நெற்றியில் பட்டை யாக விபூதியுமாக அவர் சிவப்பழமாகத்தான் காட்சியளித் தார். காலையில் பூஜையை முடித்து விட்டுத்தான் காப்பி யைக் கையால் தொடுவார். அத்தனைக் கட்டுப்பாடு. ''மாலையில் சூரியன் மங்கத் தொடங்கியதும் கட்டுப்பாடு களும் அத்துடன் மறைந்து விடுகின்றனவே...'' தனக்குள் எண்ணிச் சிரித்தபடி அப்பாவைப் பாராததுபோல் தாண் டிக்கொண்டு அந்தப் பெரிய குளியலறைக்குள் புகுந்தாள்.

அழுக்குத் துணிப் பெட்டியைத் திறந்து மேலே கிடந்த அப்பாவின் சட்டைகளை வெளியே எடுத்துப் போட்டாள். பளிச்சென்று ஒரு நினைவு. மூன்று தினங்களுக்கு முன்னர்

ஊர்வசி சொன்ன கதைதான் — அன்று அப்பா வெளிந
பச்சை கட்டம் போட்ட டெரி காட் ஷர்ட் அணிந்து
கொண்டு வாசலில் வந்து நின்றபடி கடிகாரத்தையே பல
முறை பார்த்தது அவள் நினைவுக்கு வந்தது.

பரபரப்பாக அந்தக் துணிக் குவியலில் அந்த ஷர்ட்
டைத் தேடி எடுத்தாள். அவசரமாகக் கையை விட்டு அதன்
பையைத் துழாவினாள். அவளது சந்தேகமும் சிரமமும்
வீணாகவில்லை. சட்டைப் பைகுள் இரவுக் காட்சிக்கு
போய் வந்த அறிகுறியாக இரண்டு சினிமா டிக்கட்டுகளின்
கிழித்த பகுதிகள் இருந்தன.

முகம் சிவக்க - நெஞ்சு பதற, கையில் அவைகளைப்
பத்திரமாக வைத்துக்கொண்டு சிரித்தாள்.

நேரே எடுத்துக் கொண்டு போய் அம்மாவிடம்
கொடுத்தால்...?

ஏன் அப்பாவையே பளிச்சென்று கேட்டு விட்டால்?

"கருணா!" அப்பாவின் இடியோசை போன்ற
அதட்டல் மாடி ஜன்னல் அருகே முழங்கியது.

பாவம். அவசரமாக மலர்களைப் பறித்துக் கூடையில்
நிரப்பிக் கொண்டிருந்த அம்மா பதறிப் போய் விட்டாள்.

"ஒரே நிமிஷம். வந்துட்டேங்க பூஜையறையில் எ
லாம் தயாரா இருக்கு..." பதில் கொடுத்தாள்.

"எட்டு மணிக்கு எனக்கு வக்கீல்கிட்ட ஒரு அப்ப
யிண்ட்மெண்ட் இருக்குன்னு சொன்னேனே... மற
திட்டியா?" அப்பாவின் மிரட்டல்.

திவ்யாவும் ஜன்னல் வழியே மெல்ல எட்டிப் பார்
தாள். அம்மா புடவைத் தலைப்பைச் சரி செய்து கொண்
பரக்கப் பரக்க உள்ளே ஓடி வருவதைக் கண்டாள். பட்
வேட்டி சரசரக்க அப்பா கீழே விரைந்து கொண்டிருந்தா

காலையில் கடவுளுக்கு இத்தனை ஆர்ப்பாட்டத்துட
வழிபாடு. மாலையில்... பற்களைக் கடித்துக் கொண்



அந்த டிக்கட் பகுதிகளை இடுப்பில் செருகிக் கொண்டாள் திவ்யா.

ராஜாராம் புறப்பட்டுச் சென்றதும் அவள் குளித்து வேறு உடுத்திக் கொண்டு காலை ஒன்பது மணி அளவில் காப்பி பலகாரம் சாப்பிடக் கீழே வந்தாள்.

"இத்தனை நாழியா? எல்லாம் ஆறி அவலாப் போகுது -ம்" கடுகடுத்த கருணா, மகளுக்குத் தட்டில் இட்டிலியைப் பரிமாறி, சட்டினியை வார்த்தாள்.

"கொஞ்சம் நெய் போடறேன், சாம்பாரோட சேர்த்துக்கோ. ராத்திரி பலதடவை நீ இருமினது எனக்குக் கேட்டுது. ஐஸ்கிரீம்; கூல்டிரிங்குனு சதாபிரிஜ்ஜுக்குள்ளே நீயும் உன் அண்ணனும் தலையை விட்டுக் கொண்டு அலைகிறீங்க. தொண்டை கட்டிக்கும், இருமும். உடம்புக்கு ஏதாச்சும் வந்தாலும் வரலாம். வயசாச்சே ஒழியத் தன்னைத் தானே கவனிச்சுக்கத் தெரியாத விளையாட்டுப் பிள்ளை." அம்மா செல்லமாகக் கடிந்து கொண்டு காதோரத்திலே பறந்து விளையாடிய அவளது கூந்தலைத் தள்ளி விட்டுக் கன்னத்தை வருடினாள்.

திவ்யாவின் நெஞ்சு பரிவில் விம்மியது.

'அப்பா மீது இப்படி உண்மையான பாசத்தைக் கொட்டறீங்களே அம்மா. அவர் உங்களுக்கு எத்தனை பெரிய துரோகம் செய்திட்டு இருக்கார் தெரியுமா?' கத்திக் கேட்க வேண்டும் போன்ற துக்கம். கண் இமைகளை நீர்த்துளிகள் சுட்டன.

"அம்மா! அப்பா ஷர்ட்டிலே இந்த சினிமா டிக்கெட்டுகளைப் பார்த்தேன். முந்தாநாள் ராத்திரி அப்பா யாரோட சினிமாவுக்குப் போனார்?"

துணிவுடன் முடிவில் அவள் கேட்டு விட்டாள்.

ஒரு நிமிஷம் கருணா அயர்ந்தவன் போல் நின்றாள். நெய்யை இட்டிலி மீது வார்த்துக் கொண்டிருந்த அவளது

கை நடுங்குவதை மகள் பார்த்தாள். ''வியாபார சம்பந்தமாகக் கல்கத்தாவிலிருந்து ஒரு வாடிக்கைக்காரரை அப்பா சந்திக்க வேண்டியிருந்தது. பேசி முடிச்சதும் அப்படியே சினிமாவுக்குப் போகலாம்னு அவர் சொன்னதை அப்பாவால் மறுக்க முடியலை. அதனாலே அந்த வாடிக்கைக்காரரோட சினிமாவுக்குப் போயிருந்தார்... ஏன் கேட்கிறே?''

வியப்புடன் திவ்யா அம்மாவைப் பார்த்தாள்.

அப்பா இப்படி ஒரு கதையைச் சொல்லி அம்மாவை நம்ப வைத்திருக்கிறாரா...அல்லது...கணவனே கண்கண்ட தெய்வம் என்கிற கொள்கையில் ஊறிப்போன அம்மா புருஷனை விட்டுக் கொடுக்க மனம் இல்லாமல் பொய்யாக இப்படி ஒரு கதையைக் கற்பிக்கிறாங்களா?

''சாப்பிடம்மா, இன்னொரு இட்டிலி போட்டுக்கோ. உடம்பு கயிறாகப் போகுது...ஃபிகராம்...ஃபிகர்...இந்தக் காலத்துப் பெண்களுக்கு...'' உபசரித்தபடியே அம்மா ஏதேதோ பேசிக்கொண்டு போனாள்.

திவ்யாவுக்கு அழுகை பொத்துக்கொண்டு வந்தது. ''வேண்டாம்மா. பசிக்கலை. அப்புறம் சித்தார்த் வீட்டிலே வேறெ எனக்குப் பகல் சாப்பாடு. என்னால் இப்படித்தின்ன முடியாது'' கை கழுவ விருக்கென்று எழுந்து சென்றவள், கன்னத்திலே கோடிட்ட கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

இவையனைத்தையும் எண்ணியபடி படுக்கைமீது புரண்டாள். அடுத்த அறையிலிருந்து கணீரென்று அப்பாவின் குரல் இரவில் அந்த வேளையில் கேட்டது. எழுந்து ஓடிச்சென்று ஜன்னல் அருகே நின்று உற்றுக் கேட்டாள். ''நாளைக்கு சாயங்காலம் எனக்கு போர்ட்மீட்டிங் இருக்கு. உனக்குக் கடைக்கு போகணும்னு சொன்னியே. குழந்தையைக் கூட்டிட்டு பென்னிலே போ. தாமோதரனை அனுப்பறேன். நான் அம்பாசிடரை ஓட்டிட்டு மீட்டிங் போயிட்டு



ஒரு சிநேகிதனோட தாஜ்ல சாப்பிட்டுட்டு நாழி கழிச்சுத்தான் வருவேன்.. இப்பவே சொல்லிட்டேன்''

''சரிங்க—'' அம்மாவின் மெல்லிய குரல்.

பொத்தென்று படுக்கை மீது உட்கார்ந்து கொண்டாள் திவ்யா.

'அப்பா! எனக்குத் தெரியும்... போர்டு மீட்டிங் இல்லை அது. கேர்ள் பிரண்டின் வீட்டில்...யாருக்குக் காது குத்தறீங்க? கடைக்குப் போன்னு காரையும் காசையும் கொடுத்து அம்மாவை ஏமாத்தலாம். இந்தத் திவ்யாவை ஏமாத்த முடியாது...ஒரு நாளைக்கு இதுக்கெல்லாம் நான் ஒரு வழி வைக்கிறேன்—எங்கம்மா மேலே ஆணை.' தனக்குள்ளே சொல்லிக்கொண்டு விம்மியபடி அவள் படுக்கை மீது குப்புற விழுந்தாள்.

## 3

அன்று சனிக்கிழமை. காலையில் ஆரம்பித்த மழை ஓயவே இல்லை.

இடை இடையே பலத்த சுழற்காற்று. இரவு வெகு நேரமாகியும் காருடன் வெளியே சென்ற கணவனைக் காணவில்லை. இது கருணாவுக்குப் புதியதொரு அனுபவமில்லை. இருபத்திரண்டு வருஷ மண வாழ்க்கையில் எத்தனையோ இரவுகள் கணவனுக்காக அவள் வெகு நேரம் காத்திருந்து பழக்கப்பட்டவள். ஆனாலும் சில புதிய கவலைகள் அவளுக்கு ஏற்பட்டிருந்தன. முன் போல் இல்லாமல் இப்போது சாலைகளில் போக்குவரத்து அதிகமாகிவிட்டிருந்தது. பார்ட்டி, டின்னர் என்று முன்போல் கண் விழித்துக் களியாட்டங்களில் திளைத்துக் கொண்டிருக்க ராஜாராமுக்கு என்ன இளம் வயதா?

கொஞ்ச காலமாக இரவில் பார்வைக் கோளாறினால் வண்டியை ஓட்ட சிரமப்படுவது அவளுக்குத் தெரிந்த

சங்கதிதானே? சனிக்கிழமைகளில் நண்பர்களுடன் சீட்டாடி விட்டு அதிகம் குடித்துவிடுவதும் உண்டே. மழை வேறு ஓயாது கொட்டுகிறதே—அமைதியின்றி அவள் மேலும் கீழும் நடந்து கொண்டிருந்தாள்.

இரவு பதினொரு மணி அளவில்தான் அம்பாசிடர் தோட்டத்திற்குள் புகுந்தது.

அப்பாடா போன உயிர் திரும்பியது போன்ற நிம்மதியில் பெருமூச்சுடன் வாயிற் கதவைத் திறந்தாள்.

அன்று அவள் பயந்ததுபோல் அவர் குடித்திருக்கவில்லை. காராஜில் காரை வைத்துப் பூட்டிவிட்டு மழையில் நனைந்துகொண்டு விரைவில் வராந்தாவுக்கு வந்தார்.

"தலையெல்லாம் நனைஞ்சு போச்சே. குடை எடுத்திட்டு வரத்துக்குள்ளே வந்துட்டீங்களே" ஆதங்கப்பட்டாள்.

"கல்கண்டா நான் கரைஞ்சுபோக?" வேடிக்கையாக கேட்டபடி அவள் கன்னத்தை வருடினார் செல்லமாக. அவரது விரல்களிலிருந்து புறப்பட்ட இன்டிமேட் செண்ட்டின் மணம் முகத்தில் மோதியபோது நெஞ்சிலே ஒரு கசப்பு கவ்வியதை உணர்ந்தாள்.

இதுவரை விட்டிருந்ததாக அவள் எண்ணிய பழக்கம் ...வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டதுபோல ...ஆமாம், இப்போது அவள் யார்?

பொங்கி எழுந்த பொறாமை உணர்வை அடக்கிக் கொண்டு அமைதியாக வாழ பழக்கப்பட்டவள். கீழுதட்டைக் கடித்தபடி தன்னைச் சமாளித்துக் கொண்டாள்.

"சாப்பாட்டுக்கு எல்லாம் தயாராக இருக்கு."

"இத்தனை நாழி கழிச்சு வரும்போதே நான் சாப்பிட்டுட்டுத்தான் வருவேன்னு தெரியாதா? இன்னுமா நீ பட்டினியா இருக்கே? சே! சே! முதல்லே போய்ச் சாப்பிடு.



இந்தக் கண் விழிப்பு பட்டினி, இதெல்லாம் உனக்கு ஒத்துக்காதே..." பரிவுடன் கூறியபடி இடது கையால் அவளை அணைத்துக் கொண்டு கதவைத் தாளிட்டுவிட்டு உள்ளே நுழைந்தார்.

'என்னிடம் இத்தனைப் பரிவும் பாசமும் உள்ள மனிதருக்கு ஏன் இந்த அசிங்கமான பலவீனம் ஈஸ்வரா!' ஏக்கத்துடன் எண்ணிய சுகுணாவுக்கு அவரை கட்டிக் கொண்டு ஓவென்று அழவேண்டும் போன்ற துக்கம்.

'வயசுக் குழந்தைகளை வச்சுக்கொண்டு இன்னுமா இந்த விளையாட்டு' கேட்க வேண்டும் போன்ற உள்ளத் துடிப்பு. பல ஆண்டுகளாக வாயை மூடிக் கொண்டிருந்தவளுக்கு இப்பொழுது மட்டும் திடீரென்று துணிவு எங்கிருந்து வரப்போகிறது?

"ஏம்மா இப்படி உடம்பு நடுங்கறது? காய்ச்சலா?" அன்புடன் அவள் நெற்றியைத் தொட்டுப் பார்த்தார்.

"எனக்கு ஒண்ணுமில்லீங்க. முதல்லே நீங்க தலையைத் துடைச்சுக் கொள்ளுங்க. இப்படியே ஈரத்தோட நின்னா..." செல்லமாகக் கடிந்து கொண்டாள்.

"மாடிக்குப்போய் நான் ஈரத்துணியை மாத்திட்டுத் தலையைத் துடைச்சுக்கிறேன். நீ..."

அவர் முடிக்குமுன் கேட்டாள். "நான் வந்து உதவி செய்யட்டுங்களா?"

உரக்கச் சிரித்துவிட்டார் ராஜாராம்.

"பச்சைக் குழந்தையா நான்? என்னை கவனிச்சுக்க என்னால முடியும். நீ போய்ச் சீக்கிரமே சாப்பிட்டுட்டு வா..."

'பச்சைப் பிள்ளையாக இருந்தால் தேவலையே. அடிச்சு உதைச்சாவது திருத்தலாமே. தனக்குள்ளே நினைத்தபடி அவள் உள்ளே சென்றாள். அவளுக்குப்

பசிக்கவேயில்லை. மேஜை மீதிருந்த சாப்பாட்டு பாத்திரங்களை அப்படியே தூக்கி பிரிஜ்ஜுக்குள் வைத்துவிட்டு ஒரு வாய் தண்ணீரைக் குடித்தாள். மெல்ல மாடிப் பக்கம் வந்தாள். அவர்கள் அறையில் விளக்கு பளிச்சென்று எரிந்து கொண்டிருந்தது. இரவு உடையில் வாட்டசாட்டமாக அவர் படுக்கை மீது கிடந்தார்.

மெட்டியின் மெல்லியதான ஓசை கேட்டதும்—திரும்பினார். "சுகுணா! இப்படி உட்கார். காலையிலேயிருந்து ரெண்டு காலும் குடையுது."

எத்தனை நேரம் கழித்து வீட்டுக்கு வந்தபோதிலும் அவளிடம் அந்தப் பணிவிடையை ஏற்காவிடில் அவருக்குத் தூக்கம் வருவதில்லை.

"கால் குடைச்சலுக்கு டாக்டர் ஊசி போட்டுக்கச் சொன்னாரே, உங்களுக்கு அதுக்கு எங்கே நேரம்?" கடிந்துகொண்டு அவர் அருகே படுக்கை விளிம்பில் உட்கார்ந்தபடி கால்களை மெல்லப் பிடித்துவிட்டாள்.

"பூப்போன்ற உன் கையால் தொட்டாலே...வலி பஞ்சாப் பறந்து போகுது. ஊசியும் நூலும் எதுக்கு?" கொஞ்சியபடி அவளது கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளினார்.

தவறு செய்துவிட்டோம் என்ற நினைப்பு ஏற்படும் போதெல்லாம் அவருக்குச் சுகுணா மீது அன்பு வெள்ளமாகப் பொங்கி வழிந்துவிடும். ஈடு செய்வதுபோல் அதிகமான பரிவு காட்டுவது வழக்கம். கொஞ்சி கொஞ்சி ஆசாமி குழைந்து போவார்.

பாதங்களை அவள் மெல்லப் பிடித்துவிட்டபோது "ஸ்...அங்கே தொடாதே, வலிக்குது," என்று அரற்றியபடி வலது காலை இழுத்துக் கொண்டார்.

சுகுணா விடாது கெட்டியாகப் பிடித்துக்கொண்டு உற்றுப் பார்த்தாள். எங்கேயோ இடித்துக்கொண்டு நகம் பெயர்ந்து ரத்தக் கசிவுடன் வலது பாதத்தின் பெரு



விரலில் ஒரு சிறு காயம். குளியலறையிலிருந்து பஞ்சு, டெட்டால் இத்யாதியுடன் ஓடிவந்தாள். ஈரப் பஞ்சினால் துடைத்து, டெட்டாலைத் துளி தடவி, பிளாஸ்திரியை உரித்துக் காயத்தின்மீது இறுக்கமாகச் சுற்றினாள்.

"டயாபடிஸ் வியாதியால் உங்கப்பா கஷ்டப்பட்டார். அதனாலே நீங்க இனி ஜாக்கிரதையாக இருக்கணும்னு சொல்லிப்பிட்டீங்களே...ரத்தப் பரிசோதனைக்கு இன்னமும் போக மாட்டேங்கறீங்க...ஆமாம், தெருவில் கொஞ்சம் பார்த்து நடக்கப்படாதா?" பரிவுடன் அலுத்துக் கொண்டாள் அவள்.

"பார்த்துத்தான் நடக்க முயற்சிக்கிறேன். அப்படியும் தவறு ஏற்பட்டுடுத்து" இரு பொருள்பட கூறிவிட்டு மெல்லச் சிரித்தார்.

அவள் மௌனமாகக் கைகளைக் கழுவித் துடைத்துக் கொண்டு வந்தாள். போர்வையை இழுத்து அவர் கழுத்து வரை மூடினாள். "சரி, மணி என்ன ஆகிறது தெரியுமா? தூங்க முயற்சி பண்ணுங்க. போதும் பேச்சு." அவள் முடிக்குமுன் அவர் குபீரென்று படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்து கொண்டார்.

"நீ இப்போ எப்படி இருக்கே தெரியுமா?" கேலியாகக் கேட்ட வண்ணம் அருகில் நெருங்கியபோது தலை மாட்டுத் தடுப்பின்மீது கடிதங்களுடன் அந்தச் சினிமா டிக்கெட்டின் பகுதிகளும் காணப்பட்டன.

அவர் பார்வையைப் புரிந்துகொண்டாள் சுகுணா "துணிகளைத் தோய்க்கும்போது உங்க பையில் கிடைச்சதையெல்லாம் கொண்டுவந்து வேலைக்காரி வச்சாள்" என்றாள். சட்டென்று அவளது கரத்தைப் பற்றித் தமது கன்னத்தோடு பொருத்திக்கொண்டார் அவர்.

"போன வாரம் சினிமாவுக்குப் போயிருந்தேன். நல்ல படம் உன்னைக்கூட அழைச்சிட்டுப் போயிருக்கணும்."

"எனக்குத்தான் இங்கிலீஷ் படங்கள் பிடிக்காதுன்னு தெரியுமே. உங்களுக்குப் பிடிச்சதைப் போய்ப் பார்த்து விட்டு வந்திருக்கிறீங்க. அதனால் என்ன?"

அவர் மிகவும் குழைந்து போனார். "கருணா! நீ மட்டும் அமையாது வேறு ஒருத்தி எனக்கு மனைவியா வாச்சிருந்தால் என் வாழ்க்கையில் நிம்மதியே இருந்திருக்காது. கடவுள் அழகை மட்டும் உனக்கு அள்ளிக்கொடுக்கலை. ம்...பொறுமையையும் அல்லவா உன் கணக்கிலே வாரிவிட்டிருக்கார்." கொஞ்சிக் கொண்டே அவளது கூர் மூக்கை மெல்லப் பிடித்துத் திருகினார்.

கையை மெல்லத் தட்டிவிட்டாள் அவள். "நட்ட நடு ராத்திரியில் எழுந்து உட்கார்ந்துகொண்டு... இதெல்லாம் பேசித்தான் ஆகணுமா? படுங்க" அதட்டினாள்.

பளிச்சென்று எரிந்த விளக்கை அணைத்துவிட்டு விடி விளக்கைப் பொருத்தினாள். மெல்ல அவரைப்படுக்கையில் தள்ளி மறுபடியும் போர்வையால் மூடினாள்

"நட்ட நடு நிசியில்லை. கணக்குப்படி இப்போ ஞாயிற்றுக்கிழமை. விடியற்காலம். ஞாபகம் இல்லையா ...இதே தேதியன்று இருபத்திரண்டு வருஷங்களுக்கு முன்னர்தான் இந்தக் கருணாவின் கழுத்திலே தாலி கட்டிய மங்கள நாள். இன்னிக்கு நமது வெட்டிங் அனிவர்சரி டே. மறந்து போச்சா?" அவள் கையை இறுக்கமாகப் பற்றிக் கொண்டார்.

"மறப்பேனா! உங்களுக்குப் பிடிச்ச சமையலைச் செய்ய ஏற்பாடு செய்திருக்கேனே! அதனாலே நாளைக்கு நீங்க கொஞ்சம் சீக்கிரமா எழுந்து குளிச்சு, பூஜையை முடிக்கணும். தொண தொணன்னு பேசாமல் தூங்குங்க. என்னையும் கொஞ்சம் தூங்கவிடுங்க. ரொம்பக் களைப்பா இருக்கு" கையை இழுத்துக்கொண்டு அவள் மெல்லப் படுக்கைமீது சாய்ந்துகொண்டாள்.



சிறிது நேரத்தில் அவரிடமிருந்து லேசான குறட்டை ஒலி எழும்பியது. அவர் உறங்கிவிட்டார்.

ஆனால் அவளுக்குத் தூக்கம் வரவில்லை. இருபத்திரண்டு வருஷங்களை நோக்கிப் பின்னால் ஓடிய சிந்தனைகளுடன் அவள் புதையுண்டு போனாள்.

அப்போது அவளுக்கு வயது பதினெட்டு. சேலம் மாவட்டத்துப் புதிய பாளையத்தில் வாசம். படிப்பு வசதி இல்லாத சின்ன கிராமம். அப்பா ஒரு விவசாயி. பற்றாக்குறையில் தவித்த சாதாரணக் குடும்பம். அண்ணன் தம்பிகளுக்குக்கூட அதிகம் படிக்க வாய்ப்பிருக்கவில்லை. அப்படிப்பட்டதொரு சூழ்நிலை. கைகளில் கண்ணாடி வளையல்கள், கழுத்தில் பாசிமணி மாலை. இடையே இழிந்த பழைய வாயில் சேலை. அதற்குள்ளே அடைபட்ட அழகுடன் கல்யாண வயதில் காத்திருந்தாள் அவள்.

முறைப் பையன், மாமன் மகனுக்குக் கொடுக்க அப்பா உத்தேசித்திருந்தார். அவனும் ஒரு விவசாயி. 'கடைசிவரை காப்பாத்திக் கஞ்சியாவது ஊத்துவானே' என்பது அவர் எண்ணம்

அப்போதுதான் அந்த அற்புதமான திருப்பம் ஏற்பட்டது. உறவுக்காரர் ஒருத்தர் வீட்டுக் கல்யாணத்திற்குப் பட்டணத்தைவிட்டு அந்தப் பட்டிக்காட்டுக்கு வந்திருந்தார் ராஜாராம். பந்தலில் ஜாடையாக அவளைப் பார்த்துத் திகைத்தபோதுதான் தாம் அந்தக் கல்யாணத்துக்கு வந்தது எத்தனை நல்லதாய் போயிற்று என்று எண்ணிக்கொண்டார். விரும்பியதை அடைந்தே தீருவேன் என்ற வேகம் நிறைந்த வயசு அவருக்கு. பிடிவாதமும் துணிச்சலும் கூட. பண-பதவி-படிப்பு இவைகளின் பக்கபலம் வேறு. முறைப்பையன் இருக்கிறானே என்று தயங்கிய அவளது தகப்பனைப் பலவிதத்திலே மயக்கி அந்த முகூர்த்தத்திலேயே அவள் கழுத்திலே தாலியைக் கட்டி அழைத்துக் கொண்டு வந்துவிட்டார்.

அவள் வந்த வேளை, ராஜாராமின் வியாபாரம் மேலும் மேலும் கொழித்துச் செல்வம் பொங்கிப் பொழிந்தது.

பங்களா, கார்கள், நகைகள் வேலையாட்கள் என்று எதற்குமே குறைவு இல்லாமல் ராணி போன்றதொரு அந்தஸ்து. அதிகாரத்தை மருமகளிடம் கொடுத்துவிட்டு ஒதுங்கிக்கொண்ட நல்லதொரு மாமியார். மணி மணியான குழந்தைகள்.

பத்து வருஷ காலம் அவளுக்கு வாழ்க்கை சுவர்க்கமாகத்தான் பிரமிப்பை கொடுத்தது. ராஜாராமிடம் எந்தக் குறையும் இருந்ததாக அவளுக்கு அப்போது தெரியவில்லை.

திடீரென்று அந்த உண்மை அவளுக்கு விளங்கிய போது அதிர்ந்து போய்விட்டாள்.

ஆத்திரமும், பொறாமையும் தாளாமல் வேதனையில் துடிதுடித்துப் போனாள். உள்ளூரப் புழுங்கி வெளியில் சொல்லிக் கொள்ள முடியாது குமைந்தாள்.

வியாபார சம்பந்தமாகச் சில நாட்களுக்கு ராஜாராம் கல்கத்தா போயிருந்தார். தினமும் காலை வேளையில் அவளை அங்கிருந்து தொலைபேசியில் அழைத்து விசாரிக்க அவர் தவறியதேயில்லை. குடும்பத்தின்மீது அத்தனை ஒரு ஈடுபாடு.

அன்று காலை தொலைபேசி கிணுகிணுத்தபோது கைவேலையைப் போட்டுவிட்டு ஓடிவந்தாள்.

கல்கத்தாவிலிருந்து அவர் பேசவில்லை. உள்ளூரிலிருந்து வந்த டெலிபோன். ஓர் இளம் வயதுப் பையனின் கீச்சுக் குரல், மறுபக்கத்தில் ஒலித்தது. ''ராஜாராம் அவர்கள் வீடுதானே?'' சந்தேகத்துடன் கேட்டான் அவன்.

''ஆமாம். என்ன வேணும்? நீ யார்?''



ஒரு கணம் மறுபக்கத்திலே மௌனம் நிலவியது. ''நான் சதாசிவம் பேசறேன். ஹோமிலே சேத்திருக்கோம். அம்மாவை நான் சொல்லணும்.'' அவரை வந்து பார்க்கத்

''அவர் ஊரில் இல்லையே. நாளை அல்லது மறுநாள் வரக்கூடும். ஆமாம் நீங்கள்ளாம் யார்? ஐயாவுக்கு உறவா?''

பதில் இல்லை. போனை வைத்து விட்டான்.

யார் இந்தச் சதாசிவம். எதற்காக அவள் கணவர் அந்த அம்மாவைப் போய்ப் பார்க்கணும். குழப்பமாக இருந்தது அவளுக்கு. அந்தப் பையனின் கோரிக்கை கோபத்தையும் உண்டாக்கியது.

அதற்கடுத்த நாள் கூர்க்காவையும் தாண்டிக்கொண்டு அந்தப் பையன் வாயிலில் வந்து நின்றான்.

''யாரோ சதாசிவமாம். பார்க்க வந்திருக்கிறான்,'' வேலையாள் சொன்னபோது அவள் எரிச்சலுடன்தான் வாசலுக்கு வந்தாள். வராந்தாவில் கிடந்த பிரம்பு நாற்காலியிலிருந்து எழுந்து கைகூப்பிய பதினொன்று வயதுச் சிறுவனைப் பார்த்தபோது அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

அவள் மகன் யோகேந்திரனின் சாயல். ஒளிவீசும் அதே கண்கள். அகலமான அதே நெற்றி. அப்படியே அச்சில் வார்த்தது போல் நின்ற சதாசிவத்தைப் பார்த்து அவளுக்கு மூச்சு முட்டியது. நெஞ்சு படபடக்க வைத்த விழி வாங்காது சிறிது நேரம் அவனை வியப்புடன் பார்த்தாள்.

''அம்மாவுக்கு உடம்புக்கு ரொம்ப முடியாம போச்சு. நர்ஸிங்ஹோமிலே சேத்துடலாம்னு அவர்தான் சொன்னார். சேர்த்துட்டோம். இப்போ செலவுக்குப் பணம் இல்லாம...'' மென்று விழுங்கினான் அவன். கண்களில் நீர் புரண்டது. உதடுகளும் மூக்கும் துடித்தன.

அந்தப் பையனின் துயர முகத்தைக் காண அவளுக்குச் சகிக்கவேயில்லை. தன் பிள்ளை யோகேந்திரன் அழுது கொண்டு கையேந்தி நிற்பது போன்றதொரு பிரமையால் நெஞ்சுருகிப் போனாள். உள்ளே விரைந்து சென்று பீரோவைத் திறந்து ஐந்நூறு ரூபாய் எடுத்து வந்தாள்.

''இதை அவசரச் செலவுக்கு வச்சுக்கோ. அவர் வரட்டும், சொல்றேன்.'' அவனை விரைவில் அனுப்பி வைத்தாள்.

விஷயத்தைக் கேள்விப்பட்ட நோயாளி மாமியார் சினம் தாளாமல் அவள் மேல் சீறி விழுந்தாள்.

''அறிவு கெட்ட பெண்ணே! அத்தனைப் பணத்தை வாரி அவன் கிட்ட நீ ஏன் கொடுக்கணும்? அந்த சதாசிவம் யார்னு தெரிஞ்சா உதவி செஞ்சிருப்பியா?''

''யாரு அத்தை அந்தப் பையன்? தூரத்து உறவா?''

''எனக்கு ஒண்ணும் உறவில்லை. உன் புருஷனுக்குத்தான் உறவு. ஆபீஸிலே டைப் அடிக்க வந்தாள். ஒரே முட்டாக அடிச்சிட்டுப் போகலாம்னு என் மகனைக் கையில் போட்டுக் கொண்டு விட்டாள். வேண்டியது கொடுத்தாச்சு! இன்னும் என்ன வேணுமாம்?'' கிழவி இரைந்தாள்.

மரமாகச் செயலற்றுப் போய் விட்டாள் சுகுணா. இத்தனை காலம் இந்த உண்மையை அவள் கணவன்



அவளிடம் ஏன் சொல்லவில்லை? மாமியாரும் ஏன் மறைத்து வைத்தார்கள்? ஏன்?

ஊரிலிருந்து திரும்பிய கணவனிடம் அவள் என்னவோ கேட்கத்தான் விரும்பினாள். இரைந்து சத்தி ரகளை செய்ய வேண்டும் என்று ஆத்திரத்தில் கொதித்துப் போனாள்.

ஆனால் எதுவுமே செய்ய முடியவில்லை.

''அடுத்த நாள் மாலை, ராஜாராம் வீட்டிற்கு வந்த போது மிகவும் சோர்ந்து காணப்பட்டார். அவளைத் தன் அறைக்குள் அழைத்துச் சென்று கதவைத் தாளிட்டார். ஒரு நாற்காலியில் அவளை உட்கார வற்புறுத்தி விட்டு எதிரே இன்னொரு ஆசனத்தில் தாம் அமர்ந்து கொண்டார்

''சதாசிவம் எல்லாம் சொன்னான். இங்கே வரக் கூடாது என்று போட்டிருந்த என் உத்தரவை மீறி அவன் வந்தது பற்றி எனக்குக் கோபம்தான். ஆனால் இனி கோபப்பட்டு லாபமில்லை. தனசேகரி இன்று காலையில் காலமாகி விட்டாள். அவள் காரியங்கள் எல்லாம் முடிஞ்சு போச்சு.'' பெருமூச்செறிந்தார் அவர்.

எச்சிலை விழுங்கிக் கொண்டு அவள் மௌனமாக இருந்தாள். மார்பு மட்டும் மிக வேகமாக அடித்துக் கொண்டது. நெஞ்சிலே நெருப்பானதொரு எரிச்சல். உடல் முழுவதும் கிடுகிடுவென்று ஆடியது.

''தேவையில்லைன்னு நான் இதுவரை உனக்கும் சொல்லலை. தனசேகரி என்னுடைய வைப்பு. என்னிடம் வேலைசகு வந்தாள். அப்படியே நெருக்கமா ஒரு பழக்கம் ஏற்பட்டுடுச்சு. என் இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகி விட்ட அவளை நான் நடுவீதிக்கு விரட்ட முடியாதில்லையா? அதனால்தான் இத்தனைக் காலமும் காப்பாத்திட்டு இருந்தேன்.''

துணிவையெல்லாம் திரட்டிக் கொண்டுதான் சுகுணா மெல்லக் கேட்டாள். ''அவங்களையே நீங்க கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்கலாமே? வீணாக ஒரு பெண்ணுடைய பாவத்தை ஏன் சுமந்தீங்க?''

''அவள் ஏற்கனவே ஒருத்தனுடன் தொடர்புகொண்டு கைவிடப் பட்டவள். அப்படிப்பட்டவள் தனக்கு மருமகளாக வருவதை அம்மா ஏற்கவில்லை. தனசேகரியும் மறுத்து விட்டாள். எனக்கு வேறே வழியிருக்கவில்லை. கால முச்சூடும் அவளைக் காப்பாத்த ஒப்புக் கொண்டேன்.''

''உங்களுக்கு இப்படி ஒரு சின்ன வீடு இருக்கிறது என்பது எனக்கு ஒருநாளும் தெரியாமல் போயிருச்சே.'' தாங்க முடியாமல் சுகுணா விம்மிவிட்டாள்.

ராஜாராம் பதறிப் போனார். எழுந்து அருகில் வந்து தமது துண்டால் அவள் கண்ணீரைத் துடைத்தார். நெற்றிக் கூந்தலை ஒதுக்கினார் அவள் முகத்தை நிமிர்த்திக் கண்களைப் பரிவு...ன் பார்த்தார். ''உன் கிட்ட சொல்லாதது தவறுதான். சொல்லி மனசைப் புண் படுத்த விரும்பலை. அதுதான் காரணம் சுகுணா! உண்மையைச் சொல்...உனக்கு வாழ்க்கையில் நான் வேறே ஏதாவது குறை வச்சிருக்கேனா?''

துக்கம் அவள் நெஞ்சை அடைத்தது. ''எந்தக் குறையும் கிடையாது. என் குடும்பத்தைக் கூட நீங்க ஆதரிக்கிறீங்க. அதுக்கு நான் ரொம்ப நன்றியா இருக்கக் கடமைப் பட்டவ,'' பேச முடியாது விக்கினாள்.

இந்த ஒரு தவறைத் தவிர உண்மையில் அவர் அன்பான கணவராச்சே? அதை அவளால் மறுக்க முடியவில்லை.



சுகுணா! தனசேகரி குழந்தைகளுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய நம்ப வக்கீல் கந்தசாமிகிட்டே எல்லாத்தையும் ஒப்படைச்சிருக்கேன். அவர்கள் உன் குழந்தைகளின் வாழ்வில் குறுக்கிட மாட்டார்கள். பயப்படாதே...''

''உங்களை நான் நம்பறேன்.'' அவள் திணறினாள், மெல்ல அழுதாள்.

''பணமும் பதவியும் வந்தப்புறம் சில பழக்கம் வழக்கங்களும் எங்கிட்ட வந்து ஒட்டிக்கிட்டு இருக்கு. அவைகளை நீ பாராட்டாம இருந்தாத்தான் நமக்குள்ளே அமைதியான வாழ்வு இருக்கும். மத்தவங்க கண்ணுக்கு நான் எப்படித் தெரிஞ்சாலும் சரி. ஒரு உண்மையை நீ மறக்கவே கூடாது. உன்னை உயிருக்கு மேலே நேசிக்கிறவன் இந்த ராஜாராம், உன் கணவன். அவனது மனைவி நீ. சகல உரிமைகளுக்கும் பாத்தியதைப் பட்டவ எல்லா அதிகாரமும் உன்னுடையது. அதை யாரும் அசைக்க முடியாது. இதைப் பத்தி இன்னும் நான் விரிவாப் பேசணுமா?'' சற்று அழுத்தலாகக் கேட்டு விட்டு அவளை இறுக்கமாக அணைத்துக் கொண்டார். அவர் தோள் மீது தலையை வைத்துக் கொண்டு விம்மி, விம்மி அவள் அழுத போதும் முதுகைத் தடவிக் கொடுத்துச் சொன்ன ஆறுதல் மொழிகள் இப்போதும் அவள் காதுகளில் ஒலிக்கின்றனவே.

ஓர் உண்மையை மட்டும் அவள் அப்பொழுதே புரிந்து கொண்டு விட்டிருந்தாள் மென்மையாக அவளிடம் கொஞ்சிப் பேசக் கூடிய அவர் மிகவும் கடினமாகவும் கண்டிப்பாகவும் நடந்து கொள்ள இயலும் என்பதை முதல் முதலாக உணர்ந்து கொண்டாள்.

தோட்டத்திலே விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள் மீது அவள் பார்வை பட்ட போது பாசத்தின் பிடியில் அவள் குடல் புரண்டு முறுக்கியது



19121
3467033

குழந்தைகளுக்காக அவள்... மௌனமாக அவரது குறைகளைப் பாராட்டாமல் வாழ்ந்துதான ஆக வேண்டும். பின் வேறு என்ன செய்ய முடியும்.

அவள் தந்தை முடிவு செய்திருந்தபடி அவளது மாமன் மகனைக் கட்டிக் கொண்டிருந்தால்...

இப்படிப்பட்ட சுகமான வாழ்வுதான் கிடைத்திருக்குமா? அவளது குடும்பம்தான் வறுமையினின்று நிமிர்ந்திருக்குமா? இத்தனை அழகான இரண்டு பிள்ளைகளுக்கு அவள் தாயாகிவிட்டிருப்பாளா?

உலகத்தில் இல்லாத கேட்காத அதிசயமா?...

ராஜாராமிடம் இயற்கையாக இருந்த சில பலவீனங்கள் பணத்தின் பலத்தினால் விரிவாகிவிட்டன அவ்வளவுதான். அதற்காக அவரை அவள் இத்தனை காலத்திற்குப் பிறகு வெறுக்கத்தான் முடியுமா? அல்லது ஒதுக்கத்தான் இயலுமா? அவளைப் பொறுத்தவரை அவர் உணர்விலும் உள்ளத்திலும் ஒன்றாகிவிட்ட கணவன்.

இந்த மக்குப் பெண் திவ்யாவுக்கு அவள் தன் மனத்தை எப்படித்தான் திறந்துகாட்ட முடியும்?

இது அவளது வாழ்வின் அந்தரங்கமாயிற்றே! அடுத்தவர்களுக்குச் சொல்ல முடியாத ரகசிய வேதனை.

ராஜாராம் லேசாகப் புரண்டு படுத்தார். தூக்கத்திலே ஆழ்ந்து கிடந்த அவர் முகத்தைப் பரிவோடு பார்த்தாள் மனைவி. இருபத்திரண்டு வருஷங்கள்—இனிமையானதொரு வாழ்வைத் தந்தவரை வெறுக்கவா முடியும்? தன் இரண்டு அழகுக் குழந்தைகளின் தந்தையாகிவிட்ட அவரை...நெஞ்சினின்று நீக்கவா முடியும்? மனம் கரைந்து உருகிப்போனாள் அவள். கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் தலையணை மீது உதிர்ந்தது.

# 4

விடியுமுன்பே ராஜாராமுக்கு விழிப்பேற்பட்டு விட்டது. அவசரமாகக் குளியலை முடித்துக் கொண்டு பூஜைக்குத் தயாராகி விட்டார்.

கீழே இறங்கி வந்தபோது சட்டென்று அந்த நினைவு. காரின் டிக்கியில் முதல்நாள் மாலை கடையில் அவர் தாமே தேர்ந்தெடுத்து வாங்கிய புடவை பார்சல் இருந்தது.

வேகமாகச் சென்று காரேஜின் கதவைத் திறந்து பார்சலை எடுத்து வந்தார். பூஜையறையில் அதை ஒரு புறமாக வைத்துவிட்டு உட்கார்ந்தார்.

சுகுணாவும் உடனடியாக எழுந்து விரைவில் ஸ்நானத்தை முடித்துக்கொண்டு பூஜைப் பொருள்கள் எல்லாவற்றையும் தட்டில் நிறைத்துத் தயாராக வைத்திருந்தாள்.

கிலுக் கிலுக்கென்று பெட்டி மெல்ல அதிர, சர்க்கரைப் பொங்கல் பாத்திரத்தைத் தூக்கிக் கொண்டு சர்க்கரையாகச் சிரித்தபடி அவள் உள்ளே வந்தபோது அந்த நாளின் ஞாபகத்திலே அவர் மேனி சிலிர்த்துப் போனார்.

"இந்தா...உனக்கு என்னுடைய பரிசு...நம் மணநாள் பரிசு. போய்க் கட்டிக்கொண்டு சீக்கிரமாய் வா" உத்தரவிட்டார்.

அட்டைப் பெட்டியைத் திறந்தாள். அவளுக்குப் பிடித்தமான கரும்பச்சை வண்ணம். உடலில் சரிகை நட்சத்திரங்கள் பளிச் பளிச்சென்று கண்களைச் சிமிட்டின முழங்கால் வரை பட்டை பட்டையாகச் சரிகையில் குட்டி யானைகள் சாரைசாரையாக ஊர்ந்த கரை. பிரமாதமான தலைப்பு விலையும் பிரமாதமாகத்தான் இருந்தது.

''என்னங்க? கூறைப் புடவை போல இத்தனை பணத்தைப் போட்டு?'' அவள் செல்லமாகச் சிணுங்கியபோது அந்த அழகை ரசித்தார் அவர்.

''கல்யாண புடவையேதான். இன்னிக்கு நம்ப கல்யாண நாள் இல்லையா? என் கண்ணுக்கு மூன அன்னிக்கு மணவறையில் நீ உட்கார்ந்திருந்தப்போ இருந்தாப்பலத்தான் இன்னிக்கும் இருக்கு. போய்கட்டிட்டு வா.'' மகிழ்ச்சியோடு பணித்தார்.

அவள் என்ன புடவை உடுத்தவேண்டும். என்ன நகைகள் அணியவேண்டும் என்றெல்லாம் முடிவு செய்வது கூட அவர்தான். வித விதமான நகைகளில் அவளை அலங்கரித்துக் கண்களால் பார்த்து மகிழ்வதில் அவருக்கு அலாதியானதொரு திருப்தி. தமது ஆசை மனைவிக்கு இரண்டாயிரம் ரூபாய்க்கு ஒரு புடவை எடுத்தால் என்ன குறைந்தா போய்விடுவோம்? வாழ்க்கையில் அவள் கொடுத்த நிம்மதிக்கு விலை உண்டோ? என்று எண்ணித்தான் வாங்கியிருந்தார்.

பூஜை முடிந்ததும் புதுப் புடவை சரசரக்க உள்ளே வந்து கற்பூர ஜோதியை வணங்கி, முருகன் படத்தின் மேலிருந்த பூச்சரத்தில் துளியைக் கிள்ளித் தலையில் வைத்துக் கொண்டாள் சுகுணா.

சட்டென்று கணவன் தன் தோளைப் பற்றி இழுப்பதை உணர்ந்து திடுக்கிட்டாள்.

''என்னங்க இது? குழந்தைகள் வந்தால்...'' பொய்யாகக் கடிந்து கொண்டு மெல்ல அவரது அணைப்பினின்று நழுவி அப்பால் நகர்ந்தாள்.

''இப்போது மறுபடியும் தாலியைக் கையில் எடுத்து உன் கழுத்தில் கட்டணும் போல ஆசையா இருக்கு. அப்படி ஒரு இளமை. அன்று கண்ட மேனிக்கு அழிவில்லாம...'' அழுத்தி அவள் கன்னத்தை ஆசையுடன் கிள்ளினார்.



குங்குமமாக முகம் சிவந்து போனாள் அவள். ''இன்னும் கொஞ்சநாள் போய்ப் பேரன் பிறந்த பிறகு இப்படிப் பேசுங்க நல்லா இருக்கும்!'' கடிந்தாள்.

சர்க்கரைப் பொங்கலைக் கரண்டியால் அள்ளி அவரது உள்ளங்கையில் சிறிதளவு வைத்தாள்.

''பிரசாதத்தை சாப்பிடுங்கோ. பிறகு இன்னிக்குக் குழந்தைகளோட உட்கார்ந்து கொஞ்சம் நிம்மதியாக் காப்பி பலகாரம் சாப்பிடலாம்—என்ன சொல்றீங்க?''

''அப்பா! என்ன இனிப்பு!'' விழுங்கிக் கொண்டு அவளைப் பார்த்து உல்லாசமாக முறுவலித்தார்.

''வெல்லம் ரொம்பப் போட்டுட்டேனா? கவனித்துத் தானே நானே பூஜைக்குப் பிரசாதம் தயாரிச்சேன்!''

''பொங்கலைச் சொல்லல. உன்னோட வாழ்ந்த இந்த இருபத்திரண்டு வருஷங்கள் தந்த இனிமையைச் சொல்றேன்.''

வெட்கத்திலே மூக்கும், கழுத்தும் கோணிக் கொண்ட உணர்வு அவளுக்கு. நெஞ்சிலே மகிழ்ச்சியின் பூரிப்பு.

ராஜாராமுக்கு இது கைவந்த கலை என்பது அவளுக்குத் தெரியும். இனிக்கப் பேசி மயக்கித் தன் கைக்குள்ளே அவளைச் சிறைப்படுத்திக் கொள்ளும் சாமர்த்தியக்காரர் தான். தெரிந்த சங்கதி என்றாலும் அவர் புகழ்வதைக் கேட்க எத்தனை ஆனந்தமாக இருந்தது!

கணவன் மனைவி என்ற இருவர் இடையே, தானே உருவாகும் விவரிக்க முடியாத அந்த நேசத்தின் நெருக்கத்தைப் பிரிக்க முடியாத பாசத்தை அவள் எப்படித்தான் இல்யாவுக்குப் புரிய வைக்க முடியும்?

அவரவர் அனுபவிக்கும் பொழுதுதான் புரியக் கூடிய விஷயம் அது.

''அம்மா! அப்பா!'' ஏககாலத்தில் பெண்ணும் பிள்ளையும் இரைந்து கூப்பிட்டதும் இருவருமே திடுக்கிட்டுப் போய் விட்டனர்.

ஞாயிற்றுக்கிழமை என்றால் படுக்கையை விட்டுச் சுலபத்தில் எழுந்து விடமாட்டான் யோகேந்திரன்.

அவன் கூடக் குளித்து முடித்துவிட்டுச் சுத்தமாக உடை உடுத்திக் கொண்டிருந்தான். திவ்யாவும் அதிகாலை வேளையிலே தயாராகி விட்டிருந்தாள். கல்லூரியில் பிரெஞ்சு மொழியைப் பாடமாக எடுத்துப் படித்தவன் யோகேந்திரன். அவனுக்குப் பிரஞ்சு பாடகர் 'சார்லஸ் ஆசனூவா'மேல் அபார மோகம். தயாராக முன்னறையில் அவன் வைத்திருந்த டேப்ரிகார்டரின் பொத்தானை அழுத்தி விட்டுத்தான் வந்திருந்தான்.

'சார்லஸ் ஆசானூவா' ஸ்பீக்கர் வழியே ''ஹாப்பி, அனிவர்சரி'' என்று பாடிக் கொண்டிருந்தார்.

பின்னால் அவர்கள் கைகளில் ஆளுக்கு ஒன்றாகச் சுமந்து கொண்டிருந்த ரோஜாப்பூ மாலைகளை மந்திரவாதி போல் சட்டென்று முன்னால் பிடித்தார்கள்.

''இந்தாங்க அப்பா, இதை அம்மா கழுத்திலே போடுங்கோ'' — பெண் ராஜாராமை அதட்டினாள். மாலையை அவர் கையில் கொடுத்தாள்.

''இந்தாங்க அம்மா, நீங்க அவர் கழுத்திலே போடுங்கோ'' மகன் உத்தரவிட்டான்.

''என்ன முழிக்கிறே? குழந்தைகள் ஆசைப்படறாங்க ...ம்—'' பரிகாசமாக சிரித்தார். எந்தக் காலை வேளையில் அவரது அன்புக்குகந்தவர்களின் வட்டத்துக்குள்ளே அவர் பத்திரமாக இருக்கும் ஒரு தெம்பில் பேசினார்.

''இருவரும் ஒருவருக்கொருவர் மாலையை அணிவித்துக் கொண்டனர். ''பக்கத்திலே அப்படியே நில்லுங்க. உங்க கல்யாணத்தின்போது உங்களை நான் பார்க்க



லையே!'' யோகேந்திரன் பரிகசித்துக் கொண்டே கையிலிருந்த காமராவைத் தட்டி விட்டான். பளிச்சென்ற வெளிச்சம் பட்டு கண்கள் கூச அம்மா வெட்கத்துடன் சிரித்தாள்.

''ஆமாம் நான் கூடக் கேட்கணும்னு இருந்தேன் யோகி. நீ ஏன் எங்க கல்யாணத்துக்கு வரலை, அப்போ எங்கே போயிருந்தே?''

''போதும், அவன்தான் அச்சுப் பிச்சுன்னு ஜோக் அடிக்கிறான்னா நீங்களுமா சேர்ந்துக்கணும்? வாங்க எல்லோரும். உங்களுக்கு என் கையாலேயே எல்லாம் பரிமார்றேன்.'' மகிழ்ச்சியுடன் அவள் சாப்பாட்டறைக்கு விரைந்தாள்.

அன்று காலை பகல் முழுவதும் அப்பா வெளியே போகவில்லை. காப்பி பலகாரத்திற்குப் பின் வார முழுவதும் படிக்காத பத்திரிகைகளுடன் மாடியில் நடுப்புலே நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தார். சிறிது நேரம் படிப்பதும், பின்னர் தோட்டத்தை வெறிப்பதுமாகப் பொழுதை ஓட்டினார். பகல் சாப்பாட்டின்போது கூட ஒரு கப் பாயசத்தை அதிகமாக குடித்து விட்டதன் ஆயாசம். பலத்த குறட்டை எழுப்பிக்கொண்டு பகல் முழுவதும் உறங்கி விட்டார்.

மாலைப் பொழுது மங்கத் தொடங்கியபோது அவருக்கு இருப்புக் கொள்ளவில்லை. முகத்தைக் கழுவிக் கொண்டார். முடியை வாரிக் கொண்டார். படுக்கையில் புரண்டு கசங்கிவிட்ட சட்டையைக் கழற்றி விட்டு, இஸ்திரி போட்டுச் சுகுணா அடுக்கி வைத்திருந்த ஷர்ட்டுகளில் ஒன்றை எடுத்து அணிந்துகொண்டார். பர்சைத் தூக்கிப் பத்திரமாகப் பையில் போட்டுக் கொண்டார்.

''அப்போ நான் கொஞ்சம் வெளியிலே போய்ட்டு வரட்டுமா?''

அவர் அம்மாவிடம் விடை பெறும் குரல் கேட்டது. படித்துக் கொண்டிருந்த கதைப் புத்தகத்தை வீசிப்போட்டு விட்டு யோகேந்திரன் இறங்கி ஓடி வந்தான். அதற்குள் அம்பாசிடர் தோட்டத்திலிருந்து சாலைக்குள் மறைந்து விட்டது.

கையிலிருந்த பலகாரத்தைக் காக்காய் தட்டிக்கொண்டு போனதும் விக்கித்து நிற்கும் குழந்தையைப் போல அம்மா மெல்லச் சிரித்தபடி வராந்தாவிலே நின்று கொண்டிருந்தாள்.

அப்பாவோடு கூட ஓடி விட்ட தன் உணர்வுகளைக் கொக்கி போட்டு அவள் இழுத்துப் பிடிக்க முயற்சிப்பது போல்தான் அவன் கண்களுக்குப் பட்டது.

அன்று பிற்பகல் சாப்பாட்டிற்குப் பின்னர் வருங்காலச் சம்பந்தியம்மாள் வந்து திவ்யாவைத் தங்களுடன் அழைத்துச் சென்று விட்டாள்.

அப்பாவைப் பற்றி என்னவெல்லாமோ தங்கையிடம் பேச வேண்டுமென்ற ஆத்திரம் அவனுக்கு. திவ்யா வீட்டில் இல்லை. தவித்துப் போனான்

''ரொம்பப் போரடிக்கிறது அம்மா. நானும் காரை எடுத்துட்டு வெளியிலே கொஞ்ச நேரம் போய்விட்டு வரவா?''

''கண்ட பசங்களோட பேசிட்டு நிக்காதே. போன சுருக்கோட திரும்பிடு. ஊரை சுத்திக்கிட்டுத் திரியாதே. அப்பாவுக்குப் பிடிக்காது.'' அம்மா எச்சரித்தாள்.

'அவர் மட்டும் ஊரைச் சுத்தலாமா? நேரங் கழிச்சு வீட்டுக்கு வரலாமா?' கேட்க வேண்டும் போல் ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

குழந்தையாகச் சிரித்த அம்மாவின் கபடமில்லாத முகத்தைப் பார்த்ததும் வார்த்தைகள் நெஞ்சிலே தங்கி விட்டன.



''உங்கள் கல்யாண நாள் அன்று கூட அப்பா உங்களை ஏமாற்றுகிறார். ஏமாந்து கொண்டே இருங்கள். வாயைத் திறந்து பேசாத ஏமாளிப் பெண்கள் பலர் இருப்பதால் தான் அப்பா போலப் பல ஓநாய்கள் உலகத்திலே உலாவுறாங்க. டாமிட்!'' தனக்குள்ளே முணுமுணுத்தான் அவன்.

''நீயே பேசிக்கிறியே என்ன விஷயம்?'' அம்மா கேட்டுவிட்டாள்.

''ஒண்ணுமில்லை. என் சினேகிதனைப் பத்தி. அவனுக்குக் கல்யாணமாகி ஒரு வருஷமாகிறது. அதுக்குள்ளே மணவாழ்க்கை சலிச்சுப் போச்சு. ஆசாமி ஒருநாளைப் போல் ராத்திரி வெகுநேரம் கழிச்சு வாரானாம். லீவு நாளில்கூட வீடு தங்கிறதில்லையாம். அவன் அம்மா என்கிட்ட சொல்லி வருத்தப்பட்டாங்க. நான் அவனுக்குத் தக்க புத்தி சொல்வதாக ஒப்புக்கொண்டிருக்கேன்.''

அம்மா வாயைப் பொத்திக்கொண்டு குலுங்கக் குலுங்கச் சிரித்தாள். ''உனக்கே இன்னும் கல்யாணம் ஆகலை. அதுக்குள்ளே தம்பதிகள் சண்டை பூசல்லே தலையிட்டுக் குழப்பப் பார்க்கிறியா? பிறத்தியாருக்குச் சொல்ற வயசா இது?''

''நியாயம் எது, அநியாயம் எதுன்னு பிரிச்சுப் பார்த்து தெரிஞ்சு கொள்ற இள வயசு இது அம்மா! இதைவிடச் சின்னவனாக இருந்தால் என்னைச் சுற்றி நடக்கிற அநியாயம் புரியாது. அமைதியா இருப்பேன். புரிஞ்சாலும் துணிவாகப் பேசத் தெரியாது. இதுக்கு மேலே வயசாயிட்டா பணம் பதவியிலே மூழ்கி. கொள்கைகளைக் காத்திலே பறக்கவிட்டு நான் என்கிற அகந்தையிலே மூழ்கிடுவேன். அதனால் இதுதான் பக்குவமான வயது. அநீதியைக் கண்டு சீறியெழும் புரட்சிமிக்க இளம் பருவம்!''

''என்னென்னவோ பேசறே. எனக்கென்ன புரியுது? ஆமாம், முடியை வெட்டிக்கிட்டு எத்தனை மாசமாச்சு?'' அம்மா சாமர்த்தியமாகப் பேச்சை மாற்றினாள்.

''ஒருத்தர் வாலை வெட்டக் காத்திருக்கேன். அதுக்கப்பறந்தான் முடியை வெட்டிக்கிறதாகச் சபதம்.'' யோகேந்திரன் கோபமாகச் சிரித்தான்.

''சரி சரி, போய்ட்டுச் சீக்கிரம் வந்துடு. வேகமா வண்டியை ஓட்டாதே. திவ்யா வர நேரமாகும். நீயாவது சட்டுனு திரும்பினா நல்லா இருக்கும்.'' அம்மா பேசிக் கொண்டே உள்ளே சென்று விட்டாள்.

இருட்டும் சமயம் கடற்கரையை விட்டு வண்டியைத் திருப்பினான் அவன். அரட்டையடித்து ஓய்ந்து விட்ட நண்பன் நாணு, ''பசிக்கிறதுடா பழி இன்னிக்கு ஒண்ணும் கிடையாதா?'' என்று முறையிட்டான்.

பணக்கார வீட்டுப் பையன் என்று அவனது நண்பர்களில் சிலர் ஹோட்டல் அருகே வந்ததும், அவன் பையில் தான் கையை வைப்பார்கள்.

நாணு எப்பொழுதும் காலி பர்ஸுடன்தான் கிளம்பும் வழக்கம்.

''டிரைவினுக்குப் போயேண்டா'' உசுப்பினான் பின் ஆசனத்தில் சாய்ந்தபடி சீட்டியடித்துக் கொண்டிருந்த ரமேஷ். அவன் பர்ஸில் பணம் இருந்தது ஓ.சி. டிபனில் அவனுக்கு நம்பிக்கை கிடையாது.

டிரைவினுக்குள் காரைச் செலுத்திக் கொண்டே வந்த யோகேந்திரன் கண்களில் நீல அம்பாசிடர் பட்டுவிட்டது. திக்கென்ற உணர்வுடன் மெய் பதறி, மெல்லக் காரை வேறு பக்கம் நிறுத்தினான்.

''காருக்குள்ளேயே சாப்பிடலாம்டா. எழுந்து உள்ளே போனால் கூட்டத்தில் அம்பிட்டுக் கொள்வோம்.''



சோம்பேறி ரமேஷ் அனுத்துக் கொண்டது நல்லதாகப் போய்விட்டது.

பாதாம் கேக், மெதுவடை, சாம்பார், பேப்பர் தோசை, உப்புமா என்று ஆளுக்கு ஒன்றை ஆர்டர் செய்துவிட்டுக் காருக்குள் சாய்ந்து கொண்டனர்.

யோகேந்திரன் கவனமெல்லாம் அந்த அம்பாசிடர் மேல்தானிருந்தது. சற்றுத் தொலைவில்தானிருந்தது என்றாலும் அப்பா முழுமையாக டிரைவர் ஆசனத்தில் தெரிந்தார்.

அவர் பக்கத்தில் தலை நிறைய மல்லிகைப் பூவுடன் உட்கார்ந்திருந்த உல்லி உல்லி சேலைக்காரி யார்? அப்பா சமீபத்தில் கண்டெடுத்த குண்டுமுத்தா? யோசித்தபடியே லன்றிப் பார்த்தபோது பின் ஆசனத்தில் ஒரு தலை அசைவது தெரிந்தது.

இருள் அப்பிக் கொண்டு வந்து நிலவில் மரம் எழுப்பிய நிழலில் அதனடியில் நின்ற கார் மீது வெளிச்சம் பட வழியிருக்கவில்லை. அப்பா என்னவோ தேட விளக்கைப் போட்டார். ஒரே ஒரு கணம்தான். அதற்குள் அவன் பார்த்து விட்டான். சில தினங்களுக்கு முன் அவர்கள் வீட்டுக்குக் கல்யாண பத்திரிகையைக் கொண்டு வந்து நின்றானே ஒரு பையன். கழுத்தின் கீழே முடி புரள, காதோரத்தில் கிருதாவும் அரும்பு மீசையுமாக உடம்பை நெளித்துக் கொண்டு பதட்டத்துடன் நின்றானே, அவனேதான்.

ஆமாம், அவனுக்கும் அந்தப் பெண்ணிற்கும் அப்பாவுக்கும் என்ன சம்பந்தம்?

திருமண நாள் என்று சொல்லி, காலையில் அம்மாவுக்குப் பரிசு வழங்கி அந்த நாளை விமரிசையாகக் கொண்டாடி விட்டு இங்கே மாலையில் மங்கும் வெளிச்சத்தில் அப்பா இந்தப் பெண்ணுடன் என்ன கொண்டாடிக் கொண்டிருக்கிறார்?

அன்று விமான நிலையத்தில் பார்த்த அம்ருதா இப்போது என்ன ஆனாள்? நாளைக்கு ஒரு புது கேஸா இதே நிலையில் போய்க் கொண்டிருந்தால், வேலைக்கு ஒருத்தியோடு அப்பா கூத்தடிக்கத் தொடங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

திவ்யா பார்க்காமல் போயிட்டாளே கோபத்திலே. கொதித்துப் போய் நேரே அப்பாவோடு சண்டைக்கே போயிருப்பாளே?

இந்தச் சிந்தெதுப் பசங்கள் வேறே கூட இருக்கிறான்களே பழிகாரன்கள்? அப்பாவை ரமேஷுக்கு நன்றாகத் தெரியும். அவனது அப்பாவும் இவருமாய்ச் சேர்ந்து கொண்டுதானே கிளப்பிலே அட்டகாசம் பண்றாங்க. அவரும் ஒரு மாதிரிதான் ஆனால் ரமேஷ் மூச்சுவிடமாட்டான். பார்க்காதது போல் இருந்து விடுவான்.

நாணு ஒரு தகர டப்பா. அவன் நம் அப்பாவைப் பார்த்திருக்கிறான். பெரிய மனிதர்களைத் தெரிந்தது போல் காட்டிக்கிற ஒரு பலவீனம் பயலுக்கு.

''ஹலோ சார்,'' என்று கூப்பிட்டுத் தொலைச்சுட்டால் அப்பா திரும்பிப் பார்ப்பார். மகனைப் பார்த்ததும் தடுமாறிப் போவார். பயந்துடமாட்டார். அவர் பெரிய பணங்காட்டு நரியாச்சே. ஏதாவது கயிறு திரிப்பார். அப்பா காதலில் மட்டும் மன்னன் இல்லை. கதை விடுவதிலும் கைதேர்ந்த மன்னன். ஊஹும், அப்பாவை இங்கே சந்திக்கக் கூடாது. பிறகு அந்தத் திட்டம் தவிடு பொடியாகி விடும். பல நூறு எண்ணங்கள் அவன் மண்டைக்குள் சிதறின. தோசைக்காகக் காத்திருந்தான். அம்பாசிடர் நகரும் வழியாகத் தோன்றவில்லை. உள்ளேயிருந்து எழுந்த சிரிப்பொலி அலைஅலையாகக் காற்றில் மிதந்து காதுகளில் மோதிய போது பற்களைக் கடித்துக் கொண்டு கடைக்கண்ணால் பார்த்தான்.



அப்பா கதவைத் திறந்தார். அவர்கள் மூவரும் வெளியே வந்தனர். யோகேந்திரனுக்கு மூச்சு விடக்கூடப் பயமாகத்தானிருந்தது. தடக் தடக்கென்று இதயம் அண்ட வானத்தில் ஓடும் ரயிலாக மார்புக்குள்ளே குதிக்க, வேறெங்கேயோ பார்ப்பது போல் கழுத்து வலிக்கும் வரை மறுபக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டான். விளக்கு வெளிச்சம் பளிச்சென்று மேலே விழ, அவர்கள் அருகே அப்பா வந்தபோது அவன் அரண்டு போய்விட்டான்.

''டேய் உங்கப்பாடா'' நாணுப் பயல் கண்டு பிடித்து விட்ட மகிழ்ச்சியில் கிசுகிசுத்தான்.

உயிரே போய் விட்டது போன்ற அவமானத்தில் துடித்துப் போனான் யோகேந்திரன்.

''பேசாம இரு. உனக்கு அவரைத் தெரியும்னு இந்த இருட்டிலே டமாரம் கொட்ட வேண்டாம். காரோட சுத்திட்டு அலையறேன்னு என் கழுத்தை நெறிச்சுடுவார் அப்பா.'' அடிக்குரலில் மெல்ல அதட்டினான்.

''உன் தங்கை வந்திருக்காடா. உள்ளே போய் டிபன் சாப்பிடப் போறாப்பல இருக்கு. யாருடா அந்தச் சோனிப் பயல் ஆபீஸ் ஆளா, அவர் செக்ரட்டரியா? ஏண்டா, உங்க கம்பெனியில் பெண் ஸ்டெனோ செக்ரட்டரி இதெல்லாம் கிடையாதாமே? உங்கப்பாவுக்குப் பெண்கள், ஆண்களோட வேலை செய்கிறது பிடிக்காதாமே?'' அறுத்துக் கொண்டிருந்தான் நாணு.

ஆனால் யோகேந்திரன் காதுகளிலே ஒன்றுமே கேட்கவில்லை. தங்கை என்றானே? திவ்யாவா அது? ஒரு நிமிஷம் அவன் அதிர்ந்து போனான்.

அந்தப் பெண் சாயலில் திவ்யாவைப் போலத்தான் இருந்தாள். ஆனால் நிறத்தில் கொஞ்சம் மட்டம்.

அப்பா எங்கேயோ வம்பில் மாட்டிக் கொண்டிருக்கிறார் என்பதொரு திகில் உணர்வு.

தோசையைக் கொண்டுவந்து சர்வர் வைத்தபோது அவனுக்கு வயிற்றைப் புரட்டியது.

"நாணு, இதையும் சாப்பிடுடா. எனக்கு வயிறு சரியில்லை," தட்டை அவன் பக்கம் நகர்த்தினான்.

நாணு ஒரு மினியேச்சர் குண்டோதரன். யார் எதைக் கொடுத்தாலும் வயிற்றுக்குள் தள்ளிவிடுவான்.

வேண்டாம் என்று யோகேந்திரன் ஒதுக்கிய தோசை, கேக், காப்பி எல்லாம் சடுதியில் அவன் வயிற்றில் மறைந்தன. அவர்கள் புறப்படுவதற்குள் உள்ளே சென்ற மூவரும் திரும்பி விட்டனர்.

"ஏம்மா! ப்ருட் ஸாலட் கூடச் சாப்பிடலை?" அப்பா பரிவுடன் அந்தப் பெண்ணை விசாரிப்பது கேட்டது.

"காப்பி மட்டும் போதும்னுதானே சொன்னேன்? இங்கே வந்து உட்கார்ந்துட்டா வீட்டுலே கவனிக்க ஏகப்பட்ட வேலை இருக்கே?" அழுத்தலாகப் பேசிக்கொண்டே கையில் அகப்பட்ட குரோடன்ஸ் செடியின் இலையொன்றை அவள் கிள்ளிக்கொண்டே நடந்தாள்.

"சதாசிவம்கூட, காப்பி மட்டுந்தான் சாப்பிட்டான். ஏன்?" அப்பா கேட்டபோது, யோகேந்திரன் மூளையில் அந்தப் பெயர் பளிச்சிட்டது.

கொஞ்ச நேரத்தில் அம்பாசிடர் நகர்ந்தது. கேட்டைத் தாண்டி, கார் சாலையில் கலக்கும்வரை காத்திருந்தான். பில்லைக் கொடுத்துவிட்டு அவனும் கிளம்பினான். இப்போது நண்பர்கள் அவனுக்குச் சுமையாக இருந்தனர்.

சாக்கு மூட்டைகளை உருட்டுவதுபோல் வழியில் அவர்களைத் தள்ளி விட்டுத் தனியே நிம்மதியாகச் சிந்திக்கத் துடித்தான்.



"பஸ் ஸ்டாண்டில் விட்டுடுடா." ரமேஷ் வழியில் இறங்கிக் கொண்டான்.

நாணு அட்டைபோல் பாதி வழி வரை ஒட்டிக் கொண்டுவந்து தொலைத்தான். வழியில் ஓர் இடத்தில் அவனையும் இறக்கியபின் ஆக்ஸிலேட்டரை ஆத்திரமாக மிதித்தான். கார் பறந்தது. மூச்சைப் பிடித்துக்கொண்டு அவன் வீடு வந்து சேருமுன் அப்பா வந்துவிட்டிருந்தார். அதிசயத்திலும் அதிசயம்.

"துரை ஊர் சுத்தக் கிளம்பியாச்சா? காலிலே சக்கரம் கட்டிட்டுப் பிறந்திருக்கே." முன்னறையில் பத்திரிகையைப் புரட்டியபடி சோபாவில் சாய்ந்து கொண்டிருந்தவர் அதட்டியபோது அவனால் தாங்கமுடியவில்லை. கோபத்தில் அவனது அரும்பு மீசை ஆடியது.

'தட்டிக் கேட்க ஆளில்லாததால் என்ன அட்டகாசம் பண்ணுகிறீங்க நீங்க!' கேள்வியை மனதிற்குள்ளே அடக்கிக் கொண்டான். திவ்யா வந்ததும் குச்சியைக் கிழிக்க வேண்டியது முதல் வேலை. கறுவிக் கொண்டான்.

முகத்தில் பூத்த வியர்வையைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டான். "ஞாயிற்றுக்கிழமைகூட வீட்டிலேயே கிடக்கணுமா?" ஒரு கேள்வியை அப்பா பக்கம் வீசி விட்டு மாடிப்படிகளில் ஏறினான்.

"பார்த்தியா உன் பிள்ளையை? நெத்திப்பய, எதிர்த்துப் பேசறான்!" சிகரெட்டை எடுத்து பற்றவைத்துக் கொண்டு மனைவியை முறைத்தார் ராஜாராம்.

"தோளுக்கு மிஞ்சின பிள்ளை. ரொம்பக் கண்டிச்சா நமக்குத்தானே கஷ்டம்?"

மாடிப்படி உச்சியில் நின்று அவன் ஒட்டுக்கேட்டான். அம்மா தன் பக்கம் பரிவதைக் கண்டு உள்ளம் நெகிழ்ந்தது. 'பாவம் அம்மா' என்று உடனடியாக அவள்மேல் கனிவு.

''திவ்யா கல்யாணம் முடிஞ்ச கையோட இந்தப்பயலுக்கும் ஒரு கால் கட்டுப் போட்டுடணும். இவனுடைய சிநேகிதப் பசங்களை எனக்கு பிடிக்கிறதேயில்லை. அவங்களோட சுத்திட்டுக் கழுதையாகிட்டு வரான். திடீர்னு ஒரு நாள் எவளையாவது பிடிச்சுட்டு வந்து காதல் கத்திரிக்காய்னா நம்ப மானம் கப்பலேறிடும். ரொம்ப அசிங்கம்.''

—அப்பா சொன்னதைக் கேட்டதும் பொங்கிப் போனான் அவன். 'அப்பா சமூகத்தில் செய்யாத அசிங்கத்தை மகன் செய்து விடுவானா? பலே! பலே!'

தனக்குள் முணுமுணுத்தபடி வழியில் எதிர்ப்பட்ட வட்ட மேஜை மீது ஓங்கிப் பலமாகக் குத்திவிட்டுத் தன் அறைக்குள்ளே சென்று படுக்கை மீது விழுந்தான். பல்லைக் கடித்துக் கொண்டு தங்கையின் வரவிற்காகக் காத்திருந்தான்.

ஆங்கிலச் செய்திக்குப் பின்னர் டெலிவிஷனை அணைத்து விட்டு அப்பா படுக்கச் சென்று விட்டார்.

சிறிது பொழுதில் திவ்யா வந்தாள். சம்பந்தி அம்மாளுக்கு உட்கார நேரம் இருக்கவில்லை. உடனடியாகப் புறப்பட்டு விட்டாள். சுகுணாவிற்கு ஒரே களைப்பு. பேசக்கூட அவளுக்குத் தெம்பிருக்கவில்லை.

கதவைத் தாளிட்டு அவள் தூங்கச் சென்று விட்டாள்.

தங்கைக்காகக் காத்திருந்த யோகேந்திரன், இடையே சும்மா இருக்கவில்லை.

அவர்கள் வீட்டுக்கு வரும் திருமண அழைப்பிதழ்களை எல்லாம் ஓர் இழுப்பறையில பத்திரமாகச் சேமித்து வைத்திருப்பது வழக்கம்.

'இன்னிக்கு யார் வீட்டுக் கல்யாணம்?' என்று அப்பா திடீரென்று கேட்டால் எடுத்துக் கொடுக்க உதவும் என்பதற்காகத்தான் அந்தப் பாதுகாப்பு.



அப்பா உறங்கப் போனபின் மாடி ஹாலிலிருந்த அந்த மேஜையின் இழுப்பறையைத் திறந்து ஆராயத் தொடங்கினான்.

ஐம்பதுக்கு மேல் பெரும் கத்தையாகத் திருமண அழைப்பிதழ்கள் குவிந்து கிடந்தன. தோட்டக்காரன் துரைசாமியின் மகன் கல்யாணப் பத்திரிகையிலிருந்து நீதிபதி நித்யானந்தத்தின் பேரன் கல்யாண அழைப்பிதழ் வரை அம்மா ஒன்றையும் தூரப் போடவில்லை. அப்படியே அவைகளைக் கொத்திக் கொண்டு தன் அறைக்குள் போய்ப் படுக்கை மீது பரப்பிப் போட்டான்.

அப்பா அந்தப் பையனைச் சதாசிவம் என்று கூப்பிட்ட நினைவு வந்தது.

பத்திரிகையைக் கொண்டு வந்து பவ்யமாக முன்னறை மேஜை மீது வைத்து விட்டு அவன் சென்றதும் அப்பா அதை எடுத்து புரட்டியபோது அம்மா பின்னால் நின்றபடி சொன்னதும் நினைவுக்கு வந்தன.

''அடுத்த மாசம் முப்பதாம் தேதி கல்யாணம். நடுவே இட்டத்தட்ட இரண்டு மாசமிருக்கே?''

முப்பதாம் தேதி நடக்கவிருந்த கல்யாணங்களின் பத்திரிகைகளைத் தேடியெடுத்து ஒரு புறமாக வைத்தான்.

அன்று எக்கச்சக்கமான கல்யாணம். அன்று மட்டும் பன்னிரண்டு திருமணங்கள் நடக்கவிருந்தன.

அவை ஒவ்வொன்றையும் பிரித்து நிதானமாகப் படித்தான். பெண், மாப்பிள்ளை, பெற்றோர் யாருமே அவனுக்குத் தெரிந்த வட்டாரத்திற்குள் வரவில்லை.

முடிவில் அலுப்புடன் எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து எடுத்துப் போக நினைத்தபோது கண்டுபிடித்து விட்டான்!

'யுரேகா...' என்று கத்திக் கொண்டு ஓடினானாமே ஒரு விஞ்ஞானி, அது போல மகிழ்ச்சியுடன் அதைக் கையில் பிடித்துக் கொண்டு தெருவில் ஓட வேண்டுமென்று பட்டது. தங்க எழுத்துக்களில் மின்னிய மஞ்சள் வண்ண அழைப்பிதழ் மிகவும் எளிய முறையில் அச்சிடப்பட்டிருந்தது. என் சகோதரி திருநிறைச்செல்வி இலகவதியைப் பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்டு என்ற வரிகளைப் படித்து முடித்து விட்டு, கடைசியில் இருந்த சதாசிவம் என்ற அந்த அண்ணனின் பெயரைப் படித்த போது அவனுக்கு விஷயம் முழுவதும் விளங்கிவிட்டது. மற்றவைகளை அடுக்கி மறுபடியும் அந்த இழுப்பறையில் கொண்டு போட்டுவிட்டுத் தங்கைக்காகக் காத்திருந்தான்.

திவ்யா மாடியறைக்கு வருமுன்னே அவன் வழியில் நின்று ஜாடை செய்தான்.

பெற்றோர்கள் காதுபடாத மாடி ஹாலுக்கு அப்பாலிருந்த வெளி வராந்தாவில் இருவரும் சென்று உட்கார்ந்து கொண்டனர்.

டிரைவினில் நான் கண்டதையெல்லாம் விவரித்து விட்டுச் சட்டைப் பையிலிருந்த அந்த திருமணப் பத்திரிகையை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

திவ்யா படித்து விட்டுக் குழப்பத்துடன் அவனைப் பார்த்தாள். "நீ என்ன சொல்லப் போறே, விளங்கலையே!"

தங்கை தலையை ஆட்டிய போது அவனுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது.

"இரண்டும்—இரண்டும் நாலுன்னு தெரியாத மக்கு இப்போ நீதான். புரியலையா? டிரைவினில் அந்தப் பெண்ணை அப்பாவோட பார்த்த நாளு, நீதான்னு நினைச்சான். நான்கூட ஒரு நிமிஷம் ஏமாந்து போயிட்டேன். அப்படியே உன்னை உரிச்சிட்டு ஒரு பெண் ஏறக்குறைய உன் வயசிலே நம்ப அப்பாகூட காணப்பட்டாள்



என்ன அர்த்தம்? அந்தப் பெண் அந்தப் பிள்ளை சதாசிவம் இரண்டு பேரும் சமூகவேலிக்கு அப்பால் பிறந்து விட்ட நம் அப்பாவின் குழந்தைச் செல்வங்கள். சட்டப்படி உரிமை இருந்திருந்தா இத்தனை நேரம் அவங்கரெண்டு பேரும் பங்களாவுக்குள் வந்து குடியேறியிருப்பாங்க. புரிகிறதா?"

கரப்பான் பூச்சி மேலே விழுந்து விட்டது போன்ற அருவருப்புடன் உடலைச் சிலிர்த்துக் கொண்டாள் திவ்யா. விளக்க முடியாத ஒரு சங்கட உணர்வில் அவள் ஒரு கணம் தவித்துப் போனாள்.

"அம்ருதாவைப் பற்றித் துப்புத் துலக்கப் போனதும் என்னென்ன கதைகள் கிளம்பறது பார்த்தியா? கிணறு வெட்ட பூதம் போல்...பயமாயிருக்கு யோசி."

"ஒரு கொடியைப் பிடிச்சு இழுத்தா சரம் சரமா அதன் கிளைகள் பெயர்ந்து கூட வருமே அது போல ஒரு துப்பு இன்னொரு கதையை அம்பலப் படுத்திட்டுது. இன்னும் என்னவெல்லாம் தட்டுப்படுமோ தெரியாது நீ எல்லா விதமான அதிர்ச்சிகளுக்கும் தயாராக இருக்கணும். அந்தப் பையன் வயசைக் கணக்கிடும் போது அம்மாவைக் கல்யாணம் பண்ணிக்கும் முன்பே அப்பாவுக்கு ஒரு பெண்ணோட தொடர்பு இருந்திருக்கு. அவங்களுக்குப் பிறந்த பிள்ளைகள் அந்த ரெண்டு பேரும். நமக்கே தெரியாத சொந்தமும் பந்தமும் வெளியே காத்துக் கிடக்கு." கோபத்துடன் அவன் சிரித்தான்.

"அம்மாவுக்கு இதெல்லாம் தெரியாதுன்னு நினைக்கிறியா அண்ணா?"

"அம்மாவை ஏமாத்தறது ரொம்ப சுலபம், நானே பலதடவை அவங்களை ஏமாத்தியிருக்கேனே? அப்பாவைக் கேட்கணுமா? இந்த விஷயத்தில் அவர் நடிகராச்சே. அவர் சொன்னதையெல்லம் அம்மா நம்பிக் கொள்வாங்க."

கோபத்துடன் கைவிரல்களை வேகமாகச் சொடுக்கினான் திவ்யா. ''இந்தப்பா அம்மாவைக் கைதி போல வீட்டில் அடைச்சு வச்சிருக்கிற மர்மம் இப்போ புரிகிறது. வீட்டிலேயே அலங்காரப் பொம்மையாக அம்மா இருந்தால் அப்பாவுடைய மோசடி எப்படித் தெரியவரும்? இன்னொண்ணு கவனிச்சியா? நம்ப அம்மா சொந்தக்காரங்க யாரையும் அப்பா வீட்டிலே அண்ட விடறதில்லை. அவங்க ஏழைகள்னு நினைச்சு அப்பா வெறுத்து ஒதுக்குகிறார்னு முதல்லே நினைச்சு மனசு வேதனைப்பட்டேன். இப்ப விஷயமே வேறேன்னு தெரிஞ்சு போச்சு. சொந்தக்காரங்க யாராவது வந்து அம்மாகிட்ட விஷயத்தை கேட்டு உடைச்சுடப் போறாங்களேன்னு அப்பாவுக்கு உதைப்பு.''

''இல்லே திவ்யா, காரணமே வேறே. அம்மா ரொம்ப அழகி. அதைப் பத்தி அப்பாவுக்குப் பெருமை. தன் அழகான பெண்டாட்டியை மத்தங்க யாரும் கண்ணாலகூடப் பார்க்கக் கூடாதுன்னு—ஒரு பொஸஸிவ்னெஸ். பொறாமைன்னு வச்சுக்கோயேன்.''

''இவர் மட்டும்?''

''அதுதான் சொல்லறேன். இவர் மட்டும் கண்களால் ஊரில் உள்ள அழகிகளை வாரி விழுங்கலாம். இவர் மனைவியை வேறு ஒருத்தனும் பார்த்துடக்கூடாது அத்தனை சுயநலம்'' திவ்யா சற்று உரத்த குரலில் பேசி விட்டாள்.

''இவர் தமது நடத்தையாலே மத்தவங்க வீட்டை அசிங்கப் படுத்தலாம். ஆனால் இவர் வீடுமட்டும் பரிசுத்தமாக இருக்கணும். இதென்ன நியாயம்?''

''அதனால்தான் சொல்றேன். நம்ப ரெண்டு பேரும் இவருக்கு ஒரு பாடம் கற்பிக்கணும். என்ன சொல்றே?''



''ஓ. கே''

பேச்சுக்குரல் கேட்டுச் சுகுணா விழித்துக்கொண்டாள். எழுந்து வெளியே வந்தாள்.

''அங்கே என்ன பேச்சு? தூங்காம இரண்டு பேரும் என்ன கொட்டம்?'' எரிச்சலுடன் அதட்டவே அண்ணனும் தங்கையும் திடுக்கிட்டு எழுந்து விட்டனர்.

## 5

மறுநாள் மாலை. அப்பா வெளியே கிளம்புவதைக் கண்டதும் யோகேந்திரன் தங்கைக்கு ஜாடை காட்டினான். ''லைப்ரரிவரை அண்ணனோட போயிட்டு வரேம்மா.'' திவ்யா பதிலுக்குக் காத்திராமல் கிளம்பி விட்டாள்.

நீல அம்பாஸிடரைச் சற்றுத் தொலைவில் பின்னால் வேகமாகத் தொடர்ந்தான் யோகேந்திரன். கல்யாணப் பத்திரிகையில் கண்ட அந்த முகவரி அவனுக்கு மனப்பாடமாகி விட்டிருந்தது. கோதண்டராமன் தெரு; நம்பர் எட்டு, ராயப்பேட்டை.

ஓட்டு வீடுகளும் இடையே சில மாடிக் கட்டடமும் கொண்ட நெருக்கமானதொரு தெரு அது. அதற்குள் அம்பாஸிடர் நுழைவதைக் கண்டு யோகேந்திரன் சற்றுத் தொலைவிலிருந்த ஒரு சந்தில் தங்கள் வண்டியை நிறுத்தி விட்டு இறங்கினான். தூறல் சன்னமாக விழுந்துகொண்டிருந்தது. அண்ணனும் தங்கையும் வேகமாக நடந்து வந்து அம்பாஸிடர் நின்ற வீட்டுக்கு எதிரே காணப்பட்ட ஓர் ஓட்டு வீட்டுத்திண்ணை மீது ஒதுங்கிக் கொண்டனர். அவர்களுக்கு அனுகூலமாகச் சாரலைத் தடுக்க ஒரு பழைய சாக்குப்படுதா பல பொத்தல்களுடன் தொங்கிக் கொண்டிருந்தது. காலை நீட்டியபடி நடையில் ஒரு கிழவி உட்கார்ந்திருந்தாள்.

''மழை ஆரம்பிச்சுடுச்சு, உங்க திண்ணையிலே ஒத் ஒதுங்கிக்கிறோம்.'' உத்தரவு கேட்டான் அவன்.

கிழவி ஒரு மாதிரியாக அவர்களைப் பார்த்தாள். ''ம்...'' என்றாள் முடிவில்.

திண்ணையின் மூலையில் சுருண்டு கிடந்த சொறி நாயைக் கண்டு அருவருப்புடன் உடம்பை சுருக்கிக் கொண்டாள் திவ்யா. அவளுக்கு நாய்கள் என்றாலே அலர்ஜி.

''அந்தப் பக்கம் பார்க்காதே. எதிர்த்த வீட்டை இந்தப் பெரிய ஓட்டை வழியாகப் பார்.'' அண்ணன் அதட்டினான் மெல்லிய குரலில்.

அவள் பார்த்தாள். தெரு மிகவும் குறுகலாக இருந்தது. எதிர் வீட்டில் நடப்பது பேசுவது எல்லாம் சினிமா படம் போல திண்ணையிலிருப்பவர்களுக்கு தெரிந்தது.

தாழ்வாரத்தில் நாற்காலியில் உட்கார்ந்திருந்தார் அப்பா.

தரையில் உட்கார்ந்திருந்த திலகவதி அட்டை பெட்டிகளை ஒவ்வொன்றாக எடுத்து அவரிடம் கொடுத் துக் கொண்டிருந்தாள். உள்ளேயிருந்த புடவை, நகை களை அப்பா பார்வையிடுவது புரிந்தது.

''கல்யாணத்துக்கு வாங்கினதை அப்பாகிட்ட காட்றா. ஆமாம், இதுக்கெல்லாம் பணம்? இடத்தைப் பார்த்தா ரொம்ப ஏழைகளாட்டமா இருக்கு.'' கிசுகிசுத் தாள் தங்கை.

''அப்பா கொடுத்திருப்பார். இதுகூடத்தெரியலையா?'' ஆத்திரப்பட்டான் அண்ணன்.



சிறிது பொழுதில் உள்ளேயிருந்து வந்த சதாசிவம் தட்டு ஒன்றின் மீது வைத்துக் கொண்டு வந்த குளிர் பானத்தை அப்பா எடுத்துக் குடிப்பது தெரிந்தது.

''வீட்டிலே அப்பா கூல்டிரிங்கைக் கண்டால் எரிந்து விழுவார். இங்கே பார்த்தியா. திருப்தியா எடுத்துக் குடிக்கிறார். வெளியில் வந்ததும் தன்னை எப்படி அட் ஜெஸ்ட் பண்ணிக்கிறார் பார்த்தியா?'' கோபத்தில் வெடித்தான் யோகேந்திரன்.

''சரிம்மா கண்ணு. எல்லாம் உன் மனசுக்குப் பிடிச் சுத்தானே இருக்கு? சந்தோஷமா?'' அப்பாவின் குரல் கணீரென்று கேட்டது.

வெளியே வர அவர் எழுந்தார். வாசல்வரை வழி விட வந்த அந்தப் பெண்ணைத் திவ்யா கவனித்தாள். தன்னையே கண்ணாடிக்குள் பார்ப்பதுபோல ஒரு நினைப்பில் அவள் அதிர்ந்து போனாள். அண்ணன் சொன்னது உண்மைதான். சாயலில் அந்தப் பெண் அவள் போலவே இருக்கிறாளே!

''வரட்டுமா?'' கேட்டபடி ராஜாராம் வண்டிக்குள் ஏறுமுன் சதாசிவம் அருகில் வந்தான்.

''உங்க உதவிக்கு ரொம்ப தாங்க்ஸ் அப்பா...''

யோகேந்திரனுக்குத் தலையில் அடித்தாற் போன்ற வேதனை. இன்னொரு வாலிபன் தன் தந்தையை அப்பா என்று உறவு கொண்டாடியதை அவனால் ஏற்க முடிய வில்லை. நெஞ்சை எதுவோ உறுத்தியது.

''அப்பா! அம்மா கூட இல்லை. அனாதையாயிருக் கிறோம். அதனாலே கல்யாணத்தின் போது நீங்க வந்து முடியும்வரை பந்தலிலே இருக்கணும். இல்லாட்டா என்

மனசு வேதனைப்படும் அப்பா'' அந்தப் பெண் குழைந்த போது, அப்பா அவள் கன்னத்தைச் செல்லமாக வருடினார்.

திவ்யாவுக்கு உடம்பை என்னவோ செய்தது. நெஞ்சை அடைத்த துன்ப உருண்டையை விழுங்கிக் கொண்டாள்.

''ஓ.கே.டியர்.'' அப்பா முடிவில் விடை பெற்றுக் கொண்டு வண்டியை ஓட்டிக் கொண்டு போய் விட்டார்.

அவர் தெருவைத் தாண்டியதும் அவர்கள் இருவரும் உள்ளே சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டனர்.

தூறல் நின்று விட்டிருந்தது. அழுக்குச் சாக்கினின்று எழுந்த மக்கல் வாசனையைப் பிடித்துக் கொண்டு சுவாசம் திணற நின்ற அண்ணனும் தங்கையும் வெளியே வந்தனர்.

''போயிட்டு வரோம். நன்றி'' கிழவியிடம் சொல்லிக் கொண்டு தெருவில் நடந்தனர்.

வண்டி சாலைக்குள் வந்த பின்னர்தான் திவ்யாவுக்குப் பேச்சு வந்தது.

''என்ன அநியாயம் பார்த்தியா? இதை அம்மா காதில் போடாமல் இனியும் ரகசியமாக வைப்பதில் அர்த்தமே இல்லை.''

''நீ அவசரப்படறியே! நாம் வகுத்த திட்டத்தின் முதல் கட்டத்துக்குக் கூட வரலையே. பொறுமையாக இரு.''

''அந்தப் பெண் திலகவதி நம் அப்பாவைச் சொந்தம் கொண்டாடியதைக் கேட்டு என் ரத்தம் கொதிச்சுப் போச்சு.'' சீறினாள் தங்கை.



''எனக்கு மட்டும் எப்படி இருந்தது? அந்தப் பயல் அப்பா அப்பான்னு கூப்பிட்டப்போ என் உடம்பெல்லாம் நடுங்கிற்று.''

''இதுக்கெல்லாம் நாம் ஒரு முடிவு கட்டணும். இல்லாட்டா...'' தாடை இறுகக் கோபத்துடன் வண்டியை வேகமாகச் செலுத்தினான் யோகேந்திரன்.

## 6

டிரைவர் தாமோதரன் பென்ஸ் வண்டியைத் துடைத்துவிட்டு நிமிர்ந்தான். 'கட்டினவனுக்கு ஒரு வீடு கட்டாதவனுக்குப் பல வீடுகள். அதுபோல் எஜமானுக்கு ஒரு கார். ஓட்டுகிறவனுக்கு எத்தனையோ வண்டிகள்' என்ற கொள்கையுடையவன்.

ராஜாராமின் போக்குவரத்து நிறுவனத்தில் வேலைக்கு அமருமுன் அவன் திரைக்குப் பின்னால் போய் விட்ட ஒரு மாஜி நட்சத்திரத்தின் 'வேலியண்டை' ஓட்டிக்கொண்டிருந்தான். பின்னர் ஒரு பெரிய வியாபாரியின் 'பியூஷோ'வை ஓட்டும் வாய்ப்புக் கிடைத்தது. இரண்டு வருடங்களுக்கு முன்னர்தான் அவன் அந்த கம்பெனியில் வேலை பார்த்த தலைமைக் கணக்கரின் பலத்த சிபாரிசினால் ராஜாராமிடம் வேலைக்கமர்ந்திருந்தான்.

கம்பெனி கார்கள் அனைத்தையும் அவன் ஓட்டினாலும், இந்த 'பென்ஸ்' மீது கொள்ளை ஆசை. ஸ்டியரிங்கைப் பிடித்தால் குழந்தைபோல இழுத்த இழுப்பிற்கு வளைந்து எப்படி ஓடுகிறது என்ற பிரமிப்பு. சப்தமிடாது தார் ரோட்டில் பட்டும் படாததுமாகப் பறப்பதை அவன் ரசித்தான். இடுப்பிலே கையை வைத்துக் கொண்டு, வண்டியை வலம் வந்து அழகு பார்த்தான். தோட்டத்து விருட்சிப் பூச் செடியிலிருந்து ஒரு கொத்துப் பூவை ஒடித்து,

உள்ளே மாட்டியிருந்த அந்தச் சிறிய பெருமாள் படத்தின் மீது செருகினான்.

வண்டியை ஓட்டத்தொடங்குமுன் அவன் தன் இஷ்ட தெய்வத்தைத் தொழாமல் தொடுவதில்லை. "இரும்பைத் கையில் பிடிக்கிறே. அது சனீஸ்வரனுக்குப் பிரீதியான சங்கதி. அதனால் நம்ம பெருமாளை வேண்டிக்கிட்டுப் புறப்படுப்பா. உன்னை நம்பித்தான் நான் வாழ்ந்துகிட்டிருக்கேன். மறக்காதே." அவன் வீட்டை விட்டுக் கிளம்புமுன் அம்மாவின் உபதேசம். தெய்வ நம்பிக்கையில் வளர்க்கப்பட்டவன். பழிபாவத்திற்கு அஞ்சுகிற யோக்கியமான பிள்ளை. வந்த நாளிலிருந்து ஐயாவிடம் நல்ல பெயரெடுத்து விட்டோம் என்று உள்ளூர மகிழ்ச்சி.

இரண்டு தினங்களுக்கு முன் கொட்டிய மழையில் பென்ஸ் ஒரு பெரும் விபத்திலிருந்து தப்பியது. அதை நினைக்கையிலேயே அவன் குடல் நடுங்கியது. தடம் நகர்ந்து வழுக்கி, எதிரே வரும் வண்டியோடு முட்டிக் கொள்ள இருந்தபோது அவன் எப்படிப் பயந்து நடுங்கிப் போனான்! நல்லவேளை, ஆண்டவன் அவனையும் காப்பாற்றினார். அவனது முதலாளியையும் முழுதாக வீடு சேர்த்து விட்டார். பெருமாள் படத்தின் மீது பட்டிருந்த தூசியைக் கைக்குட்டையால் துடைத்தான்.

அன்று மாலை அலுவலகத்தில் ஒரு மீட்டிங். அது முடிந்த பின்னர்...கிளப்புக்கு வண்டியை ஓட்ட உத்தரவிட்டார் ராஜாராம்.

சாதாரணமாக அலுவலக நேரத்திற்கு மட்டும் வண்டியோட்ட அவனுக்கு மாதம் முன்னூறு ரூபாய் சம்பளம், சீருடை எல்லா வசதிகளும் கொடுக்கப்பட்டிருந்தன.

எஜமானுக்கு எப்பொழுதாவது ஐந்து மணிக்கு மேல் வண்டி ஓட்ட நேரிட்டால் அதற்குத் தனிப்பட்ட முறையில் சம்பளம் கிடைத்தது. வியாபார சம்பந்தமாக வெளி



யூரிலிருந்து வருகிறவர்களை விமான நிலையத்திற்குச் சென்று அழைத்து வந்து ஹோட்டலுக்கும் கம்பெனிக்கும் இடையே பலமுறை அவன் ஓட்ட நேர்ந்தால் ஓவர் டைம் சம்பளம் கம்பெனி கொடுத்தது. அவனது அமைதியான குணத்தைக்கண்டு மனம் மகிழ்ந்து போய் வந்தவர்கள் போகுமுன் கையில் ஏதாவது கொடுத்தார்கள். அம்மாவையும் எங்காவது அழைத்துப் போக நேரிட்டால் அதற்கும் தனியாக அம்மாவே ஏதாவது பார்த்துக் கொடுத்தாள். இப்படி அவன் சம்பளத்தோடு கிம்பளத்தின் மூலம் மாதம் நானூறு ரூபாய் வரை தாராளமாகச் சம்பாதித்துக் கொண்டிருந்தான்.

கிளப்பிலிருந்து புறப்பட்டவர் தள்ளாடுவதைக் கண்டான். அன்று அவர் அளவுக்கு மீறிக் குடித்திருந்தார். "அப்படியே வழியிலே நுங்கம்பாக்கம் சாஸ்திரி அவென்யூவிலே கொஞ்ச நேரம் அந்த எட்டாம் நம்பர்கிட்ட நில்லு" உத்தரவிட்டார் அவர். "இங்கே நில்லு...அங்கே போ..." என்று எஜமான் ஏவியதை மட்டுமேதான் அவன் செய்தான். அறியவேண்டுமென்ற ஆவலில் அந்தந்த இடத்தைப் பற்றித் தன் உள்ளத்துக்குள்ளேயே குறித்துக் கொண்டிருந்தான். ஆனால் வெளியில் மூச்சு விடவில்லை.

நுங்கம்பாக்கத்திலிருந்து திரும்பியபோதுதான் அந்த டிராபிக் லைட் அருகே வந்தபோது-மழை கொட்டோ கொட்டு என்று பொழிந்து கொண்டிருந்த சமயம் எஜமான் எரிச்சலோடு அதட்டினார். நிதானம் இல்லாதபோது பச்சையும் சிவப்பும் அவர் கண்களுக்கு ஒரே நிறமாகத்தான் புலப்பட்டன போலும்.

"ஏண்டா மடையா நிக்கறே? எனக்குத் தலைவலி பிளக்குது. வீட்டுக்குச் சீக்கிரம் போகணும் போடா—"

விளக்குச் சிவப்பாக மாறிவிட்டபோது அவர் துரிதப்படுத்ினார். அவன் கேட்காதது போல் இருந்தான்.

"நா சொல்றேன். என்ன பேசாம வேடிக்கை பார்க்கிறே?" அவர் திடீரென்று பின்னாலிருந்தபடி கத்தியதும் பயந்துவிட்டான். பச்சை, சிவப்பு மாறி ஆரஞ்சு வந்த சமயம் ஆக்ஸிலேட்டரை மிதித்தான். ஒரே பாய்ச்சலாக வண்டி ஓடியது. அது சமயம் எதிர்பக்கத்திலிருந்து வந்த ஒரு லாரி வெகு அருகில் வந்துவிட்டது. தாமோதரன் பதறிப் பழுது பார்க்க வெட்டிய குழியருகே குவிந்து கிடந்த மண் சேறாகத் தெருவில் பரவி நின்ற பகுதியில் சக்கரம் ஓட அது சுழன்று வழுக்கி மறுபுறம் வண்டியை இழுக்க...எல்லாம் ஒரு வினாடியில்தான் நடந்தது.

அம்மா நித்தமும் கும்பிட்ட சாமி அவனைக் கைவிடவில்லை. இடது பக்கம் இழுத்துக்கொண்டு எங்கேயோ ஓடிய வண்டியை அவன் சாமர்த்தியமாக வளைத்து ஒடித்து ஓட்ட மறுபடி அந்தச் சாலையின் இடது பக்கத்திலே ஒழுங்காகக் கொண்டு நிறுத்தி மேலே தொடர்வதற்குள் பாட்டி போட்ட செல்வெண்ணெய் வெளியில் வந்துவிட்டது. பையன் வெதறிப் போய்விட்டான்.

முட்டாள்! வண்டியையும் என்னையும் தூளாக்கப் பாத்தியே!" அதட்டினார் எஜமான்.

அதை அவன் பாராட்டவில்லை. அவர் பேசவில்லை. உள்ளே இருக்கும் விஷம் பேசுகிறது என்பது அவனுக்குத் தெரியும். சாதாரண நினைப்பில் அவர் அப்படி ரித்து விழயாட்டார் வாயில் வந்தபடி வசை பாடமாட்டார்.

அமுத்தலாக முகவாயை நீட்டி, தலையை நிமிர்த்திப் பெரிய மனுஷத்தனத்தில் உறைந்துபோய் உட்கார்ந்திருப்பார்.

மறுநாட்காலை அவர் அத்தனையையும் மறந்துவிட்டிருந்தார். "தாமு, அம்பாஸிடரை எடு," என்று சொல்லிக்கொண்டே வந்தார்.



விரைவில் அவன் எழுந்து கதவைத் திறந்து அவரை உபசரித்து ஏற்றியபின் வண்டியோட்டத் துவங்கினான்.

மாலை வீடு வந்ததும் அவர் அவனை அனுப்பிவிட்டுத் தாமே கிளம்பினார்.

வேலை இடைவேளையின்போது லாரி ஓட்டும் சில டிரைவர்களும் அவனும் சாப்பிடும் இடத்தில் சந்திப்பது உண்டு. லாரி ஓட்டுமுன் தாங்கள் ஓட்டிய காரின் விவரங்கள், அதன் எஜமானர்களின் போக்கு எல்லாம் அங்கே ஒளிவு மறைவின்றி அலசப்படும்.

"ஏம்பா! தம்பி, தாமோதரம்! ஐயாவைப் பார்த்தா ஊட்டி தக்காளிபோல தளதளன்னு இருக்காரே. 'சின்ன வீடு' ஏதாச்சும் உன் பார்வையில் பட்டிருக்கா?" ஒருநாள் வம்புக்கார டிரைவர் ஒருத்தன் அவனிடம் விசாரித்தான்.

"இருக்கும். இல்லாமலா போகும்? அத்தனை பணத்தையும் ஒரே வீட்ல செலவழிச்சா அப்புறம் எப்படி பெரிய மனுஷனாக முடியும்?" உரக்கச் சிரித்தான் ஒரு துணிச்சல்காரன்.

எஜமான் எங்கே போகிறார், யாருடன் பேசுகிறார், எத்தனை நெருக்கம் என்பதெல்லாம் தாமோதரனுக்கும் அத்துப்படிதான். ஆனாலும் வாயைத் திறப்பது எஜமானனுக்குத் துரோகம் செய்வதாகும் என்ற கட்டுப்பாடு காரணமாக, "எனக்கென்னப்பா தெரியும்? நான் பழக்கமில்லாத புதிய டிரைவர்!" என்று மழுப்பிவிடுவான்.

யோசித்தபடி நின்றபோது எஜமானனின் கால் செருப்புச் சப்தம் கேட்கவே திரும்பினான். வேலையாள் கொண்டு வந்து ப்ரீஃப்கேசை வைக்க, கதவைத் திறந்து தாமோதரன் பணிவுடன் உபசரிக்க அவர் ஏறிக்கொண்டார்.

ஆபீஸ் வாசலில் இறங்கும் போதுதான் அவர் பேசினார். "இன்னிக்கு அம்மாவுக்கும் குழந்தைகளுக்கும் கடைக்குப் போகணுமாம். பெண்ணை எடுத்துக்கிட்டுப் போய்ட்டு வா" கூறிவிட்டு உள்ளே சென்றுவிட்டார்.

வண்டியை விட்டு வாசலில் நிறுத்திவிட்டு அவன் அவர்களுக்காகக் காத்துக்கொண்டு நின்றபோதுதான கவனித்தான்.

எஜமானரது மகள் திவ்யா வெளியே போகத் தயாராக உடுத்திக் கொண்டு வராந்தாவிலே வந்து நின்றாள். "ஹலோ தாமு வந்திட்டியா?" சிரித்தபடி கேட்டுக் கொண்டே அவன் அருகே வந்து நின்றபோது அவள் மேனியினின்றும் கமழ்ந்த அந்த சென்ட்டின் மணம் கம்மென்றிருந்தது.

காதுகளிலும், கழுத்திலும் வைரங்கள் பளிச்சிட, உடலை ஒட்டித் தழுவி நின்ற அந்த ஷிபானின் நைலான் புடவையில் அன்று அலர்ந்த ரோஜா மலர்போல் அவள் அழகாக இருந்ததை வியப்புடன் பார்த்தான்.

'சே இப்படியா முறைப்பது?' தன்னையே கடிந்தபடி தலையைக் கவிழ்ந்துக் கொண்டான்.

"தாமு! எனக்கு இந்த வண்டியை ஓட்டக் கொஞ்சம் சொல்லிக் கொடுக்க மாட்டியா?" குழைந்தபடி திவ்யா அவனைத் தொட்டுத் தோளைத் தட்டினாள்! அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"ஐயா உத்தரவு கொடுத்தா சொல்லித் தரேன்" அவளை நேராகப் பார்க்காமல் முணகினான்.

"இந்த வெள்ளைச் சீருடை உனக்கு நல்லா இருக்கு. ஆமாம், நீ ஏதாவது தேகப் பயிற்சி செய்யறியா? உடம்பு ரொம்ப 'டிரிம்மா' இருக்குதே!"



குப்பென்று முகம் சிவந்து போனான் அவன். நெஞ்சு படபடவென அடித்தது. உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டியது. திடீரென்று இந்தம்மாவுக்கு என்ன வந்து விட்டது? என்னவோ மாதிரி பேசுகிறாங்க?

"ஆமாம், கழுத்து செயின்ல என்னமோ டாலர் போட்டுக்கிட்டு இருக்கியே." கேட்டபடி அருகே அவள் நெருங்கிய போது, நெருப்பை மிதித்தவன் போல் தவறாத் துடன் ஓரடி பின்னால் நகர்ந்தான். எங்கே தன்னை அவள் மீண்டும் தொட்டு விடுவாளோ என்ற அச்சம்.

"எங்க குல தெய்வம் பெருமாள்சாமி டாலர், திருப்பதியில் வாங்கியது. தங்கம் இல்லீங்க, கவரிங்."

"ரொம்ப சாமி பக்தியோ?" அவள் முத்துப் பல் தெரியச் சிரித்தாள். அவன் குழம்பினான்.

"திவ்யா!" அம்மா உள்ளேயிருந்து குரல் கொடுத்தாள். "இதோ வந்திட்டேன். திவ்யா உள்ளே விரைவதற்குள் அம்மாவே முன்னறைக்கு வந்து விட்டாள்.

மாடியிலிருந்தபடியே அவள் கவனித்து விட்டிருந்தாள். கோபத்திலே அவள் முகம் ரத்தமாகிவிட்டிருந்தது. "உனக்குப் புத்தியிருக்கா?" எடுத்த எடுப்பிலேயே அதட்டினாள். அந்த வார்த்தைகள் கணீரெனத் தாமோதரன் காதுகளில் ஒலித்தன. "வேலை செய்கிறவங்க கிட்டவிட்டு எஜமானி பேசுகிற பேச்சா? ஒரு ஆம்பிள்ளையைத் தொட்டு என்ன பேச்சு வேண்டிக் கிடக்குது?"

"அதனால் என்னம்மா தப்பு? டாக்டர் வந்தா நம்மைத் தொட்டுப் பார்த்து ஊசி போடறதில்லையா?"

"திவ்யா! நீ அத்து மீறி நடக்கிறே. இது நல்லா இல்லை. சொல்லிட்டேன். உங்கப்பா மட்டும் இதைப் பாத்திருக்கணும். உன்னை வெட்டிப் புதைச்சிருப்பார்.

அந்த டிரைவர் தோலை உரிச்சி உப்புக் கண்டம் போட்டிருப்பாரு.''

''போங்கம்மா. நீங்க ஒரு பத்தாம் பசலி. நம்பகிட்ட வேலை செய்யறவங்களை அடிமையாட்டமா நடத்தக் கூடாதும்மா.''

''போதும் வாயை மூடு'' அம்மா அடக்கினாள். வெளியே செல்ல வண்டிக்குள் ஏற வந்த எஜமானியின் கண்கள் அனலாக எரிவதைக் கண்டு அவன் அரண்டு போய் விட்டான். அந்த மாதிரி கோபத்தில் அந்தம்மாளை அவன் இதுவரை பார்த்ததே இல்லை.

அவன் ஏதும் தவறு செய்யவில்லையே?

இரண்டு தினங்களுக்குப் பின்னர் மீண்டும் ஓர் அதிர்ச்சி அவனுக்கு. சம்பந்தியம்மாள் வீட்டுக்கு மகளும் மனைவியும் சென்று க்ஷேமம் விசாரித்து வரவேண்டும் என்பது ராஜாராமின் உத்தரவு. சித்தார்த்திடமிருந்து கடிதம் வராதது அவருக்கு மிக்க கவலையைக் கொடுத்திருந்தது.

சாமான் அறையில் கருணா கூடையிலிருந்து சில ஆப்பிள், ஆரஞ்சுப் பழங்களைப் பிளாஸ்டிக் பையில் எடுத்துப் போட்டு நிரப்பிக் கொண்டிருந்தாள்.

வாசலில் காரைக் கொண்டு வந்து நிறுத்தி விட்டு ஒரு புறம் பணிவாகத் தாமோதரன் நின்று கொண்டிருந்தான்.

''தாமு! காப்பி சாப்பிடுகிறாயா? கொண்டு வந்திருக்கேன்.'' வாசலுக்கு வந்த திவ்யா அன்புடன் கேட்டபோது அவனுக்குத் தலை சுற்றியது.

எப்போதாவது அந்த வீட்டில் அவனுக்கு காப்பி உபசாரம் நடப்பதுண்டு சமையல் ஆள் பின் வராந்தாவுக்கு அவனைக் கூப்பிட்டு ஒரு டம்ளரில் காப்பியை நிறைத்துக் கொண்டு வந்து தானே கொடுத்து உபசரிப்பார்.



தீர்ந்து கொண்டே வாங்கி மடமடவென்று குடித்து விட்டு ஒரு நிமிஷங்கூட அனாவசியமாகத் தாமதியாமல் அவன் வாசலுக்கு விரைந்து விடுவான்.

முதலாளியின் பிரீப் கேஸைத் தூக்கிக் கொண்டு வரும்போது முன்னறையை விட்டு அப்பால் ஓர் அடிகூட உள்ளே எடுத்து வைத்ததில்லை.

தொப்பியை எடுத்து வண்டியின் ஆசனத்தில் வைத்து விட்டுக் குனிந்த தலையோடுதான் உள்ளே வருவான்.

அம்மா ஏதாவது உத்தரவிட்டால் பூமியைப் பார்த்தபடியே பதிலளிப்பான்.

திவ்யாவிடமோ, யோகேந்திரனிடமோ அவன் ஒரு தடவை கூட வீண்பேச்சுக்கள் வைத்துக் கொண்டதில்லை. அப்படிப்பட்ட நல்ல அடக்கமான பிள்ளைக்கு இதென்ன சோதனை?

''சமையல் ஆளுக்கு உடம்பு சுகமில்லை. அதனால் நானே எடுத்து வந்தேன். அந்த பிரம்பு நாற்காலியிலே உட்கார்ந்து சாப்பிடு.'' அவள் டம்ளரை நீட்டிய போது அதை வாங்க அவன் கரம் நடுங்கியது.

''எவ்வளவு படிச்சிருக்கே?'' புன்னகைத்தபடி அவள் கேட்ட போது காப்பி அக்கினித் திரவம் போல் அவன் நெஞ்சைச் சுட்டது.

டம்ளரைக் கீழே வைத்துவிட்டு வாயைத் துடைத்துக் கொண்டான்.

''எஸ் எஸ் எல்.சி வரை படிச்சிருக்கேன்.''

''வீட்டிலே உன்னோடு யார் இருக்காங்க?''

''அம்மா மட்டுந்தான் இருக்காங்க. அப்பா என் சின்ன வயதிலேயே இறந்துட்டார்.''

''இன்னும் கல்யாணம் ஆகலையா?''

அவன் முகம் செவேலென்று மாறியது. நெஞ்சு படபடக்க உதட்டைக் கடித்துக் கொண்டான்.

''கல்யாணத்திற்குப் பெண் பார்த்திருக்காங்களா?''

பேசமுடியாமல் அவன் தலையை ஆட்டினான். பின்னர் ''கொஞ்சம் மன்னிச்சுக்குங்க. லாக்புக்கை காரஜில் வச்சுட்டேன்,'' என்றவன் வேகமாகப் படிகளில் இறங்கித் தோட்டத்திற்குள் சென்று மறைந்து கொண்டான். 'அப்பாடா...' என்று நிம்மதியாக மூச்சு விட்டான்.

'ஆமாம், இந்தப் பெண்ணுக்கு என்ன ஆச்சு? ஏன் இப்படி வந்து வம்பு செய்கிறாள்?'

முதலாளி ராஜாராமின் கோபம் கம்பெனி முழுவதும் பிரசித்தமாயிற்றே! எஜமானியம்மா சொன்னது போல் திவ்யா அவனிடம் நெருங்கிப் பழகுகிறதை அப்பா பார்த்து விட்டால்? தீர்த்து கட்டிவிடுவாரே... வேலைக்கே வெடி வச்சிடும் போலிருக்கே இந்தப்பெண்ணின் போக்கு அவனுக்குள்ளே கலவரம் விஸ்வரூபத்தில் உருவெடுத்து உலுக்கத் தொடங்கியது.

அன்று மாலை கல்லூரியிலிருந்து அவளை அழைத்து வரும் போது அவனுக்கு ஒரே குழப்பம்.

எப்பொழுதும் மாலை அவள் தன் அண்ணனுடன் தான் திரும்பி வருவாள். எப்போதாவது மாலையில் வகுப்புகள் இல்லாவிடில் காருக்காக அப்பாவுக்கு போன் பண்ணுவது வழக்கம். அது சமயம் அவனை அவர் நம்பிக்கையோடு தனியாகத்தான் அனுப்பிவைப்பார்.

அன்று அப்படித்தான் நம்பிக்கையுடன் அவர் வண்டியை மகளுக்கு அனுப்பி வைத்திருந்தார்.



பெரிய மனிதர் வீட்டுப்பெண் என்ற கௌரவத்தோடு இத்தனை நாளும் பின் ஆசனத்தில் மௌனமாக உட்கார்ந்து வருகிறவள் இன்று தானே வலியப் பேச்சுக் கொடுத்தாள்.

கையிலிருந்த ஸ்கேல் சட்டத்தினால் பின்னாலிருந்த படியே லொட்டென்று அவன் தலைமீது தட்டியபோது நடுங்கிப் போய் விட்டான்.

''என்னம்மா, என்னவேணும்?'' பதட்டமாகக் காரை ஓர் ஓரத்தில் கொண்டு நிறுத்திவிட்டுத் தயக்கத்துடன் திரும்பிப் பார்த்தான்.

''மேடும் பள்ளமும் என்கின்ற படம் ரொம்ப நல்லா இருக்காமே, நீ பார்த்திருக்கியா?'' பற்கள் பளிச்சிட மோகனமாகச் சிரித்தாள். அவளையும் மீறிய ஒரு மயக்கம் அவளை என்னவோ செய்து விட்டது.

அவன் படத்தைப் பார்த்து விட்டிருந்தான். புதிய முகங்களையே வைத்துக் கொண்டு ஒரு புதிய டைரக்டர் எடுத்த வண்ணப்படம் அது. ''புதிய மொந்தையில் பழைய கள். அலுத்து உளுத்துப் போன கதை,'' என்று பத்திரிகைகள் சில கடுமையாக விமரிசித்திருந்தும் படம் ஓகோ என்று ஓடிக் கொண்டிருந்தது.

சிங்கப்பூர், ஜப்பான் என்று வெளிநாட்டுப் பின்னணியில் இனிமையான பாடல்களைப் போட்டு, குளு குளு கலரில் பணக்கார வீட்டுப் பெண் படிப்பில்லாத வேலைக்காரனைக் காதலித்துக் கல்யாணம் செய்து கொள்ளும் கதையை, தேவையான மசாலாக்களுடன் திணித்து விட்டிருந்தார் டைரக்டர். படம் வெற்றியுடன் ஓடியது.

உடம்பு முழுவதும் சூடாகி விட்டது போன்ற மயக்க உணர்வு. பயமா, இன்பமா? தெரியாத குழப்பத்தில் நெஞ்சு திக் திக்கென்று அடித்துக் கொண்டது. அவன்

அசட்டுப் புன்னகையுடன், அவளை மறுபடியும் திரும்பிப் பார்த்தான். பணக்காரர் மகள் ஏழை டிரைவரைக் காதலிப்பது தவறா? உள்ளுக்குள்ளே அப்படி ஒரு கேள்வி... ஒரு தனி ஆசை. என்னவோ சொல்ல வாயெடுத்தான். காய்ந்து போன தொண்டையிலிருந்து பேச்சு எழும்பவில்லை. எதிர்ப்புறத்து படக் கடையில் சுவரில் நட்ட நடுவில மிகப் பெரிய அளவில் தொங்கிய படத்திலிருந்து ஆஞ்சநேயர் அவனை உக்கிரமாக பார்த்தார். பிடரியைப் பிடித்து யாரோ ஓர் உலுக்கு உலுக்கியது போன்ற அதிர்ச்சி. விழிப்படைந்தான்.

கொஞ்ச நாட்களாக அவன் ஆஞ்சநேயர் வழிபாட்டில் இறங்கியிருந்தான்.

"ஸ்நானம் பண்ணி, சுத்த பத்தமாக ஹனுமான் படத்திற்கு அடியிலிருந்து ஆரம்பித்து வால் நுனி முடியும் வரை நாற்பத்தைந்து நாட்கள் பொட்டு வைத்து பூஜித்து வந்தால் எடுத்த காரியம் வெற்றியடையும்." வீட்டுக்கு வந்த பெரியவர் ஒருவர் சொல்லிவிட்டுப் போயிருந்தார்.

நண்பன் ஒருத்தனுடன் கூட்டாகக் கார் ரிப்பேர் கடை ஒன்றைச் சிறிய அளவிலே ஆரம்பிக்க வேண்டுமென்பது அவன் திட்டம். ஒழிந்த வேளைக்கு உபரி வருமானம் தேவை என்ற ஆவல். ஆஞ்சநேயர் பூஜை ஆரம்பித்தும் சில நாட்களாகியிருந்தன.

'உடம்பு மட்டும் சுத்தமாயிருந்தால் போதாது. மனசும் பரிசுத்தமாக இருக்கணும். ஹனுமான் உக்ரமானதெய்வம்' அம்மா வேறு எச்சரித்துவிட்டிருந்தாள்.

'என்னைப் பார். என் பிள்ளையைப் பார்' என்று ராஜகுமாரனை மயக்க வந்தாளாம் ஒரு மோகினிப் பிசாசு. அம்மா அவன் சிறு குழந்தையாக இருக்கும் போது சொன்ன கதை அவனைத் திரும்பிப் பார்த்தவர்கள் கல்



லாகிப் போயினர். புத்திசாலி இளவரசன் திரும்பிப் திரும்பிப் பாராது ஒரே ஓட்டமாக ஓடித் தப்பித்தானாம்.

அவன்—முதலாளி ராஜாராமின் கார் டிரைவர். கம்பெனியில் ஒரு தொழிலாளி. ஆனால் அம்மாவுக்கு ஒரே இளவரசன். 'என்னைப் பார் என் பிள்ளையைப் பார்,' என்று திவ்யா போடும் மந்திர மாயங்களுக்கு அவன் மயங்கப் போவதில்லை. நிச்சயம்.

உறுதியுடன் அவன் திரும்பிப் பார்க்காது வண்டியை வேகமாக ஓட்டிக்கொண்டு சென்றான்.

திவ்யா வேறு என்னவோ பேச முயன்றாள். அவன் பதில் கொடுக்கவில்லை.

## 7

அன்று இரவு டிரைவர் தாமு வீடு திரும்புவதற்கு வெகு நேரமாகிவிட்டது. மந்தைவெளிப் பகுதியில் நெருக்கமானதொரு தெருவில்தான் அவர்கள் குடியிருப்பு. ஒண்டுக் குடித்தனம். முன் பகுதியைத் தான் அவர்கள் வாடகைக்கு எடுத்துக் கொண்டிருந்தனர்.

அவன் தாய் மீனா அரசாங்க ஆஸ்பத்திரியில் ஆயா வேலை பார்த்து வந்தவள். ஓய்வு பெற்றவள். பென்ஷன் ஏதோ வந்து கொண்டிருந்தது. மகன் சம்பாதிப்பதை வைத்துக் கொண்டு கட்டும் செட்டுமாகக் குடும்பத்தை நடத்திக் கொண்டிருந்தாள்.

பத்து மணி அளவில் கதவைத் தட்டிய மகனைக்கண்டு தாயார் பயந்து போனாள். காய்ச்சலடித்தது போன்ற முகம். சோர்ந்து காணப்பட்டான்.

''தாமு, ஏன் இத்தனை நேரம்?'' அம்மா அவனை அன்புடன் விசாரித்தாள்.

''முதலாளி ஹைதராபாத்துக்குப் போனார். அவரை விமானத்தில் ஏற்றிவிட்டு வீட்டில் காரை வைத்து விட்டுப் பஸ் பிடித்து வந்தேன்.'' அவன் முகத்தில் வழக்கமான புன்னகை இல்லை; தொண்டை கம்மிவிட்டது போன்ற குரல்.

பச்சைத் தண்ணீரில் குளித்து விட்டு லுங்கி, பனியனுடன் சாப்பிட உட்கார்ந்தான்.

வெங்காய வத்தல் குழம்பு அவனுக்கு மிகவும் பிடித்தது. சாதத்தின் மீது நெய் ஊற்றி அம்மா குழம்பைத் தாராளமாக வார்த்தாள். பிசைந்து ஒரு வாய் அள்ளிப் போட்டுக் கொண்டான். விழுங்கவே முடியாது போன்ற வேதனை. சட்டென்று எழுந்து கையைக் கழுவிக் கொண்டான். கயிற்றுக் கட்டிலின் மீது படுக்கையை விரித்துக் கொண்டு சாய்ந்து விட்டான்.

அம்மாவுக்குக் கவலை தாங்க முடியவில்லை. வேலை செய்கிற பிள்ளை. உடம்புக்கு என்ன? கட்டிலின் ஓரத்தில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

''தாமு...என்னப்பா சங்கதி? ஒரு மாதிரியா இருக்கியே! உடம்பு ஏதாச்சும்...?''

''மனசு தாம்மா சரியில்லை. அதனால்தான் பசிக்கலை. மன்னிச்சுக்கோங்க. அத்தனை சாப்பாட்டையும் வீணடிச்சுட்டேன்.''

''அது போகட்டும். கம்பெனியில் ஏதாச்சும் மனசுக்குப் பிடிக்காதது நடந்திச்சா?''

''இல்லேம்மா. வந்து...வந்து...'' அவன் தயங்கினான்.



''முதலாளி கோவிச்சுக்கிட்டாரா?''

''இல்லேம்மா. அவர் பொண்ணுதான் சில நாளா எங்கிட்ட ஒரு மாதிரி நடந்துக்கிறது. பயம்மா இருக்கு...''

வயிற்றில் நெருப்பைக் கொட்டியது போன்ற திகில் அவளுக்கு. ''விவரமாச் சொல்லுப்பா.'' பதட்டமாகக் கேட்டாள்.

''கொஞ்சநாளா முதலாளி மகள் எங்கிட்ட நடந்துக்கிற முறை விசித்திரமா இருக்கும்மா. என்னால் நம்ப முடியலை. நம்பாமலும் இருக்க முடியலை. பேச்சும் சிரிப்புமாக எங்கிட்ட ரொம்ப நெருங்கிப் பழக முயற்சிக்குதும்மா.''

''தாமு! நீ சொன்னது உண்மையா? அந்தப் பொண்ணு அப்படி நடக்கிறதுக்கு நீ ஏதாவது இடம் கொடுத்தியா? உண்மையைச் சொல்லிடு. எனக்கும் ரொம்பப் பயமா இருக்குடா'' தாயார் பதறிப் போனாள்.

''நான் எப்பவும் போலத்தான் மரியாதையாக் கொடுத்த வேலையைக் கவனிச்சுட்டு வந்துட்டிருந்தேன். ஒரு பத்து நாளைக்கு முன்னால் திடீர்னு ஒரு நாள் அந்தப் பொண்ணுதான் என்னைத் தொட்டுப் பேசிச்சு.''

''அடிப்பாவிப் பெண்ணே!''

''கல்யாணமாச்சா, பெண் பார்த்திருக்காங்களான்னு கேட்டுட்டு ஒரு மாதிரி சிரிச்சுது. இன்னிக்கு நான் காரை விட்டுட்டு வீட்டுக்குக் கிளம்பறபோது, 'தாமு! உன்னை எனக்கு ரொம்பப் பிடிக்கிறது'ன்னு கிட்ட வந்து மெல்லச் சொல்லிட்டு உள்ளே போயிட்டது. எனக்குப் பயத்திலே காய்ச்சலே வந்தாப்பல உடம்பு ஆடிப்போச்சம்மா.''

மீனா முகவாயில் கையை வைத்தபடி சில விநாடிகள் அயர்ந்து போனாள். ''தாமு, அந்தப் பெண்ணை விட்டுத் தள்ளு. உம் மனசு இந்த விஷயத்தைப் பத்தி என்ன நினைக்கிறது? எனக்கு உண்மை தெரிஞ்சாகணும்'' கண்டிப்பான குரலில் அதட்டினாள்.

''உங்ககிட்டே ஒளிக்க மனசு இல்லே. உண்மையைச் சொல்றேன். பத்து நாளா எனக்கு ஒரே குழப்பம். காப்பியைக் கொண்டு வந்து கொடுத்து உபசரிச்சப்போ ஒரு நிமிஷம் நான் மயங்கித்தான் போயிட்டேன்.''

''அடப் பாவி! கெடுத்தியே காரியத்தை!''

''அவசரப்படாதீங்க. அப்புறம் நானே சுதாரிச்சுக் கொண்டேன். இந்தப் பெண்ணு ஏன் இப்படி நடந்துக்கிறதுன்னுதான் புரியலை வேடிக்கை செய்து என்னை அவமானப்படுத்த ஆசைப்படுதா? இல்லே, என் வேலைக்கு வெடி வைக்கப்பார்க்கிறதா? அல்லது நிசமாகவே அதுக்கு என் மேலே ஒரு இதுவா?'' அவன் தாயின் முகத்தைப் பார்த்துவிட்டு மேலே பேசத் தயங்கினான்.

''இதோ பார் தாமு! நீ இந்தப் பெண்ணை நம்பவே நம்பாதே. ஏற்கனவே ஒரு பையனுக்கு நிச்சயம் பண்ணிவிருக்காங்க. அப்படியிருக்கும்போது அத்து மீறி உங்கிட்ட பச்சைச் சிரிப்புச் சிரிச்சா, அதுக்கென்ன அர்த்தம்? குணம் கெட்ட பொண்ணுன்னு புரியுது.''

''பணக்காரப் பொண்ணு. படிச்சது. அழகான பொண்ணு. அதுவா வந்து உன்னை எனக்குப் பிடிக்கிறதுன்னு சொன்னா என்னையொத்த வாலிபன் மனசு கலங்கித்தானே போகும்?''

''மயங்கிப் போயிட்டியா? உண்மையைச் சொல்லு. ஏதாவது தப்பு தண்டாவிலே இறங்கிட்டியா! பாவி... சொல்லுடா...'' அம்மா அச்சத்தில் அலறிவிட்டாள்.



''சத்தம் போடாதீங்க. அண்டை அசல் காதில் பட்டால் அசிங்கமாயிடும்.''

''என்னையறியாமலே என் மனசில் ஒரு அல்ப ஆசை ஏற்பட்டது உண்மை. பணக்காரப் பெண்ணைக் கட்டிக்கிட்டா எத்தனை சுகமாக இருக்கலாம்னு ஒரு கனவு. எல்லாம் ஒரு நிமிஷத்துக்குத்தான். ஆனால் அது தப்புன்னு மனச்சாட்சி எச்சரிக்கவே நான் மனசை உறுதியாக்கிட்டேன். நான் பூஜிக்கிற ஆஞ்சநேயர்தான் சமயத்துக்கு நல்ல புத்தி கொடுத்து என்னைக் காப்பாத்தினார்.''

''தாமு! உனக்கு அந்தக் கம்பெனியில் வேலைவேண்டாம்டா. வுட்டுடு. வேறெ இடத்திலே வேலை கிடைக்கிற வரைக்கும் நாம் கஞ்சியைக் குடிச்சிட்டு மானமா இருப்போம்.''

''இப்ப என்னம்மா நடந்திடுச்சு? நான் ஏன் பயந்திட்டு வேலையை விடணும்?''

''நீ அந்தப் பொண்ணு மேலே ஆசைப்பட்டேன்னு ஒரு பேச்சுக்கு எடுத்துப்போம். அவ அப்பன் முதல்லே ஒப்புக்குவானா? உன் முதுகு நரம்பைக் கழட்டிடுவான். பெண் பிடிவாதம் பிடிச்சதுன்னு வச்சுக்கோ. கட்டின புடவையோட இவளை துரத்திடுவான். இந்த மாதிரிப் பெரிய இடம் நமக்கு சரிபட்டு வருமா. ஒருத்தனுக்கு நிச்சயிக்கப்பட்ட பொண்ணு இன்னொருத்தனை பார்த்து இளிச்சா...அவ எப்படிப்பட்டவ, நம்ப முடியுமா? அவனையும் விட்டுட்டு மூணாவது மனுஷனோட புறப்பட்டுப் போக எத்தனை நேரம் பிடிக்கும். சே சே!...''

''என்னமோ. நடந்திட்டது போல நீங்க இத்தனையும் பேசி முடிச்சிட்டீங்க. உங்க மகன் நான். அப்படி கூறுகெட்டுப் போயிடுவேனா?''

''பணத்தைக் கண்டு மயங்கிடாதேப்பா. பணம் நாம் சம்பாதிக்கிறது. அது நம்பளைச் சம்பாதிக்க விடக் கூடாது. மனசிலே பதிய வச்சுக்கோ''

''எனக்குத் தெரியும். அதனாலேதான் அந்தப் பொண்ணுகிட்ட முகம் கொடுத்துப் பேசல.''

''உங்க அத்தை மகள் விசாலாட்சியை நான் உனக்குப் பேசி வச்சிருக்கேன். என் மூஞ்சியிலே கரியைப் பூசிடாதே சொல்லிட்டேன்.''

''தப்புக் காரியம் செய்கிறவனாயிருந்தா நான் இந்த உண்மையை உங்க கிட்ட சொல்லியிருப்பேனா? அதை நினைச்சுப் பாருங்க அம்மா.'' கோபத்துடன் கேட்டான் மகன்.

''நாம் சாதாரணப் பட்டவங்க. நமக்குப் பணக்காரர் சிநேகிதம் தேவையில்லை. பணக்காரங்களோட பழகும் போது பாம்புகிட்ட பழகறாப்பல ஜாக்கிரதையாக இருக்கணும். எந்த நிமிஷமும் விஷத்தைக் கொட்டிடுவாங்க. நாம்தான் எச்சரிக்கையாக இருக்கணும்.''

''இந்தப் பெண் என்னம்மா? இந்திரலோகத்து ரம்பையே வந்தாலும் நான் உறுதி தவற மாட்டேன். அப்பா மேலே ஆணை. வீணா நீங்க கவலைப்படாதீங்க. உங்க புத்திமதியைக் கேட்கத்தான் நடந்த விஷயத்தை சொன்னேன். அவ்வளவுதான்.'' துப்பட்டியை இழுத்துக் கழுத்து வரை போர்த்திக் கொண்டான்.

கூரையிலிருந்து ஊர்ந்து வந்து கட்டில் கால் மாட்டில் படத்தை விரித்துக் கொண்டு பாம்பொன்று கொத்த வந்த போது காலை அவன் வெடுக்கென்று இழுக்க பாம்பின் முகம் மாறி, திவ்யா நிற்பது போன்ற ஒரு கனவு.



''சீ! சீ!'' உளறியடித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான். வியர்வை உடல் முழுவதும் ஆறாக வழிந்தது. கையும் காலும் வெடவெடவென்று நடுங்கின. நெஞ்சு வேகமாக அடித்துக் கொண்டது.

## 8

அன்று காலையிலேயே கருணா மகனுக்குச் சொல்லி விட்டிருந்தாள். மாலையில் அவன் திரும்பும் போது இனி சகோதரியை கல்லூரியிலிருந்து அழைத்து வர வேண்டியது அவன் வேலை; அப்பாவின் உத்தரவு என்றாள்.

அதன்படியே அவன் தங்கையைத் தன் காரில் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வந்திருந்தான்.

மாடிக்கு விரைந்த திவ்யா புத்தகங்களை மேஜை மீது விசிறிப் போட்டு விட்டு, குளியலறைக்குள் புகுந்து கொண்டாள். அண்ணனும் தங்கையும் அன்று வெளியே போய் வரத் திட்டமிட்டிருந்தார்கள்.

முகத்தைக் கழுவிக் கொண்டு லக்னோ குர்தாவைத் தரித்துக் கொண்டு அண்ணன் விரைவில் தயாராகி விட்டான். திவ்யா எப்பொழுதுமே வெகு நேரம் கண்ணாடி முன் உட்கார்ந்து விடுவாள். எத்தனை அவசரப்படுத்தினாலும் உடுத்திக் கொண்டு புறப்படக் கொஞ்சம் நேரந்தான் ஆகும். நமக்கென்ன, இனி இது சித்தார்த்தின் தலைவலி என்று எண்ணியபடி அவள் சாவகாசமாகத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தாள். முன்னறையில் இருப்புக் கொள்ளாமல் எழுந்து உலவிக் கொண்டிருந்தான் சித்தார்த்.

அப்பாவின் சாயங்கால வண்டியான அம்பாசிடரை ஓட்டிக் கொண்டு வந்த டிரைவர் தாமோதரன் அதை கராஜில் வைத்துப் பூட்டினான். இன்னும் இரண்டு வார

காலத்திற்கு அந்த வண்டிக்கு ஓய்வு என்று தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டான் யோகேந்திரன்.

அப்பாவுக்கு ஆபீஸ் முகவரிக்கு வந்த கடிதங்களை ஒரு கட்டாகத் தூக்கிக் கொண்டு வந்த தாமோதரன், கார் சாவியுடன் அவற்றைப் பத்திரமாக முன்னறை மேஜை மீது வைத்தான். தயக்கத்துடன் உள்ளே பார்த்தபடி நின்றான்.

''அம்மா, நீங்க இன்னிக்கு வெளியில் போகிற வேலை இருக்கா? டிரைவர் தாமோதரனிடம் என்ன சொல்லட்டும்'' குரல் கொடுத்தான் மகன்.

சுகுணா அப்பொழுது கைவேலையாக இருந்தாள். இரண்டு தினங்களாகச் சமையல் ஆளுக்கு உடம்பு சுகமில்லை. காலை, மாலை, இரவு மூன்று வேளையும் அவள் கரண்டியைப் பிடிக்க வேண்டியிருந்தது.

''வேண்டாம், போகச் சொல். அப்படி எங்கேயாவது போகணும்னா நீ இருக்கே அழைச்சிட்டுப் போவே'' அம்மாவின் குரல் எரிச்சலோடு வந்தது.

தாமோதரன் வேகமாக விடைபெற்றுக் கொண்டு நழுவி விட்டான். பல நாட்களுக்குப் பின்னர் சமையலறையின் முழு வேலையும் சுகுணாவின் தலையில் விழுந்து விட்டிருந்தது. ''இங்கே வந்து காபி பலகாரத்தைச் சாப்பிட்டுட்டுப் போயேன். அம்மாவுக்கு இந்த உதவிகூடச் செய்யக்கூடாதா?'' அவள் அதட்டலாக மகனைக் கூப்பிட்டாள்.

''எத்தனை பெரிய உதவி செய்யக் கிளம்பியிருக்கேன். உங்களுக்கு என்ன தெரியும்?'' தன்னுள் எண்ணிக் கொண்டான் யோகேந்திரன்.



அம்மா போண்டாவைக் அளவுக்கு மேல் உப்பைப் போட்டு விட்டிருந்தாள்.

சமையலில் அவள் மிகவும் கெட்டிக்காரிதான். அப்பா ஊரில் இல்லாததை எண்ணி உள்ளூர ஏதோ கவலை.

''இன்னொரு போண்டா போட்டுமா? சட்னி வைத்திக்கிறியா?'' அம்மா உபசரித்ததைத் தடுக்க முடியவில்லை. அவற்றை அதிகம் கடித்து ருசிக்காமலேயே அப்படியே விழுங்கி விட்டுக் காப்பியைக் குடித்தான்.

இன்னமும் தங்கையைக் காணவில்லை. அமைதியின்றி வாசலுக்கு வந்தான்.

முன்னறை மேஜைமீது கிடந்த அப்பாவின் கடிதங்கள் கண்களை உறுத்தின. அவற்றை ஆராய வேண்டுமென்றதொரு ஆவல். மெல்ல ஒவ்வொன்றாகப் புரட்டிப் பார்த்தான்.

சில கடிதங்களில் அனுப்பியவரின் முகவரி இடது பக்கம் காணப்பட்டது சிலவற்றில் பின் பக்கத்திலிருந்தது. வியாபார சம்மந்தமாக அப்பாவைச் சந்திக்கும் நண்பர்களின் கடிதங்கள் அவை. அவர் செய்த உதவிக்கு நன்றி தெரிவித்து எழுதியிருக்கலாம். உதவி கேட்டு முன்கூட்டியே தாம் வரப்போவதைத் தெரிவித்து எழுதியிருக்கலாம். அசட்டையாக அவற்றை ஒதுக்கிய போது ஒரு கடிதம் அவனைக் கவர்ந்து கொண்டது. முத்துக் கோர்த்தது போன்ற கையெழுத்து. கட்டாயம் ஒரு பெண்ணினுடையதாக இருக்க வேண்டுமென்பது அவன் முடிவு. அனுப்பியவர் முகவரி அதில் இருக்கவில்லை. மை பட்டும் படாமலும் குத்தப்பட்ட முத்திரையை ஊன்றிப் பார்த்தபோது ஹைதராபாத் என்று இருக்கக் கண்டான். பயந்து போனான்.

அம்மாவின் கால்மெட்டி சத்தம் அருகில் ஒலிக்கவே, சட்டென்று அதைப் பைக்குள் அடக்கிக் கொண்டு மூலையி லிருந்த சோபாவிற்குள் ஓடிச் சென்று முடங்கிக் கொண் டான்.

"இங்கே என்ன பண்ணிக்கிட்டு இருக்கே?" அம்மா கேட்டபோது குற்ற உணர்வில் ஒரு கணம் அயர்ந்து போனான்.

அப்பாவின் கடிதங்களைப் புரட்டியதை அம்மா பார்த்துவிட்டாளா? "திவ்யாவுக்காகக் காத்திருக்கேன். அவளுக்கு யாரோ சிநேகிதியாம் அவ வீட்டுக்குப் போய் விட்டு வரணுமாம். கொஞ்சம் அழைச்சிட்டு போகச் சொன்னாள்—" இழுத்தான்.

"கார் தண்ணியிலே ஓடறதாக நினைப்பு. எப்பப் பார்த்தாலும் காரும் கையுமா திரியறே. பெட்ரோல் விலையைப் பத்தியோ, வீட்டுச் செலவைப் பத்தியோ நினைக்கிறியா? அந்தக் கவலை உனக்கேன்?" அம்மா அனாவசியமாகச் சிடுசிடுத்தாள்.

அவள் ஏழை வீட்டிலிருந்து வந்தவள். எப்பவும் செலவைப் பற்றி வீண் கவலை. அப்பா வைரக் கூடு அடித்துப் போட்டிருந்தும், கூடப்பிறந்த சிக்கனத்தை உதற முடியாதவள்.

"கம்பெனி கணக்கில் ஓடற வண்டி—ஏன் கவலைப் படுறீங்க?"

"இருந்தாலும் செலவில் ஒரு நிதானம் வேண்டாமா?" அம்மா அதட்டினாள்.

'பூசணிக்காய் போகிற இடம் தெரியலை அம்மா. நீங்க கடுகு போறதைக் கணக்கு பாக்குறீங்க' சொல்ல விரும்பினான்.



அதற்குள் ஸ்லோ மோஷன் ஷாட்டில் படத்தில் மேக்கப்புடன் கதாநாயகியைப் போல் வெளிர் மஞ்சள் ஷிப்பான் சேலையில் மெல்ல மாடியிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தாள் திவ்யா. அவளுக்கு முன் ஷனால் நம்பர் ஐந்தின் மணம் காற்றோடு மிதந்து வாசல் வரை எட்டிக் கொண்டிருந்தது.

"காப்பி பலகாரம் சாப்பிட்டுவிட்டுப் போகலாம் உள்ளே வாம்மா' உத்தரவிட்டாள்.

மகள் தோள்களை அசட்டையாகக் குலுக்கிவிட்டுத் தாயைப் பின்தொடர்ந்தாள்.

தங்கை வெளியே வருவதற்கு குறைந்தது அரை மணி யாவது ஆகும் என்பது அவன் கணக்கு. சட்டென்று அந்தக் கடிதத்தைப் பையிலிருந்து எடுத்துப் பிரித்தான். அவனது ஊகம் சரியாக இருந்தது. 'ரூபா' என்று கையெழுத்திட்டிருந்த பெண் ஒருத்தி அப்பாவுக்கு எழுதி யிருந்தாள். "அன்புள்ள..." என்று ஆரம்பித்திருந்ததைக் கண்டதுமே மிக நெருக்கமானவள் என்று புரிந்தது. மேலே படிக்கக் கொஞ்சம் தயக்கமாக இருந்தது. அப்பா வின் சொந்தக் கடிதங்களை மகன் பிரித்துப் படிப்பது சரி யல்ல என்று ஒரு வினாடி குற்ற உணர்வு. சமாளித்துக் கொண்டு, மனத்தில் ஏற்பட்ட அருவருப்பை உதறிவிட்டுப் படித்தான்.

"—ஹைதராபாத்துக்கு மாற்றலாகி விட்டதை நான் வெறுக்கிறேன். சென்னை கடற்கரை, சினிமா, மகாபலி புரத்தில் பிக்னிக் இவற்றை நினைத்துக் கொள்ளும் போது வேலையை விட்டு விட்டுப் பறந்தோடி உங்களிடம் வந்து விட வேண்டுமென்று மனம் துடிக்கிறது. தொலைபேசியில் தாங்கள் சொன்னது போல் இரண்டு வாரம் லீவு எடுத்துக் கொண்டு விட்டேன்.

மூன்று வருஷகால நெருக்கமான நட்புத்தான் என்றாலும் முன்னூறு ஆண்டு காலம் பழகியது போன்ற உரிமை உணர்வு. எனக்காக உங்களது வியாபாரத்தை இரண்டு வார காலம் மறந்து விட்டு என்னோடு வந்து இருக்கப் போகிறீர்கள் என்பதை அறிந்து நான் பெருமையில் பூரித்துப் போகிறேன். வரவை அன்போடு எதிர்பார்க்கும் தங்கள் ரூபா.''

திடுக்கிட்டுப் போன யோகேந்திரன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு மறுபடியும் கடிதத்தை ஊன்றிப் படித்தான். அவனது நெஞ்சு வேகமாக அடித்துக் கொண்டது. இதென்ன கூத்து? இந்த அப்பாவுக்கு இன்னொரு தொடர்பா?

காலடி சப்தம் கேட்டுச் சட்டென்று கடிதத்தைப் பையில் திணித்துக் கொண்டான்.

''அண்ணா! கிளம்பலாமா?'' கேட்டுக் கொண்டே தங்கை வந்தாள்.

''போய்ட்டுச் சீக்கிரம் வந்துடுங்கோ. அப்பா ஹைதராபாத்திலிருந்து டிரங்கால் போடுவார், உன்கிட்ட பேசணும்னு சொல்வார். உனக்கு அங்கேயிருந்து ரெண்டு கொத்து கல்ச்சர் முத்து வாங்கிட்டு வரச் சொல்லியிருக்கேன். முடிஞ்சா பாக்கிறேன். எனக்கு மீட்டிங்குக்கே நேரம் சரியா இருக்கும்னு சொன்னார்!'' அம்மா பேசிக் கொண்டே வந்தாள்.

காரில் ஏற உட்கார்ந்த யோகேந்திரன் தன் தலையில் படார் என்று அடித்துக் கொண்டான். வண்டியைக் கிளப்பியவன், பக்கத்திலிருந்த தங்கையைப் பார்த்தான்.

''அப்பா எந்த மீட்டிங்குக்குப் போயிருக்கார்னு இதைப் பார் தெரியும்'' கோபத்துடன் பையிலிருந்த கடிதத்தை அவளிடம் கொடுத்தான். காரை வேகமாக



ஓட்டிச் சென்றான். பெஸண்ட் நகர் போகும் சாலையில் ஒரு மரத்தின் அடியில் ஒதுக்குப்புறமாக வண்டியை நிறுத்தினான்.

திவ்யா கடிதத்தைப் படித்ததும் திகைப்புடன் அண்ணனைப் பார்த்தாள். ''ஹைதராபாத் டிரிப் அப்பாவின் முன்னேற்பாடா? அப்போ அந்தக் கடிதம் தாமதமாக வந்திருக்குன்னு சொல்லுது. இதென்ன நீ சொன்ன தொடர் சமாசாரமா இருக்கே. ஒண்ணுக்குப் பின் ஒண்ணாக கிளம்பிட்டேயிருக்கே...''

''அப்பாவுக்கு மோட்டார் சுந்தரம் பிள்ளை போல ஒரு பக்கம் இன்னொரு குடும்பம். இன்னொரு பக்கம் பெரிய காஸினோவா போல பெண்கள் தொடர்பு. இன்னும் நாம் ஆராயப் போனால் பம்பாயில் ஒரு பாமினி —கல்கத்தாவில் ஒரு காமினின்னு பட்டியல் வளர்ந்துகிட்டே போகும். சே! சே! இதை நீடிக்க விட்டால் நாம் எல்லோரும் நடுத்தெருவில்தான் நிற்போம்'' யோகேந்திரன் கோபத்துடன் பேசினான்.

''இதுக்கு என்னதான் முடிவு?'' ஆத்திரப்பட்டாள் திவ்யா. கையில் ஒரு துப்பாக்கியுடன் புறப்பட்டு அம்ருதா, ரூபா இன்னும் கண்டு பிடிக்கப் போகிற காமினி, பாமினி எல்லோரையும் சுட்டுத் தள்ளிவிட வேண்டுமென்றதொரு கொலை வெறி அவளுக்கு.

சில்லென்று திவ்யா மீது தவழ்ந்த கடற்காற்று ஆனாளின் மணத்தை வாரிக் கொண்டு அவன் முகத்தில் மோதவே அவன் மூளையில் ஒரு திட்டம் பளிச்சிட்டது.

''இந்த ஃபாரின் சென்டுகளில் ஏதாவது வீட்டில் பாக்கி வச்சிருக்கியா?''

"ஏன் கேட்கிறே?" எரிச்சல் பட்டாள் அவள்.

"என்கிட்ட ஒரு பாட்டில் செண்டைத் தள்ளி விடேன் அதுக்கு ஒரு வேலையிருக்கு."

"சுத்தி வளைக்காதே. ஏற்கனவே நான் அந்தப் பெண் ரூபா மேலே கோபமா இருக்கேன்."

"அந்த ரூபாவை நீ கவனிச்சுக்கோ. நான் இந்த அம்ருதாவைப் பார்த்துக்கிறேன். நேரே நாம் இப்போ உம்பிடியார் ஷாப்பிங் சென்டருக்குப் போகிறோம். முன்னறையில் வைக்கிறாற்போல் யானை, குதிரை என்று ஏதாவது பரிசுப் பொருள் வாங்கிக்கிறேன்; நீ உன்கிட்ட இருக்கிற வெளி நாட்டு செண்ட்டுகளில் திறக்காததாக அட்டைப் பெட்டியோடு கூடியது, ஒன்றைத் தியாகம் செய். இரண்டையும் வண்ணக் காகிதங்களில் சுத்தி டேப்புகள் போட்டுக் கட்டி நாளைக்கு ஃபோன் மூலம் அம்ருதாவோட ஒரு அப்பாயிண்ட்மெண்டைச் செஞ்சுட்டு பின் நேரே போகப் போறேன்."

"போய்?"

"மீதியை இந்த ஐயாகிட்ட விட்டுடு."

"அந்த ரூபாவை என்கிட்ட தள்ளியிருக்கியே, அவள் ஹைதராபாத்தில் அப்பாவோட இப்ப சினிமா பார்த்துட்டு இருப்பாளே. அவளை நான் என்ன செய்ய முடியும்?" திவ்யா சீறினாள்.

"உன் அறையிலே உட்கார்ந்துட்டு இன்னிக்கு ராத்திரி நான் சொல்கிறபடி ஆங்கிலத்தில் ரூபாவுக்கு ஒரு கடிதம் நீ டைப் அடி. அதில் நான் அம்ருதான்னு இடது கையால் கையெழுத்திட்டுத் தபாலில் அனுப்பிச்சுடறேன். இங்கே அம்ருதாவுக்கு நான் வேப்பிலையடிக்கிறேன். அங்கே ரூபாவை நீ பயமுறுத்து அவ்வளவுதான்."



திவ்யாவுக்குக் கொஞ்சம் சிரிப்புக் கூட வந்துவிட்டது. ஒப்புக் கொண்டு விட்டாள். அன்னதானசாலை நோக்கி வண்டியைத் திருப்பி ஓட்டினான் அவன்.

19121
3467

## 9

சில தினங்களுக்குப் பின்னர் ஒரு பகல் உணவுக்குப் பின் படுக்கைமீது ஒய்வாகப் புரண்டு கொண்டிருந்தாள், தலைமாட்டிலிருந்த தொலைபேசி மணியடித்தது. ஹைதராபாத்திலிருந்து ராஜாராம் அழைக்கிறார் என்று ஆவலுடன் கையில் எடுத்தாள்.

மறுபக்கத்திலே அவளுக்குப் பழக்கமேயில்லாத ஒரு வாலிபனின் குரல்.

"முந்தா நாள் அடையாறு ஹாலில் நடந்த உங்கள் பரத நாட்டியத்தைப் பார்த்தேன். பிரமாதம்."

புகழ்ச்சி அவளுக்கு எப்பொழுதும் அல்வாவைப் போல. "அப்படியா? சந்தோஷம்." போனுக்குள்ளே புன்னகைத்தாள்.

"உங்களை நேரில் பார்த்து பாராட்ட ஆசையாக இருக்கு."

"இந்த வாரம் முழுவதும் நான் பிஸி."

"அப்படியெல்லாம் சொல்லக் கூடாது. ரொம்ப நாளா உங்களைப் பார்க்கணும்னு ஆசையாலே துடிக்கிற உங்கள் ஆயிரக்கணக்கான விசிறிகளில் அடியேனும் ஒருவன்."

"வர ஞாயிற்றுக்கிழமை பத்து மணிக்குப் பார்க்கலாம். வீட்டு முகவரி தெரியுமில்லையா? வந்துடுங்கோ."

''தாங்யூ'' வாலிபனின் குரல் மகிழ்ச்சியில் துள்ளியது.

''என்ன இது? சபரிமலைக்குப் போகப் போகிறாயா?'' நண்பன் ரமேஷ் கேட்டபோது காரின் ரியர்மிர்ரரில் முகத்தைக் கொஞ்சம் பார்த்துக் கொண்டான்.

அப்பா ஊருக்குப் போனதிலிருந்து மழிக்கப்படாத தாடை. புசுபுசுவென்று புல் முளைத்ததுபோல் முகம் முழுவதிலும் சில தினங்களில் ரோமக் காடாகி விட்டிருந்தது. நீண்ட முடியும் மீசையை மறைத்த குறுந்தாடியும் கன்னத்திலே படர்ந்த கிருதாக்களும் குர்த்தாவும் தொள தொள பைஜாமாவுமாக அவன் ஹிப்பி கலந்த ஒரு தோற்றத்தில் காணப்பட்டான். ஊன்றிப் பார்த்தால் ஏதோ சைத்ரிகன் போன்றதொரு ஜாடை.

பரிசுப் பொருள்களுடன் லாலா கடை மிட்டாய்ப் பெட்டி ஒன்றை வாங்கிச் சேர்த்துக் கொண்டான். தன் காரை கராஜில் விட்டு விட்டுக் கம்பெனிக்குச் சொந்தமான கறுப்பு பியட்டில் கிளம்பினான்.

சாஸ்திரி அவின்யூவில் எட்டாம் நம்பர் வாசலில் காரை நிறுத்திவிட்டு அழைப்பு மணியை அடித்தான். பருமனான வேலைக்காரியொருத்தி கதவைத் திறந்து விட்டு உள்ளே வந்து உட்கார உபசரித்துவிட்டு மறைந்தாள்.

முன்னறை சோபாவின்மீது உட்கார்ந்து அவளுக்காகக் காத்திருந்தபோது அருவருப்பானதொரு விசித்திர உணர்வு அவனுக்கு. எழுந்து சென்றுவிடலாமா என்ற ஒரு நினைப்பு. தன்னைத்தானே அவன் பலமுறை சமாதானம் செய்து கொண்டான். துணிந்து இறங்கிய பின் பின்வாங்குவதா என்று மனச்சாட்சி உறுத்தியது. ஆனாலும் இருபத்தொரு வயது இளைஞன் அனுபவங்களில் முதிர்ந்த நாற்பத்தெட்டு வயது அப்பாவுடன் போட்டி போடுவது சாமானிய சங்கதியா?



உடல் முழுவதும் லேசானதொரு நடுக்கம். கண்களை மெள்ள முன்னறையில் ஓடவிட்டான். கைவினை பிரான்ஸ் லெட்டை நினைப்பித் கொண்டு வந்து கொடுத்தது போல அப்பா இன்னும் ஏதாவது விட்டுப் பொருள்களைக் கொண்டு வந்து அவள் காலடியில் வைத்து விட்டிருக்கிறாரா? அவனுக்குத் தெரிந்த சாமான்கள் ஏதும் காணப்படவில்லை.

பாங்க் பணம் கரைந்து கொண்டிருக்கும். அதை அவனால் ஆராய முடியாதே. அலுப்புடன் சோபாவில் சாய்ந்து கொண்டான். ''நமஸ்தே!'' பச்சை வண்ண நைலக்ஸில் பசுங்கொடியாக அசைந்துவந்த அம்ருதா, எதிரே வந்து உட்கார்ந்தபோது அவனுக்கு மூச்சு அடைத்தது. திகிலா, பரபரப்பா? புரியாத குழப்பம்.

பச்சைக் கல் காதணி, பச்சை மணிமாலை, வளைகள் என்று கண்களுக்குக் குளுமையாக, பொருத்தமாக அணிந்து கொண்டிருந்தாள். அப்பாவுக்கும் இவளுக்கும் நெருக்கம் என்ற நினைவு நெருப்பாக நெஞ்சைச் சுடவே பேச முடியாமல் பிரமையோடு பார்த்தான். ''போனில் ரொம்பப் பேசினீங்க. இப்ப ஒரே மௌனமாக இருக்கிறீர்களே?'' பரிகசித்தபடி பற்கள் பளிச்சிட அவள் சிரித்தாள்.

விறித்துக் கொண்டான். துணிவையெல்லாம் திரட்டிக் கொண்டான். முதல்நாள் இரவு முழுவதும் இதற்காக ஒத்திகை செய்து வைத்திருந்த பாடத்தை மெல்ல அவிழ்த்துவிட்டான். ''ரொம்ப நாளா உங்களை நான் பார்க்கணும்னு ஆவலாக இருந்தால் நேரே பார்த்ததும் அப்படியே பிரமிச்சுப் போயிட்டேன் பேசத்தோணலை'' கதையளந்தான். ''உங்கள் நடனத்திலே மனசைப் பறிகொடுத்துப் பித்தனாகிவிட்டிருக்கும் ஒரு பாடகனின் அன்புக் காணிக்கை'' கொண்டு வந்த பார்சலை அவள் அருகே டீப்பாயின்மீது மிகவும் பணிவுடன் வைத்தான்.

''பேர் என்னன்னு சொல்லலையே.'' கேட்டபடி அவன் பார்சல்களைப் பத்திரமாக உள்ளே எடுத்துச் சென்றான். சிறிது பொழுதில் வந்தாள்.

''எனக்குப் பிடித்தமான சென்டைக் கொண்டு வந்திருக்கிறீங்க. ரொம்பத் தாங்க்ஸ்.''

''இதென்ன பிரமாதம். எங்க கம்பெனியிலிருந்து யாராவது ஒருத்தர் வெளி நாடு போய்க்கிட்டே இருப்பாங்க. சொல்லி அனுப்பினா எதுவும் கிடைக்கும்.'' ஆவலைத் தூண்டினான். வேலையாள் கொண்டு வந்த குளிர்பானத்தை மிகவும் தயக்கமாக வாங்கிக் கொண்டான்.

''பெயர் என்னன்னு சொல்லலையே'' கொஞ்சலாகக் கேட்டாள்.

அந்த கூர்மையான மூக்கையும் குறுகுறு பார்வையையும் எங்கேயோ பார்த்த நினைவு அவனுக்கு.

''என் பெயர் இந்திரன்'' தனது முழுப்பெயரைச் சட்டென்று பாதியாக வெட்டிக் கொண்டான்.

''உங்களை எங்கேயோ பார்த்தாப்பல இருக்கே?''

''நீங்க நடனமாடும்போது முதல் வரிசை ஆசனத்தில் உட்கார்ந்து கண் கொட்டாமப் பார்த்து ரசிச்சுக்கிட்டிருப்பது வழக்கம். அப்போ பார்த்திருப்பீங்க. வேறு எங்கே பார்த்திருக்க முடியும்?''

''அப்படியா?'' அவள் கலகலவென்று சிரித்தாள்.

''வேடிக்கையாகப் பேசுகிறீங்களே. என்ன வேலை பண்ணுகிறீங்க?''

''அப்பாவுக்குத் தொழிலில் உதவியாக இருக்கிறேன். இப்பத்தான் பிசினஸ் மானேஜ்மெண்ட் முடிச்சேன்.''



''உங்கப்பா என்ன செய்கிறார்?'' அவள் விடாது தொடர்ந்தாள்.

'ஊரி லுள்ள அழகிகள் பின்னால் சுத்தறார்' சொல்ல வேண்டும் போன்ற ஒரு குரூர ஆசை. காரியம் கெட்டுவிடுமே என்ற அச்சம்.

'' கயிறு வியாபாரம். தாங்களே தயாரிக்கிறோம். சாமான் கட்டுகிற சணல் கயிற்றிலிருந்து கப்பல் கட்டுகிற கயிறு வரை சொந்தத் தயாரிப்பு. திருவெற்றியூரில் எங்கள் தொழிற்சாலை இருக்கு'' கயிறு திரித்தான்.

''உங்கப்பா பேர்?''

தாத்தாவின் பெயரான மேகநாதனைச் சட்டென்று சுருக்கிக் கொண்டான். ''எம். நாதன்னு கேள்விப்பட்டிருப்பீங்க. பெரிய கொடைவள்ளல்.'' குடும்பப் பெயரையே உபயோகிக்கிறோம். அதிகம் பொய் சொல்லவில்லை என்று ஒரு தெம்பு அவனுக்கு.

அம்ருதா வியப்புடன் உற்றுப் பார்த்தாள். ''அப்படியா உங்களைப் போன்றவங்க வந்து பாராட்டறதை ஒரு பாக்கியமாகக் கருதுகிறேன். இருந்து சாப்பிட்டுவிட்டுப் போகலாமே...'' உபசரித்தாள்.

சிறிது பொழுதில் அவன் கிளம்பினான். அடுத்த நாள் அவன் மறுபடியும் பார்க்க வந்தான். அதற்கடுத்த நாள் அவளைத் தன் காரில் ஏற்றிக் கொண்டு கடற்கரை வரை ஊர்வலம் சென்று வந்தான். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான பரிசுடன் அவளைக் காண வந்தான். அம்ருதாவுக்கு அவனை மிகவும் பிடித்துவிட்டது.

# 10

மறுநாள் மாலை, ராஜாராம் வெளியூரிலிருந்து திரும்பிவரப் போவதாகத் தகவல் வந்தது. யோகேந்திரன் முதல் வேலையாக முகத்தைச் சுத்தமாக மழித்துக்கொண்டான். கொளுத்தும் வெயிலில் சூடாகி விட்டிருந்த தாடியின் உறுத்தலை அவனால் தொடர்ந்து அனுபவிக்க முடியவில்லை. முன்போல் முகத்தைச் சுத்தப்படுத்திக் கொண்டதும் 'அப்பாடா' என்ற லேசான உணர்வு.

ஹைதராபாத்துக்குப் போயிருந்த ராஜாராம் பம்பாயிலிருந்து திரும்பி வந்தார். போன இடத்தில் வரவேற்பு சரியாக இருக்கவில்லை என்பதைச் சிடுசிடுக்க அவர் முகம் சொல்லியது. பேச்சில் எரிச்சல் தொனித்தது. யோகேந்திரனும் திவ்யாவும் புரிந்து கொண்டு விட்டனர். ஒருவரையொருவர் குறிப்பாக பார்த்து முறுவலித்துக் கொண்டனர். ரூபாவுக்கு, அம்ருதா எழுதியதுபோல் ஒரு கடிதத்தை ஆங்கிலத்தில் டைப் அடித்து அனுப்பியிருந்தார்கள்.

"உன்னைப் பற்றிய தகவல்கள் சமீபத்தில்தானே தெரிய வந்தது! நானும் திரு ராஜாராமனும் நீண்ட நாளைய நண்பர்கள். நெருக்கமாகி விட்டவர்கள். வெகு சீக்கிரம் நாங்கள் வெளிநாடுகளுக்குச் சுற்றுப் பயணம் துவங்க இருக்கிறோம். நீ எனது உறவிற்குள் புகுந்து குழப்பம் செய்கிறாய். விளைவு விபரீதமாகும் என்று புரிந்து கொள்வாய். சந்தேகமிருந்தால் அவரிடமே கேள். எனது உரிமைகளை நான் சுலபத்தில் விட்டுக் கொடுக்கப் போவதில்லை. எச்சரிக்கிறேன்."

இந்தக் கடிதத்திற்கு அவர்கள் எதிர்பார்த்த பலன் தான் உடனடியாகக் கிட்டி விட்டிருந்தது.

மூன்று வருஷ தொடர்பும் மூன்றே நாளில் அறுந்து கொண்டு விட்டது.



"என் மனைவிகூட என்னை அதட்டிக் கேட்டதில்லை நீ யார் கேட்க?" கோபம் தாங்கமுடியாது ராஜாராம் ரூபாவிடம் கத்திவிட்டார்.

தான் ஒருத்திதான் அவருக்கு நெருங்கியவள் என்று நினைத்திருந்த ரூபாவுக்கு அந்தக் கடிதம் அதிர்ச்சியைக் கொடுத்தது. அம்ருதாவிடமிருந்த தொடர்பை பற்றிச் சொல்லவில்லையே என்ற ஆத்திரம். "நீ யார் என்று கேட்கும் நிலை வந்த பிறகு இங்கே ஒரு நிமிஷம்கூட நீங்க தங்கியிருப்பது தவறு. நடங்கள் வெளியே," துணிவாக அவளும் திருப்பக் கத்திவிட்டாள்.

சந்தர்ப்ப வசத்தால் ஏற்பட்ட நட்பும் நெருக்கமும் சோதனைக்கு முன் நிற்கமுடியவில்லை. ஆடிப் போயின.

"கருணா எதற்காவது வாயைத் திறந்திருக்கிறாளா? எத்தனை வஞ்சனை செய்தாலும் பொறுமையோடு எத்தனை பணிவிடை செய்கிறாள்! என்ன இருந்தாலும் மனைவிக்கு இந்த வழியோட்டிகள் ஒப்பாவார்களா?" என்ற ஞானோதயம அவருக்கு ஏற்பட்டது. எண்ணெய் இட்ட சக்கரம் போல் சந்தடியின்றி நட்பு நீடித்தால் தான் அவர் எந்தப் பெண்ணுடனும் நீண்ட காலம் ஒட்டிக் கொண்டிருப்பார். அவள் இடக்குச் செய்கிறாள் என்று புரிந்ததும் கணக்குகளைத் தீர்த்துவிட்டு வெட்டிக்கொண்டு நகர்ந்து விடும் நிபுணர் அவர்.

மூன்றாவது நாளே கிளம்பிவிட்டார். கம்பெனி வேலைக்காகப் புறப்பட்டு உடனடியாகத் திரும்ப மனம் இல்லை.

மட்டு மரியாதையில்லாமல் பேசி விட்ட ரூபா மீது ஆத்திரம். அம்ருதாவின் அதிகப் பிரசங்கித்தனம். இதற்குள் அவன் மேல் கடுங்கோபம். இந்த நிலையில் அவர்

பம்பாய்க்குச் சென்று ஒரு பெரிய ஓட்டலில் யாருக்கும் தெரியாமல் நாட்களை ஓட்டிவிட்டு வந்திருந்தார்.

யோகேந்திரன் நண்பன் ரமேஷ் பல குரலில் பலரைப் போல் பேசி நடிக்கும் திறமையுடையவன் கல்லூரி நாடகங்களில் அவனது விகடக் கச்சேரிக்கு நிகழ்ச்சி நிரலில் முதல் இடம். நண்பனுக்காக அவன் சொன்னதைச் செய்ய ஒப்புக் கொண்டிருந்தான்.

அன்று பகல் ஆபீஸிற்கு வந்ததும் வராததுமாக ஒரு கட்டைக் குரல் ராஜாராமை போனில் அழைத்தது.

"ராஜாராம்தானே பேசுகிறது? கேட்டுக்கோ உன் பிள்ளை யோக்கியதையை. நடத்தை கெட்ட ஒரு பெண்ணோட உன் மகன் ஊர் சுத்துகிறான். இப்பவே கண்டிக்கலே, பின்னால் நீ வருத்தப்படுவாய். எச்சரிக்கிறேன்."

குப்பென்று முகம் சிவந்து போன ராஜாராம், "ஹலோ...நீ யார்...எங்கிருந்து பேசறே?" என்று கத்திய போது கட்டைக் குரல் 'ஸ்! சும்மாயிரு,' அதட்டிவிட்டுத் தொடர்ந்தது: "நடக்கிறதைச் சொன்னேன். பிள்ளையை முதலிலே கவனி. சீக்கிரம் ஒரு கால் கட்டுப் போடு. யாரா யிருந்தா உனக்கென்ன?" ஆசாமி போனை வைத்து விட்டான்.

அவர் வீட்டுக்குத் திரும்பியபோது யோகேந்திரன் காருடன் எங்கேயோ சுற்றப் போயிருந்தான்.

அவருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. மனைவி மீது சள்ளென்று விழுந்தார். பிறகு விசாரிப்போம் என்று தமது அம்பாசிடருடன் அம்ருதாவைப் பார்க்கப் புறப்பட்டு விட்டார்.

"என்ன? ஹைதராபாத்திலிருந்து ஒரு டெலிபோன் கூடப் பண்ணலையே. ஒரேயடியாக மறந்துட்டீங்க போலி ருக்கு" எடுத்த எடுப்பிலேயே அவள் சிணுங்கினாள்.



'விஷமமாகக் கடிதம் எழுதிவிட்டுக் குழைகிறானே கழுதை' உள்ளூர ஆத்திரம் மூண்டு கொண்டு வந்தது அவருக்கு.

"நான் இல்லாதபோது உனக்கு இங்கே நிறைய டான்ஸ் புரோகிராம் இருந்திருக்குமே?" விசாரித்தார்.

"ஆமாம், நான் இங்கே ரொம்ப பிஸியாகத்தான் இருந்தேன். ஒரு புது விசிறியின் நட்புக் கிடைச்சிருக்கு."

"உன்கிட்ட டான்ஸ் கத்துக்க ஆசைப்பட்ட காலேஜ் பெண்ணா அந்த விசிறி?"

அம்ருதா அவரைக் கர்வமாகப் பார்த்துவிட்டு மெல்லச் சிரித்தாள். "இது ஒரு ஆண். இளைஞன். என்னை விட வயதில் கொஞ்சம் சின்னவன். என்மேலே உயிரையே வச்சிட்டிருக்கிறான், பாவம். பீச்சுக்கு வா, சினிமாவுக்குப் போகலாமான்னு தினமும் காரை எடுத்துக் கொண்டு வந்து தொந்தரவு பண்ணிக் கொண்டிருந்தான். நம்மேலே இத்தனை பிரியம் வச்சிருக்கானேன்னு என் மனசு கூடக் கரைஞ்சு போச்சு."

"அவனோட புறப்பட்டுப் போயிருக்கிறதுதானே?" கோபத்தை அடக்கிக்கொண்டு அவர் முறுவலித்தார்.

சலங்கைகள் கலகலத்தது போல் அவள் சிங்காரமாகச் சிரித்தாள். "பீச்சுக்கு அவனோட சில தடவைகள் போனேன். முந்தா நாள் இங்கே வந்து உட்கார்ந்துவிட்டு லேசில் கிளம்ப மாட்டேனுட்டான். அவனிருந்த நிலையைப் பார்த்தா என்னைக் கல்யாணம் பண்ணிப் பியான்னு கேட்டுடுவான் போல இருந்தது. அத்தனை ஒரு இன்பாச்சுவேஷன்." அவர் முடிக்கவிடவில்லை.

"அதனால் என்ன? இந்தக் காலத்தில் சில இளைஞர்களுக்குத் தங்களைவிட மூத்த பெண்கள் மேல்தானே காதல் வருகிறது? அது ஒரு பாஷனாகப் போய் விட்டதே..."

"அப்படியா? பலே பலே. அந்தப் பயலை எனக்குக் கூடப் பார்க்க ஆசையா இருக்கு" போலியாகச் சிரித்தார் ராஜாராம்.

"ஒரு சமயம் இன்னிக்கு வந்தாலும் வருவான். தாடியும் மீசையுமாகக் கொஞ்சம் ஹிப்பி போல இருக்கான். அதெல்லாம் எடுத்துட்டா பையன் லட்சணமானவன். அவன் அப்பா பிரபல வியாபாரி. ஒரே பிள்ளை. கறுப்பு பியட் வச்சுட்டு இருக்கான். பெயர் இந்திரன், கார் நம்பர் கூட டி.எம்.எஸ்..." என்றாள் மூச்சு விடாது.

ராஜாராமுக்கு மின்விசை தாக்கிய அதிர்ச்சி. அது அவர்களது கம்பெனிக் கார். பெயர் இந்திரன் என்றானே அப்படி அவர்கள் கம்பெனியில் யாருமில்லையே. இதை விசாரித்தாக வேண்டும்.

அன்று இரவு அவருக்கு உறக்கமே இல்லை. மாலையில் அந்தக் கட்டைக் குரல் தொலைபேசியில் தந்த தகவல். அம்ருதா கொடுத்த காரின் நம்பர் இரண்டும் உறுத்திக் கொண்டேயிருந்தன.

## 11

மறுநாட்காலை ஆபீசுக்குப் போனதும் ராஜாராம் முதல் வேலையாகக் கணக்கரைக் கூப்பிட்டார்.

"நான் ஊரில் இல்லாதபோது கறுப்பு பியட் அதிகமாக உபயோகப்பட்டிருக்கு. ஏன்? யார் அதை எடுத்தது?"



முதலாளியின் முகத்தில் தெரிந்த கடுமை கணக்கரைக் கலக்கியது.

"டிரைவர் தாமோதரன் அதைத் தொடலேயில்லை. உங்க மகன்தான் தன் காரை வைத்துவிட்டு இதை எடுத்துக்கொண்டு போவார்"

"ஏன்?"

"தன் கார் ஏதோ ரிப்பேராகி விட்டதுன்னார் உடனே இவர் காரை ரிப்பேர் ஷாப்புக்கு அனுப்பி வச்சோம். ஒண்ணுமில்லே, சரியா இருக்குன்னு காரை டிரைவர் திருப்பி எடுத்துட்டு வந்துட்டான். ஆனாலும் அவர் கேட்காமல் பிடிவாதமா கறுப்புப் ஃபியட்டைத் தான் பத்து நாளுக்கு மேல் உபயோகித்தார்."

"எடுத்துப் போக அனுமதிச்சிருக்கக்கூடாது. அவன் கையில் கார் அகப்பட்டா உடைச்சி ஓடு பொறுக்கிவிடுவான். சரி சரி. இனிமே ஜாக்கிரதையாக இருப்போம்." சொல்லிவிட்டு ஃபைல்களைப் புரட்டினார்.

அடக்கமாட்டாத சினத்தில் அவர் உடல் அனலாக எரிந்தது. 'என்ன காரியம் செய்யத் துணிஞ்சிட்டான்!" பற்களைக் கடித்துக் கொண்டு குமுறினார்.

அன்று மாலை அவர் வீட்டிற்கு விரைவாக வந்துவிட்டிருந்தார். வெளியே போகத் தயாராக உடுத்துக் கொண்டு முன்னறைக்குள் மகன் வந்ததைக் கண்டதும் அவர் பொங்கிப் போய்விட்டார். "டேய் யோகேந்திரா இப்படிவா." உரத்த குரலில் கூவினார் இத்தகைய ஒரு நிலையை அவன் எதிர்பார்த்துத் தயாராக இருந்தான். தயக்கமில்லாமல் அவர் முன் வந்து நின்றான்.

''சுகுணா இங்கே வந்து தொலை.'' சிம்மக் குரலில் அவர் கர்ஜித்தபோது உள்ளேயிருந்து பதறிக்கொண்டு அவள் ஓடிவந்தாள்.

ஓசைப்படாமல் இறங்கி வந்த திவ்யாவும் அங்கே வந்து நின்றாள்.

''நம்ம வீட்டு மானம் கப்பலேற வேண்டாம் வேலையாட்கள் காதில் படத் தேவையில்லை.'' சொல்லிக் கொண்டே வாயிற் கதவையும் இடைக் கதவையும் சாத்தினார் ராஜாராம். சுகுணா நடுநடுங்கிப் போய் சுவரைப் பிடித்துக்கொண்டு நின்றாள். ''உன் பிள்ளை செஞ்சிருக்கிற காரியம் உனக்கு ஏதாவது தெரியுமா?'' என்று அதட்டியபடி அவர் நெருங்கியபோது அவள் வெதறிப் போனாள்.

''என்ன சொல்றீங்க. அவன் என்ன செய்துட்டான்?'' குழறினாள். கணவனை அந்தனையொரு கோபத்திலே அவள் பார்த்ததில்லை.

''என்ன செய்துட்டான்னா கேட்கிறே? நான் ஊரில் இல்லாதபோது கறுப்பு பியட்டை எடுத்துட்டு இந்தக் கவாலிப்பயல் எவளோ ஒருத்தியோட ஊர் சுத்தியிருக்கான்.'' உரத்த குரலில் உறுமினார்.

''அப்பா சொல்றது உண்மையா? யோகேந்திரா! என்னைப் பார்.'' கெஞ்சினாள் தாயார்.

அவன் அவளை நிமிர்ந்து பார்த்தான். ''அவள் எவளோ ஒருத்தியில்லை. புகழ்பெற்ற நடனமணி அப்ருதா. அவளை நான் விரும்புகிறேன். கல்யாணம் பண்ணிக்கிறதுன்னு முடிவு செய்துட்டேன்!''



''என்ன சொன்னே?'' வீடே அதிர்ந்து போகும் குரலில் கத்திய ராஜாராம், ஒரே எட்டில் அவன் அருகே நெருங்கி ஓங்கி அவன் கன்னத்தில் ஓர் அறை விட்டார்.

திவ்யா பயத்துடன் தன் கன்னத்தைத் தடவிக் கொண்டாள். அவள் நெஞ்சைத் துக்கம் கவ்விக் கொண்டது.

''உன் மென்னியை முறிச்சுக் கொல்லையிலே புதைச்சுடுவேன், படுவா. கல்யாணமா பண்ணிக்கப் போற அவளை?'' மூச்சிரைக்க, கையை ஓங்கிக் கொண்டு ஆவேசமாக அவர் நெருங்கியதும் சுகுணா ஓடிச்சென்று இடையே நின்று கொண்டாள்.

''வேண்டாங்க அவனை விட்டுடுங்க. நான் புத்தி சொல்றேன்.'' அவள் முடிக்குமுன் இன்னொரு அறை பளார் என்று அவன் கன்னத்தில் விழவே, தாயார் நிலை குலைந்து போனாள். ''அடிக்காதீங்க, என்பிள்ளையை அடிக்காதீங்க என் பிள்ளையை அடிக்காதீங்க, உங்களைக் கையெடுத்துக் கும்பிடறேன். விட்டுடுங்க. என் மகனை விட்டுடுங்க'' பெற்ற பாசத்திலே துடித்துப்போன தாய் அவரது கால்களைக் கட்டிக் கொண்டு கதறி அழுதாள்.

## 12

அன்று அவர்கள் அனைவரும் பட்டினியாகவே படுத்து விட்டனர். ''பசிக்கலை. ஒண்ணும் வேணாம்.'' சுருக்கமாகச் சொல்லிவிட்டு ராஜாராம் நேரே தமது அறைக்குச் சென்று விட்டார். யோகேந்திரன் யாரையும் பார்க்க விரும்பாதவன்போல் அறைக்குள் சென்று கதவை அடைத்துக் கொண்டு விட்டான்.

''என்னால சாப்பிட முடியாது. வற்புறுத்தாதீங்க.'' மகளும் கூறிவிட்டு மாடிக்கு விரைந்தாள்.

குழந்தைகள், கணவன் எல்லோருமே சாப்பிடாமல் பட்டினி கிடக்கும்போது சுகுணா மட்டும் எப்படிச் சாப்பிடுவாள்? வேலையாட்களுக்கு உணவளித்து விட்டுக் கதவைத் தாளிட்டுக் கொண்டு அறைக்குள் வந்தாள்.

இருபத்திரண்டு வருட தாம்பத்திய வாழ்வில் அவள் அவரைக் கண்டு அப்படி நடுங்கியதே இல்லை. காடியோ இங்கமோ படுத்திருக்கும் குகைக்குள்ளே தனியே நுழைவது போன்ற கலக்கம்.

தலை வரை போர்வையை இழுத்து விட்டுக் கொண் டிருந்தார் ராஜாராம். மெல்ல சப்தமிடாமல் கட்டிலின் ஓரமாக வந்து உட்கார்ந்தாள். மூச்சு விட்டாலும் அவர் விழித்துக் கொண்டு விடுவாரோ என்ற அச்சம். வெகு நேரம் இருட்டிலே அவள் உட்கார்ந்திருந்தாள். எத்தனை கட்டுப் படுத்தியும் கண்களிலிருந்து நீர் மெல்ல கன்னத்தின் மேல் வழியத்தான் செய்தது. மூக்கையடைத்த நீரை மெல்லப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள்.

'பேயறைவது போல அறைஞ்சிட்டாரே குழந் தையை!' மீண்டும் மீண்டும் உள்ளம் அதையே எண்ணிப் புலம்பியது. முடிவில் களைப்புத் தாளாமல் படுக்கை ஓர மாகவே சுருண்டு கொண்டாள்.

மறுநாள் அவரது பிறந்த நாள். நட்சத்திரப்படிதான். எப்பொழுதுமே அந்த நாள் சிறப்பாகக் கொண்டாடப் படுவது வழக்கம். பூஜையை முடித்துக் கொண்டு ஊஞ்சல். மீது உட்கார்ந்திருந்த அவர் அருகே வந்தாள் சுகுணா.

''இந்தாங்க பாயசம். காப்பிக்கு முன்னால இதை சாப்பிடுங்கோ.'' கடுமையான அவர் முகத்தைப் பாராமல் மெதுவாகக் கிண்ணத்தை ஊஞ்சல் மீது வைத்தாள்.

''மருமகள் வரப் போகிற சந்தோஷத்தைப் பாயாசம் வச்சுக் கொண்டாடுறியோ?'' ஏளனம் தொனிக்கக் கேட்டார்.



சுகுணாவுக்கு அழுகை தொண்டையை அடைத்தது.

''இன்னிக்கு உங்க பிறந்த நாளுங்க...''

''அது ஒண்ணுதான் பாக்கி. இதைக் கொண்டு போய் அந்த ராஸ்கல் தலையில் கொட்டு...'' கோபமாகச் சொல்லி விட்டு எழுந்து முன்னறைக்குச் சென்றுவிட்டார்.

இமைகளைச் சுட்டது கண்ணீர். எப்படியோ சமா ளித்தபடி அவளும் சமையலறைக்குள் புகுந்து விட்டாள்.

திவ்யா ஒரு மரத்தட்டில் காப்பிக் கெட்டிலும் கோப் பையும், ஒரு தட்டில் இடியாப்பத்துடன் ஒரு கிண்ணம் தேங்காய்ப் பாலும் எடுத்துக் கொண்டு மாடிப்பக்கம் விரைந்தாள்.

யோகேந்திரன் குளித்து முடித்து விட்டு வேறு உடை உடுத்திக் கொண்டு தலை சீவியபடி கண்ணாடி முன் உட் கார்ந்திருந்தான்.

''ஒருவேளை பசியைக் கூட என்னால தாங்க முடியலே. எழுந்ததும் முதல்லே பல் விளக்கிக் காப்பி பல காரம் சாப்பிட்டு விட்டுத்தான் குளிச்சேன்.'' தட்டை அவன் அருகே முக்காலி மீது வைத்தாள்.

''எனக்கும் பசிக்குது. நான் வெளியில போய் ஏதாச்சும் சாப்பிடலான்னு கிளம்பிட்டு இருக்கேன்.'' அவள் திரும்பிய போது அவனது இடது கன்னமும் காதும் சிவப்பாகக் கன்றிப் போயிருந்தன. அவள் நெஞ்சம் துணுக்குற்றாள்.

''வெளியில் ஏன் போய்ச் சாப்பிடணும்? இது நம்ம வீடு. நமக்கு எல்லா உரிமையும் உண்டு.'' கோபமாகக் கூறியபடியே, கோப்பையில் காப்பியை வார்த்து அவன் அருகே வைத்தாள்.

''இன்னைக்கி அப்பா பிறந்த நாள். அம்மா ஸ்பெஷல் பலகாரம் இடியாப்பம் செஞ்சாங்க.' சொல்லிக் கொண்டே தேங்காய்ப் பாலை ஊற்றி, சர்க்கரையைத் தூவி அவன் அருகே தட்டை வைத்தாள்.

''நீண்ட காலம் அப்பா வாழட்டும். ஆனால் அவரது அக்கிரமங்கள் ஒழியட்டும் இதுதான் என் வாழ்த்துக்கள்!'' என்று சொல்லிக் கொண்டே அவன் தட்டை எடுத்து ஆவலுடன் ஆப்பத்தைப் பிட்டு வாயில் அடைத்துக் கொண்டான். அத்தனை பசி அவனுக்கு!

இன்னொரு கோப்பை காப்பியை ஊற்றிக் கொண்டு அவன் எதிரே வந்து அமர்ந்தாள் திவ்யா

''ஆனாலும் அப்பா அப்படி அடிச்சிருக்கப்படாது. காது கூடச் செவிடாப் போயிருக்கும். மனுஷனுக்கு எத்தனை ஆத்திரம் பார்த்தியா? நான் ரொம்பப் பயந்துட்டேன். அம்மா அழுறதைப் பார்த்து என்னால் தாங்கவே முடியலே. பாவம்! நம்பமேலே உசிரையே வச்சிருக்காங்க.'' காப்பியைப் பருகியபடியே பேசினாள் திவ்யா.

திடீரென அவன் சிரித்தான். காப்பியை ஒரே வாயாகப் பருகிவிட்டு, கையைக் கழுவிக் கொண்டுவந்து உட்கார்ந்தான்.

''ஒரு தடவை நாம் போய்ப் பார்த்தமே அந்தப் பழைய படம் 'நல்ல பூமி'ங்கிற கதை—'பேர்ல்பக்' எழுதினது—அந்த நினைப்பு வந்திட்டுது எனக்கு. ராத்திரி கூட நானே அதை நினைச்சுச் சிரிச்சிட்டேன்.''

திவ்யா அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''தான் பிரியமாகப் பழகுகிற காதலியுடனே மகனும் விரும்பிப் பழகறான்னு தெரிஞ்ச தந்தை அதிர்ந்து போகிறான். அப்பா மகனை அடிச்சு நொறுக்கறானே, அதே காட்சிதான் நம்ம வீட்டிலேயும் நடந்தது. அதை நினைச்சா சிரிப்பு வருது.''



''ரொம்ப வலிக்குதா யோகி! எதாச்சும் மருந்து போட்டுக்கிறியா?'' பரிவுடன் விசாரித்தாள் தங்கை.

''இதெல்லாம் என்ன வலி? மனசுக்குத்தான் இன்னமும் வலி, வேதனை. அப்பா என்னை அடிச்சதுக்குக் கவலைப் படலை. நான் கொடுத்த அதிர்ச்சி அப்பாவைக் குணப்படுத்தி இருந்தால் நான் சந்தோஷமாய்ச் செத்துப் போகக் கூடத் தயார். 'எல்லாம் என் தவறு. நான் நல்ல படியான வழி காட்டியிருந்தா இந்தப் பையன் புத்தி இப்படிக் கோணலாய்ப் போயிருக்காது'ன்னு நினைத்துக் கொண்டிருப்பார். அந்த அளவு அவர் மனசிலே பலமான அடி விழலையே? இன்னமும் அவர் தான் எதுவேணாலும் செய்யலாம். குடும்பத்தில் மட்டும் எந்தத் தவறும் நேரக் கூடாதுங்கிற மனப்பான்மையில இருக்கார். அதை முறிக்கணும். தனது தவறை உணர்ந்து பச்சாதாபப்பட்டு இனியாவது வாழ்க்கையில அம்மாவுக்கு இணையா ஒழுக்கமான புருஷனா அவர் வாழணும். அதுக்கு அவருக்கு இடி விழுந்தாற்போல ஒரு பயங்கர அதிர்ச்சி வைத்தியம் தேவை. அதை நாம கொடுத்தாத்தான் குணப்படுத்த முடியும். நம் தாயாரின் நலனுக்காக, உரிமைக்காக நாம தீயில் குதிக்கணும்னா அதுக்கும் தயாராய் இருக்கணும். என்ன சொல்றே?'' பொருள்பட அவளைப் பார்த்தான்.

''யோகி புரியுது. இந்த அப்பா சுலபத்தில் வழிக்கு வர மாட்டார்னு ஒப்புக்கிறேன்.''

''இன்னமும் நம்பிக்கை இழக்கலே. விடியற்காலை வேளையில் அம்ருதாவுக்குப் போன் பண்ணினேன். என்னைப் பகல் பத்து மணிக்கு இந்த நம்பருக்குக் கூப்பிடுங்க. ரொம்ப முக்கியமான சங்கதி. நம் இருவரைப் பத்திய முக்கியமானதொரு திட்டம் அப்படின்னு சொன்னேன். கட்டாயம் அவன் போன் செய்வான்.''

''இது அப்பாவின் ஆபீஸில் உள்ள 'பிரைவேட் நம்பராச்சே!''

"காரணமாத்தான் கொடுத்திருக்கிறேன். அங்கே ஒரு வேடிக்கை நடக்கப் போகுது பாரேன்." புன்முறுவலித்தான் சகோதரன்.

அன்று முழுவதும் அவன் வெளியே செல்லவில்லை. படுக்கைமீது சாய்ந்து கொண்டு கதைப் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

திவ்யா மட்டும் கல்லூரிக்குப் போய் விட்டிருந்தாள். ராஜாராம் காலைப் பலகாரம்கூடச் சாப்பிடாது வெறுப்புடன் ஆபீஸுக்குப் புறப்பட்டார். காலை முழுவதும் அவருக்கு வேலையே ஓடவில்லை. திடீரெனத் தமது வாழ்க்கையில் ஏற்பட்டுவிட்ட குழப்பங்களை எண்ணிக் குமைந்து கொண்டிருந்தார். ஆபீஸ் பையன் கொணர்ந்து வைத்த ஐஸ் துண்டம் போட்ட கூஜா நீர் முழுவதையும் குடித்தும் அடிவயிற்றில் நெருப்பாக எரிந்த அந்த 'பகீர்' உணர்வைத் தணிக்கவே முடியவில்லை. 'ஒரு சமயம் எல்லை மீறி விளையாடி யோகேந்திரனை அப்படியா மயக்கி விட்டிருக்கிறாளோ? தம்பியை ஒத்தவன் என்ற அறிவு கூடவா இல்லை...லஜ்ஜையின்றி எத்தனை பச்சையாக பேசுகிறாள் அகங்காரி!'

தமக்குள்ளே கசப்புடன் வெகுண்டபடி உட்கார்ந்திருந்தார். ஏ.சி. அறைகூடச் சுண்ணாம்புக் காளவாயாக உடலைத் தகித்தது. உள்ளத்திலே மகனைப் பற்றிய துன்ப எண்ணங்கள். ஆபீஸ் பையன் மேஜை மீது டிபன் செட்டைக் கொண்டுவந்து வைத்துவிட்டுப் போனான்.

கருணாவும் அவரைப் போலவே அதிர்ந்து போய் விட்டிருந்தாள். மகனுக்காக அழுதழுது அலண்டு போய் இருந்தது மனம் எனினும் கடமையை மறக்காமல் கணவனுக்குப் பகல் உணவை அனுப்பியிருந்தாள்.

டிபன் செட்டைப் பிரித்து டப்பாக்களைத் தனியே மேஜைமீது பரப்பினார். மேல் தட்டிலே ஒரு காகிதத் துண்டு. கருணாதான் எழுதி வைத்திருந்தாள்.



'வயிற்றில் லேசாக ஆரம்பித்திருக்கிற புண்ணுக்குப் பட்டினியாக இருப்பது நல்லதல்ல உங்களுக்கே தெரியும். தயவு செய்து எனக்காக, நான் பிசைந்து அனுப்பியிருக்கும் தயிர் சோற்றையாவது ஒரு வாய் சாப்பிடுங்கள். இன்று உங்கள் பிறந்த நாள். நீங்கள் சாப்பிடாவிட்டால் நான் மட்டும் சாப்பிட முடியுமா? நீங்கள் என்னைப் பட்டினி போட்டு வேடிக்கை பார்க்க நான் செய்த தவறு...?'' பள்ளிக் குழந்தையினது போன்ற கோழிக்கால் எழுத்துக்கள். ஆனாலும் அவர் மனத்தை என்னவோ செய்து விட்டது.

கருணா வெகுளி. ஆனால் வாழ்க்கையில் அவருக்குச் சங்கடங்கள் ஏற்பட்ட போது பலத்த ஓர் இரும்புத் தூணாகத் துணை வந்து விடுகிறாளே! எத்தனை அன்பு! எத்தனை பரிவு! சதா கணவனைப் பற்றியே நினைப்பு! எத்தனை நல்ல மனது அவளுக்கு. நெஞ்சம் உருகிப் போனார்.

போனைச் சுழற்றினார். ''கருணா, மணி ரெண்டாகப் போவுது. ராத்திரியிலிருந்தே நீயும் பட்டினி. தயிர் சாதம் ஜோரா இருக்கு. இந்த வெயிலுக்கு ஏத்ததாகத்தான் அனுப்பியிருக்கே. நீயும் சாப்பிடு. பட்டினி கிடக்காதே. சாயரட்சை கோவிலுக்கு அர்ச்சனை பண்ணப் போகணுமா? அழைச்சிட்டுப் போறேன். சின்ன விஷயம் இதுக்கு ஏன் கவலைப்படறே?''

ஃபோனில் கனிவாகப் பேசினார் பட்டு போலக் காதுகளைத் தழுவிய அவளது மென்மையான குரல், பதவிசான பதில்கள், அவரது மனப்புண்ணுக்கு மருந்தாய் இருந்தது.

'இந்தக் கருணாவிற்கு...நோ...நோ...' தமக்குள்ளேயே முணுமுணுத்துக் கொண்டார்.

தயிர் சாதம் முழுவதையும் சாப்பிட்டார். மீண்டும் பையனைத் தண்ணீர் கொண்டு வரச் சொல்லிக் குடித்தார்.

இப்போது மனத்தில் எறிதளவு அமைதி தொய்ந்து விட்டிருந்த உணர்வுகள் நிமிர்ந்து கொண்டதைப் போன்ற தெம்பு.

மிகவும் பரபரப்புடன் நமது வேலையைக் கவனித் தார். ஆபீஸ் முடிந்து வெளிவரச் சில நிமிடங்களே இருந் தன. தொலைபேசி மணி ஒலித்தது. அவரது அந்தரங்க ஃபோன் அது. மிகமிக நெருக்கமான தொடர்பு கொண்ட நண்பர்கள், சுகுணா, குழந்தைகள், அல்லது முக்கிய வியாபார சம்பந்தப்பட்டவர்கள் மட்டுமே அறிந்த நம்பர்.

வியப்புடன் போனை எடுத்தார் ''ஹாய் மிஸ்டர் இந்திரன்.'' கணீரென்று வந்த அந்தக் குரல் அவருக்குப் பழக்கமானது. தனது திகைப்பைச் சமாளித்துக் கொண் டார்.

''இந்திரன்...?'' அடிக் குரலில் தொண்டையைக் கனைத்தபடி கேட்டார்.

''ஆமாம். மிஸ்டர் இந்திரன் வேண்டும்.'' என்றாள் அவள்.

தாங்கமுடியாத கோபத்திலே அவர் உரக்கச்சிரித்தார். மறுமுனை வரை அதிரும்படியாக, ''ஹா, ஹா'' என்ற ராட்சச் சிரிப்பு.

''இது...இந்த நம்பர்...யாரு...யாரது சிரிக்கிறது? மிஸ்டர் இந்திரன் இல்லையா?'' அதட்டினாள், மறுபுற மிருந்து.

''அம்ருதா! உனக்கு அதுக்குள்ளேயே என் குரல் கூட மறந்திட்டுதா? இந்திரனைப் பிடிச்சிட்டமேங்கிற சந்தோ ஷத்திலே இந்தச் சந்திரனைப் பத்திய நினைப்பே இல்லியா?'' பதிலுக்கு அதட்டினார் ராஜாராம்.

''என்ன இது? நீங்களா...இங்கே எப்படி...?'' குழறினாள் அவள்.



''இது என்னுடைய நம்பர். உனக்கு மந்திரம் போடு றவனுடைய அப்பன்தான் நான். இதுவரை உன் சந்திரனாக இருந்தவன், இப்ப சனீஸ்வரனா மாறிட் டவன்.''

''என்ன சொல்றீங்க?''

''உண்மையைச் சொல்றேன். நீ பலே ஆள். அப்பனை யும் மகனையும் சேர்த்தே வளைக்கப் பார்க்கிறவள். திருடனுக்குக் கூடக் கன்னக்கோல் வைக்கிற இடம், சாத்தற இடம்னு தர்மம் உண்டு. உனக்கு ஒரு மண்ணும் கிடையாது அப்படிப்பட்ட கேவலமானவள் நீன்னு புரிஞ்சிட்டுதே, அதுவே போதும்.''

''மிஸ்டர் ராஜாராம், ரொம்ப அதிகம் பேசத் தேவை யில்லை. நாம் சந்திச்சோம். பழகினோம். நெருங்கிய உறவு கொண்டோம். எனது அருகாமையை நீங்க விரும் பினீங்க. நானும் உங்க நேசத்திலே பெருமைப்பட்டேன். இதைத் தவிர நமக்குள்ளே என்ன பந்தம் இருக்குது? என்ன சொந்தம் ஏற்படுத்திக்கிட்டீங்க?''

''இருந்த கொஞ்ச நஞ்ச பந்தத்தையும் நேத்தோட உதறி எறிஞ்சுட்டேன். புரிஞ்சுக்க. இந்திரனை, இந்திரனை என் மகனை மயக்கி எதாச்சும் தப்புத் தண்டாவில் இறங் கினே. இந்த ராஜாராம் யார்னு தெரிஞ்ச கொள்வே. நான் எதுக்குமஞ்சாதவன். புரியுதா?'' மிரட்டினார் அவர்.

''என்னைப் போல பெண்கள் இந்தப் பயமுறுத்த லுக்கெல்லாம் மிரண்டு போயிட மாட்டாங்க. அதை முதல்லே நீங்க தெரிஞ்சிக்கிடுங்க.'' மறுமுனையில் அலட்சி யக் குரல்.

''ஷட் அப்...யூ...யூ...'' அவர் கோபாவேசத்தில் தடு மாறினார்.

''யூ ஸ்டுபிட் ஓல்ட் மேன்! எனக்கு மட்டும் உங்க சகவாசம் தேவையா என்ன? தேவையில்லை.'' டக்கென ஃபோனை வைத்தாள் அவள்.

அபிஷேகம் செய்தது போல ராஜாராமுக்குத் தலை முதல் கால்வரை வியர்வை பெருக்கெடுத்தது. நெஞ்சு படபடத்தது. அதிர்ந்து போய் அப்படியே உட்கார்ந்து விட்டார்.

வீட்டுக்கு வந்ததும் குளியலறைக்குள் புகுந்து குழாயைத் தலைமீது திருப்பி விட்டுக் கொண்டார். அம்ருதாவின் தொடர்புக்கு முழுக்கு என்பது போன்ற ஒரு ஸ்நானம். பட்டுக் கரை வேட்டியும், மல் ஜிப்பாவும் அங்கவஸ்திரமுமாக நெற்றியில் திருநீறு துலங்க மனைவியுடன் கோவிலுக்குப் புறப்பட்டார். சுகுணா எல்லோருக்கும் பொதுவாக அர்ச்சனைசெய்து முடித்துக் கொண்டாள்.

பக்கத்திலே பத்தினித் தெய்வமாக அவள் அமர்ந்திருக்க பென்ஸைத் தாமே கடற்கரை ஓரமாக ஓட்டிக் கொண்டு சென்றார்.

"என்னங்க இருட்டிப் போயிட்டுது. வீட்ல போட்டது போட்டபடி கிடக்குது." பதறினாள் அவள்.

"பரவாயில்லை. உன்னை இப்படி வெளியே அழைச்சிட்டுப் போய் ரொம்ப நாளாச்சு. நிசமாவே நீ பகல் வேளை சாப்பிட்டியா? இத பாரு சுகுணா முகமெல்லாம் வாடியிருக்கு. நான் கோபக்காரன். உனக்குத் தெரியுமில்லியா? யோகேந்திரனை அடிச்சிட்டு என் மனசு கூட அதிகமா வேதனைப் பட்டது. அவன் செய்திருக்கிறதைக் கேட்டா எந்தத் தகப்பனுக்குத்தான் கோபம் வராது நீயே சொல்லு." என்றார் கனிவுடன்.

"நீங்க கோபப்பட்டது நியாயம்தாங்க. ஆனால் அவன் அறியாப் பிள்ளை. நாமதானே அவனுக்கு நேர் வழி காட்டணும்?" மெலிந்த குரலில் மென்மையாகக் கூறினாள் சுகுணா.



சுருக்கெனப்பட்டது அவருக்கு. "வீட்டுக்குப் போகலாம், வா எனக்கு 'ஜொப்பி பார்த்திட்' உன் வாயாலே சொல்லு" கொஞ்சலாகக் கூறியபடி வண்டியை ஓட்டினார்.

வீட்டிற்குள் நுழைந்ததும் முதல் கேள்வியாக அவள் கேட்டாள். "திவ்யா வந்திட்டாளா? தாகத்துக்கு ஏதாச்சும் சாப்பிட்டாளா?"

"அம்மாவை இன்னமும் காணலீங்க. போன் கூடச் செய்யலீங்க..."

ஏனோ அவள் மனத்தில் ஒரு கலவரம் திடீரெனத் தோன்றியது!

மாடிக்கு ஓடினாள். திவ்யாவின் அறை திறந்தபடி இருந்தது. அங்கும் அவளைக் காணவில்லை. யோகேந்திரன் அவனது அறையில் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தான்.

சம்பந்தியம்மாள் வீட்டுக்கு அவசரமாகப் போன் செய்தாள். ஒரு சமயம் அங்கே போயிருப்பாளோ?

"என்னங்க, சுகமா இருக்கீங்களா? சித்தார்த் நியூயார்க்கிலேருந்து கடுதாசி போட்டிருக்கான். அவருக்குக் கூட ஆபீசுக்குப் போட்டிருக்கிறதா எழுதி இருக்கான். திவ்யா எப்படி இருக்கு? அன்னிக்கி வந்தப்போ தலைவலின்னு சொல்லிட்டிருந்தது. கண்ணை டெஸ்ட் பண்ணிக்கச் சொன்னேன். கண் டாக்டர் கிட்ட போச்சா?"

சுகுணாவுக்குக் கையும் காலும் தந்தியடித்தன. வார்த்தைகள் தடுமாறின. என்னவோ நடந்துவிட்டிருக்கிறது என்ற உள்ளுணர்வின் எச்சரிக்கை 'நல்லவேளை, திவ்யாவைப் பற்றிக் கேட்காமல் இருந்தோமே.' என்று எண்ணிக் கொண்டு பேச்சை முடித்து விட்டுக் கணவனைத் தேடிக் கொண்டு வந்தாள்.

''மணி எட்டு அடிக்கப்போகுது. இன்னுமா திவ்யா வரலை?'' கேட்டபடி முன்னறைக்குள் நுழைந்த ராஜாராம், டெலிவிஷனைப் போட அருகில் சென்றபோதுதான் கவனித்தார். அவரது பெயர், விலாசம் தாங்கிய கடித உறை! திவ்யாவின் கையெழுத்து! தாக்கி வாரிப் போட, அதைத் திகிலுடன் பிரித்துப் பார்த்தார்.

''அன்புள்ள அப்பாவுக்கு,

நான் எடுத்துக்கொண்ட முடிவு உங்களுக்கு மாபெரும் அதிர்ச்சியாக இருக்கலாம். மன்னிக்கவும். சித்தார்த் எனக்கு எழுதியிருந்த கடிதமும் இத்துடன் இருக்கிறது. அந்தக் கடிதம்தான் என்னை இப்படி ஒரு முடிவு எடுக்கத் தூண்டிவிட்டது.

நான் உங்கள் பணத்தையோ பொருளையோ எதையுமே எடுத்துப் போகவில்லை. கட்டின சேலையுடன் எனக்கு நிம்மதியான வாழ்க்கையை அளிக்கக்கூடும் என்ற நம்பிக்கையுடன் உங்கள் டிரைவராக இருந்த தாமோதரனுடன் வாழப் புறப்பட்டு விட்டேன். அவரை எனக்கு மிகவும் பிடித்து விட்டது.

மன்னித்து வாழ்த்தவும்...''

நெஞ்சும் வாயும் உலர்ந்து விட்டன அவருக்கு. வேகத்துடன் சித்தார்த்தின் கடிதத்தைப் பிரித்தார். நியூயார்க்கிலிருந்து எழுதி இருந்தான்.

'திவ்யா!

நாம் இருவரும் ஒருவரை ஒருவர் அன்போடு நேசித்தோம். ஆனால் திருமணம் செய்து கொண்டு தம்பதிகளாக வாழத்தான் கொடுத்து வைக்கவில்லை. இங்கே வந்த பிறகு எனக்குச் சில நண்பர்கள் மூலம், உன் தந்தையைப் பற்றித் தெரிய வந்தது. குடி, பெண்கள் சகவாசம் எனப் பல கெட்ட குணங்கள் என்று கேள்விப்பட்டேன். அதிர்ச்சியுற்றேன்.



நாங்கள் ஏழைகள்தான். ஆனாலும் கொள்கை நோக்கம் கொண்டவர்கள். அதனால் உன்னை உன் பணத்திற்காக மட்டும் நான் மணக்க முடியாது. வருந்துகிறேன். எனக்குக் குடும்பத்துச் சூழ்நிலை மிக முக்கியமானது.'

''சுகுணா!'' அவர் போட்ட கூச்சலைக் கேட்டு ஓடோடி வந்தாள் மனைவி.

பேயறைந்து விட்டது போன்ற முகம்.

''உன் பெண் நம்ம தலையில கல்லைத் தூக்கிப் போட்டு விட்டா. நாம நாசமாயிட்டோம். ஐயோ நான் என்ன சொல்லுவேன். நம்ம...டிரைவர் தாமோதரனோட...''மேலே பேச முடியாமல் அவர் திணறினார்.

சுகுணாவிற்கு வயிற்றைப் பிசைந்தது. ''ஐயோ திவ்யா...?'' அலறினாள். அடுத்த கணம் அழ முடியாமல் அப்படியே சோபாவில் உட்கார்ந்தாள்.

அவசரமாக ஃபோனைச் சுழற்றினார் ராஜாராம். ''இருங்க. போலீஸ் கிலீஸ் எதுவும் வேணாம். வெட்கக் கேடாயிடும்.''

வேலையாட்களை அப்பால் போகச் சொல்லி விரட்டினார். முன்னறைக் கதவையும், வாசல் கதவையும் மூடினார். தலைமைக் கணக்கர் கருணாகரன் வீட்டுக்குப் பக்கத்திலே அந்த மருந்துக் கடை இருப்பது அவருக்குத் தெரியும்.

'அவசரம் என்று கூப்பிட்டால் என்னை அழைப்பாங்க.' என்று முன்னமேயே அவர் சொல்லியிருந்த நினைப்பு. எண்களைச் சுழற்றிக் கருணாகரனை அவசரமாகக் கூப்பிட்டார். அவரது சிபாரிசின் பேரில்தானே அந்தப் பாவிப் பயல் தாமோதரன் டிரைவராக வந்து சேர்ந்தான்?

"என்ன ஸார்?" கருணாகரன் பரபரப்புடன் கேட்டார்.

"உடனே ஒரு டாக்ஸியில் வீட்டுக்கு வாருங்கள்; நேரே பேசணும். ரொம்பப் பெரிய விஷயம் நடந்திட்டுது." திணறினார் அவர்.

"கருணா! அம்மா கருணா! இந்தப் பொண்ணும் இப்படிச் சதி செய்துவிட்டுதே. நான் என்னம்மா செய்வேன்?" தாள முடியாத துயரத்தில் விக்கி விக்கி அழுதார் ராஜாராம்.

## 13

அன்று மீனா மிகவும் களைத்து விட்டிருந்தாள். வேலைகளின் கடுமை, நெருப்பாகக் கொளுத்தும் வெய்யில், ஓட்டு வீட்டின் புழுக்கம் எல்லாம் சேர்ந்து கொள்ளவே! சமையலை முடித்ததும் நடை விளக்கைப் பொருத்தி விட்டுக் கூடத்தில் தரையில் பாயைப் பிரித்துப் போட்டுக் கொண்டு படுத்துவிட்டாள். நேரம் போவதே தெரியாமல் மெய்மறந்ததொரு தூக்கம்.

வாசற் கதவு பலமாக இடிபட்டது. விழித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள்.

அலமாரித் தட்டிலிருந்த கடிகாரம் இரவு மணி எட்டாகிக் கொண்டிருப்பதைக் காட்டியது. ஏறக்குறைய அந்த நேரத்தில்தான் மகன் வரப்போவதாகச் சொல்லியிருந்தாள். சேலைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள். பாயைச் சுருட்டி சுவர் ஓரமாக வைத்தாள்.



"இதோ வந்துட்டேன்." குரல் கொடுத்தபடியே வாசலுக்கு விரைந்து வந்து கதவைத் திறந்தவள் திடுக்கிட்டுப் போனாள்.

தோளில் மாட்டிய கைப்பையுடன் ஓர் இளம்பெண் வெளியே நின்று கொண்டிருந்தாள்.

"இதுதானே மிஸ்டர் தாமோதரன் வீடு? நீங்க ளுங்க அம்மாவா?" கேட்டபடி அந்தப் பெண் புன்முறுவலித்தபோதே அவளுக்குச் சந்தேகம்.

"ஆமாம். நீ யாரம்மா? இந்த வேளையில் தன்னந்தனியாக வந்திருக்கே!" குழுமையான குரலில் விசாரித்தாள்.

"என் பெயர் திவ்யா. உங்களோடு தங்கியிருக்க வீட்டை விட்டுப் புறப்பட்டு வந்துவிட்டேன், நான் உள்ளே வந்து பேசலாமா?" கேட்டபடி அவள் உள்ளே வந்து கூடத்தில் நின்றாள்.

வந்தவள் யார் என்று மீனாவுக்கு வினாடியில் விளங்கி விட்டது. அவளால் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள இயலவில்லை. "என் மகன் தாமோதரன் வேலை பார்க்கிற கம்பெனியில் முதலாளி மகள்தானே?" எரிச்சலுடன் கேட்டாள்.

"அடைக்கலம் கேட்க வந்தேன்னு வச்சுக்கோங்களேன்."

"உன்னையொத்த பெரிய இடத்துப் பெண்ணுக்கு அடைக்கலம் கொடுக்க எங்களுக்கு என்னம்மா யோக்கியதை இருக்கு? யோசிச்சுப் பார்த்தியா?"

"யோசிச்சேன். உங்கள் மகன் தாமோதரன் ரொம்ப நல்லவர். அதனால்தான் இங்கே வந்து சேர்ந்துட்டேன்

பொங்கிக் கொண்டு வந்த கோபத்தை மீனாவால் அடக்கமுடியவில்லை. "என் பிள்ளை நல்லவன்; ஒத்துக்கிறேன். நீயோ பொல்லாதவள். இல்லாவிட்டால் இந்த இருட்டு வேளையில் முன்பின் தெரியாத என் வீட்டுக்கு துணிச்சலோடு புறப்படுவாயா? ம்! நீ மட்டும் என் பெண்ணாக இருந்திருந்தா நீ செய்திருக்கிற இந்த அக்ரமத்துக்கு இந்நேரம் கிழிச்சுக் கூறு போட்டிருப்பேன். எங்களையெல்லாம் யாருனு நினைச்சுக்கிட்டு இப்படி விளையாடறே?" சீறினாள் அவள்.

"நான் சொல்றதைக் கேளுங்கம்மா," திவ்யா முடிக்குமுன் மீனா உரத்தகுரலில் ஆத்திரமாகப் பேசினாள்.

"எனக்கு எல்லாம் தெரியும். என் பிள்ளை சொல்லியிருக்கிறான். மாருக்கு இளைச்சவன் பிள்ளையார் கோயில் ஆண்டின்னு சொல்வாங்க. அதுபோல வாயைத் திறக்காத நல்ல பையனைப் பார்த்தா குறிவச்சே? நீ ரொம்பக் கெட்டிக்காரி. 'எனக்கு இந்த கல்யாணம் வேண்டாம். டிரைவர் தாமோதரனை நான் விரும்பறேன்'னு உங்கப்பாவுக்கு கடிதாசி எழுதி வச்சிட்டு வந்திருப்பே. இன்னும் சித்த நேரத்திலே அவர் படை திரட்டிக்கொண்டு இங்கே வந்து நிற்பார். அதுக்கப்புறம் என்ன நடக்கும்னு எனக்குத் தெரியும். அதனாலே எதுவும் விபரீதமாக ஆகிறத்துக்கு முந்தி நீ வந்த சுவடு தெரியாம கிளம்பிடு. ஆமாம் உடனே போய்த்தொலை."

"உங்க மகனைப் பார்த்து பேசும்வரை நான் இங்கிருந்து கிளம்புவதாக இல்லை" பிடிவாதமாகப் பதிலளித்த திவ்யா, கயிற்றுக் கட்டிலின்மீது சுவாதீனமாக உட்கார்ந்து கொண்டாள்.

மங்கிய விளக்கொளியில் பளிச்சிட்ட கொள்ளை அழகு. படித்த பெண். இப்படி ஒரு விபரீத புத்தி ஏன்? ஒரு சமயம் பைத்தியமோ?



வாசற்படியருகே செருப்புச் சப்தம் கேட்டதும் திரும்பினாள் மீனா.

நடையில் செருப்புக்களை கழற்றிவிட்டு உள்ளே புகுந்த தாமோதரன் உறைந்துபோய் விட்டான் ஒரு கணம்.

"ஹாய் தாமு!" விசாரித்தபடி திவ்யா எழுந்து நின்றாள்.

முகம் இறுகிப்போன அவன், அம்மா பக்கம் அவசரமாகப் பார்த்தான்; "என்னம்மா இது?" அடக்கமாட்டாத சினத்தில் பொங்கினான்.

"அதையேதான் நான் உன்கிட்ட கேட்க இருக்கேன். இந்தப் பெண்ணுக்கு என்ன நெஞ்சழுத்தம்... இந்த வேளையில் வீட்டைவிட்டு இங்கே வந்து நிக்கிறாளே? உண்மையைச் சொல் தாமு! இது உன் ஏற்பாடு இல்லையே?" தாயார் கோபத்துடன் வெடித்தாள்.

"அன்னிக்கும் சத்தியம் செய்தேன். இப்பவும் சத்தியமாகச் சொல்றேன். அந்தப் பொண்ணு இங்கே வந்து நிற்கப் போகுதுன்னு நான் கனவிலே கூட நினைச்சுப் பார்க்கலை அம்மா. இது ஏதாவது சூழ்ச்சியா? இல்லே, இதுக்குப் பித்துப் பிடிச்சுப் போய் இப்படி நடக்கிறதா? எனக்கொண்ணும் விளங்கலை." துக்கமும் கோபமுமாகப் படபடத்தான்.

"கேட்டுக்கோம்மா தாயே! என் பிள்ளை வரச் சொல்லலை. உன்னைப் பத்தி அவனுக்கு எந்தவிதமான எண்ணமும் ஆசையும் கிடையாது. உங்க வீட்டிலே உனக்கு யாரோடாவது சண்டைன்னா அதுக்கு நாங்களா அகப்பட்டோம்? ஓடி வந்து எங்க வீட்டிலே பூந்துகிட்டு எங்களுக்கு வீண் பழியை வாங்கிக்கொடுக்கப் புறப்பட்டிருக்கே? மரியாதையா உடன் நீ புறப்பட்டு வீடு போய்ச் சேர்

போதும் உங்க சங்காத்தியம்.'' கோபமாக மீனா உத்தரவிட்டாள்.

''இன்று இரவு முழுவதும் நான் இங்கேயே தங்குவதாக உத்தேசம். அதனாலே நகரப் போவதில்லை.' அவளது கண்கள் வாசல் பக்கம் யார் வரவிற்காகவோ துழாவின.

''நான் அனுமதிக்க வேண்டாமா? இது சான் இடமானாலும் எங்க வீடு மறக்காதீங்க.'' உறுமினான் அவன்.

''நீங்க ஒரு நல்லவர். உங்க தாய் பண்பானவங்கன்னு புரிஞ்சு கொண்டதும்தான் துணியோடு உங்க வீட்டில அடைக்கலம் தேடிக்கிட்டு வந்திருக்கேன். இனி ஆதரிப்பதும் உதறுவதும் உங்க இஷ்டம்.'' புன்னகைத்த திவ்யா மீண்டும் வாசலைப் பார்த்தாள்.

''அவளோடு என்ன பேச்சு? போய் ஒரு டாக்ஸியை எடுத்துட்டு ஓடிவா '' அம்மா உரத்த குரலில் கத்தினாள்.

சிறிது பொழுதில் தாமோதரன் ஒரு டாக்ஸியுடன் திரும்பி வந்தான்.

''நல்ல வேளை, நகைப் பெட்டி, துணிமணிகள் சாமான் சட்டுன்னு எல்லாத்தையும் வாரிட்டு வராமல் கட்டின புடவையோட வந்திருக்கே. நல்லதாய்ப் போச்சு. இல்லாட்டி அதைக் காணோம் இதைக் காணோம்னு எங்களுக்குத் திருட்டுப் பட்டம் வேறே கட்டிடுவார் உங்கப்பா. அதுக்கு உனக்குக் கோடி கும்பிடு. ஏன் நிக்கறே? கிளம்பு.'' அதிகாரமாக அதட்டினாள் மீனா.

''முதலாளி மகளை அவங்க வீட்டில் கொண்டு போய் விட்டுட்டு வந்துடுவோம். நீங்களும் கூடத் துணைக்கு வாங்கம்மா.'' தாயாரைக் கூப்பிட்டான் தாமோதரன்.

**யோ**கேந்திரன் பூனை போல் மெல்லக் கீழே இறங்கி வந்து விட்டிருந்தான். அழுதழுது முகம் சிவந்து போன அம்மா புறப்பட ஆயத்தமாக இருந்தாள். கணக்கர் தலையைச் சொறிந்தபடி நின்று கொண்டிருந்தார். ராஜாராமன் பென்ஸ் காரைத்தானே எடுத்து வந்து வாசலில் நிறுத்தினார். ''ஆண்பிள்ளையாய் லட்சணமாய் நீயும் உதவிக்கு வா. தறுதலை இரண்டு பேரும் சேர்ந்து...'' பற்களைக் கடித்த அப்பா மகனைப் பார்த்து உறுமினார்.

எல்லோரும் வண்டிக்குள் ஏறிக்கொள்ள அதைச் சூழ்ந்து கொண்டபோது தோட்டத்திற்குள் வேறு ஒரு டாக்ஸி வேகமாக நுழைவதை அவர் கவனித்தார்.

உள்ளேயிருந்து கம்பெனி டிரைவர் தாமோதரன், திவ்யாவுடன் வயதான ஒரு பெண்மணியும் இறங்கினார்கள்.

டாக்ஸிக்கு மீட்டர்ப்படி பணத்தை எடுத்துக் கொடுத்து விட்டு நிதானமாகத் தாமோதரன் அவரை நிமிர்ந்து பார்த்தான்.

ராஜாராமுக்கு நிலை கொள்ள முடியாத கோபம். எரிமலையாகப் பொங்கி வெடித்தார். ''நீங்க எல்லோரும் உள்ளே போங்க,'' என்று தன் மனைவி பக்கம் கத்தினார்.

அவர் வயிறு கபகபவென்று எரிந்தது. என்ன துணிச்சல் இந்தப் பயலுக்கு என்ற ஆத்திரத்தில் உடல் எல்லாம் நடுங்கியது.

''நாங்களும் உள்ளே வருகிறோம். இது வாசலில் நின்று விவாதிக்கிற விஷயமல்ல.'' தாமோதரன் பேசிய போது அவரது அதிர்ச்சி அதிகரித்தது.

வேலையாட்களுக்கு வீட்டில் என்னவோ குழப்பம் நடக்கிறது என்றவரை ஊகம். ஆனால் சுற்றிலும

கண்ணுக்கெட்டியவரை யாரும் அருகில் இருக்கக்கூடாது என்று ராஜாராம் அவர்கள் எல்லோரையும் சிறிது முன்பு தான் வெளியே அனுப்பி விட்டிருந்தார்.

சமையல் ஆளை அவுட் அவுசுக்கு வெருட்டி விட்டிருந் தார். கதவுகளெல்லாம் சாத்தப்பட்ட பின்னர் அந்தப் பெரிய முன்னறை ஒரு நீதி மன்றம் போல் காட்சி யளித்தது.

உள்ளே வந்து நின்ற தாமோதரன் பக்கம் ஒரே எட்டில் தாவினார் ராஜாராம். இரை மீது பாயும் புலி போன்ற கொலை வெறி அவருக்கு.

''பார்த்துக்கோய்யா மிஸ்டர் அக்கௌண்டண்ட். நீர் சிபாரிசு செய்த பயல் என்ன பண்ணியிருக்கான்னு பாரும்!'' உக்கிரமாகக் கத்திய ராஜாராம், ஒரு தாவலில் தாமோதரனின் மார்புப் பக்கத்துச் சட்டையைக் கெட்டி யாகப் பிடித்துக் கொண்டார்.

''நன்றி கெட்ட நாசகாரா, என் குடும்பத்தைக் கெடுக் கவா உனக்கு நான் வேலை கொடுத்தேன்? பெரிய மனு ஷன் பெண்ணைத் தட்டிக் கொண்டு போனால் பணமும் காசும் வரும் என்கிற திட்டம் தானேடா? உசிரோட நான் வச்சால்தானே? தூக்கிலேதானே தொங்குவேன்? பயப் படலை. இப்ப மானம் போச்சு, இனி உசிருதானேடா போகும்? போகட்டும், போகட்டும்.'' ஆவேசத்துடன் ஓங்கி மடார் மடார் என்று அவன் முகத்திலும் மார்பிலும் குத்தத் தொடங்கினார்.

இடுப்பில் புடவைத் தலைப்பை வரிந்து கட்டிக் கொண்டு மீனா ஆவேசமாகக் காளி போல இடையே புகுந் தாள். பலமாக அவரது கரத்தைப் பிடித்துத் தடுத்து



நிறுத்தி, தன் சக்தி முழுவதையும் திரட்டித் தன் மகனைப் பின்னால் தள்ளிவிட்டாள்.

தாமோதரன் சட்டை முன்பகுதி கிழிந்து தொங்கியது. உதட்டின் மீது பல் பட்டு ரத்தம் முகவாயில் வழிந்தது. அதைக் கண்டு சுகுணா அலறிவிட்டாள். ''போதும் நிறுத் துங்க. கொலை விழுந்தா போலீசிலே வேறே போய் நிற்கணும். நம்ம மானம்...'' பேச முடியாமல் விம்மினாள்.

''தப்புச் செய்தது யார்னு விசாரிக்காம ஒரு பாவமும் அறியாத என் மகனைப் போட்டு மொத்தரையே, பெத்தவ கை பூப்பறிக்கும்னு நினைச்சியா? நீ கொலை பண்றதுக்கு உன் குடலைக் கிழிச்சு நான் மாலையாய் போட்டுக்குவேன் நான் நல்லமனுஷனுக்குப் பொறந்தவ, நல்ல புருஷனோட வாழ்ந்தவ. நல்ல ஒரு பிள்ளையைப் பெத்து வச்சிருக்கிற ஒரு தாய். தெரிஞ்சுக்கோ.'' வீரிட்டாள்.

''நில்லுங்கோ அம்மா. இந்தப் பெரிய மனுஷனோட தான் பேசறேன். தாமோதரன் குறுக்கிட்டான். ''கொஞ்ச நாளா உங்க மகதான்வலிய என்கிட்ட பேச்சுக் கொடுத்து என்னென்னவோ சூழ்ச்சிகள் பண்ணி என் மனசைக் குழப்பப் பார்த்தது. நான் புரிஞ்சுக்கிறாப்பல காட்டிக் காம கண்ணியமா இருந்துட்டேன். என் விசுவாசமும் நல்ல குணமும் உங்களைப் போல் ஆசாமிகளுக்குத் தேவை யில்லை. நான் மட்டும் ஆசைப்பட்டிருந்தா உங்களைப் போல் நடத்தைக் கெட்டவனாக இருந்திருந்தா இத்தனை நேரம் உங்க மக என் வீட்டிலே குடித்தனம் செய்துகிட் டிருக்கும். தெரிஞ்சுக்குங்க.''

''என்னடா சொன்னே?'' எகிறினார் ராஜாராம்.

''உண்மையைச் சொன்னேன். என்னைக்கும் நேர் மையா நடக்கிறவன் நான். அதனால துணிவோட

பேசறேன் இத்தனை நாளும் முதலாளின்னு மதிப்பு வச்சிருந்தேன். நன்றி விசுவாசம் வச்சநாலே வாயைத் திறந்து சொல்லலை. இத்தனை நாளா, நீங்க யார் யாருகிட்டே சகவாசம் வச்சிருந்தீங்கன்னும், எங்கெல்லாம் போய் வாரீங்கன்னும் தெரிஞ்சுகிட்டேன். ஆனா கண்டும் காணாதவன் போல இருந்திட்டேன். பணம் இருக்குங்கற திமிர்ல, வயசு வந்த பிள்ளைகளை வீட்ல வச்சிட்டு நீங்க தலைகால் தெரியாம...ஆடினீங்க.''

''படுவா ராஸ்கல்! பல்லை உடைப்பேண்டா! அது என் சொந்த விஷயம்.''

''சொந்த விஷயம், இப்ப அம்பலத்தில் ஏறிடுச்சு பாத்திங்களா? ஆட்டைக் கடிச்சு மாட்டைக் கடிச்சு, இப்ப அந்தப் பாவம் உங்க வீட்டு மனுஷாளையே கடிச்சிடுச்சு, உங்க பொண்ணு என் வீடு தேடி, என்னை தேடி ஓடி வந்திட்டுது.''

''உண்மையா சொல்லு. இல்லே, கழுத்தை முறிச்சிடுவேன்.'' மகனைப் பார்த்து உறுமினார் ராஜாராம்.

மரம் போல் எந்தவிதச் சலனமுமின்றி நின்றிருந்த திவ்யா அண்ணனின் முகத்தைப் பார்த்தாள். அந்த நிலையிலும் அவன் முகத்தில் லேசான புன்னகை. கண்களில் கண்ணீர் பளபளத்தது.

யோகேந்திரன் தங்கைக்குச் சைகை செய்தான். 'போதும் இந்த நாடகம்,' என்பது போல் அவன் உதடுகள் குவிந்து வளைந்தன.

''ஆமாம் அப்பா. அவர் சொல்றது அத்தனையும் உண்மை. அவர் மேலே தவறு எதுவும் கிடையாது. அத்தனை ஒழுக்கமானவர்னு தெரிஞ்சுதானப்பா நான்



துணிஞ்சு அவர் வீட்டுக்குப் போனேன். அந்தக் கடுதாசியை எழுதி வச்சேன்.''

''உனக்கு என்ன திமிர்...'' ராஜாராம் கையை ஓங்கினார்.

''இல்லேப்பா. உங்களைத் திருத்தறதுக்காக நான் செய்த பெரிய தியாகம்! மகன் செஞ்சதைக் கேட்டுட்டு அதிர்ந்து போனீங்க. அதுவும் நாங்க போட்ட திட்டமிட்ட நாடகம்.''

ராஜாராம் கை தாழ்ந்தது.

''பிள்ளை தானே தவறு செஞ்சாலும் திருத்திக்கலாம்னு உங்க மனசிலே ஒரு தெம்பு. அப்பக் கூட உங்களைத் திருத்திக்க யோசனை இல்லே. ஆனால் பெண் தப்புச் செய்தால்...தூக்குக்குப் போகும் அளவுக்கு உங்களுக்கு கோபமும் விழிப்பும் ஏற்படும்னு நானும் அண்ணனும் யோசித்துத்தான் இந்த விளையாட்டை ஆரம்பிச்சோம். இதை நாங்க துணிவா செஞ்ச தியாகம்னு ஏத்துக்குங்க அப்பா.'' திவ்யா முடித்தாள். ஓடிச் சென்று அவர் கரத்தைப் பிடித்தாள்.

''அம்மா, எங்களை மன்னிச்சிடுங்க. ஒரு நல்ல காரியத்துக்காக உங்க பிள்ளையை வெட்டுக் காயா உபயோகப்படுத்தினோம். இன்னமும் அவர் எத்தனை நல்லவர்னு இந்தச் சோதனையில் புரிஞ்சிட்டது. பெருமைப் பட்டுகிட்டு என்னையும் புரிஞ்சிக்குங்க.

மீனா அந்தப் பெண்ணைக் கட்டிக்கொண்டு விம்மி அழுதுவிட்டாள். ''நல்லா இரும்மா. வாழ்த்தறேன்.'' என்றாள்.

''வாங்கோம்மா...போகலாம்...'' என்று தாயை
அழைத்த தாமோதரன், ராஜாராமை நிமிர்ந்து பார்த்
தான். ''ஒண்ணு மட்டும் சொல்லிடறேன், சார் நல்ல
வனும், கெட்டவனும் மேல்மட்டத்திலும் இருக்கான்.
கீழ்மட்டத்திலும் இருக்கான் உங்களைப் போல எங்க
அளவில்கூட மனுஷங்க இருக்காங்க. ஆனா, அப்படிப்
பட்டவனைப் பஞ்சாயத்தை வச்சிப் பேசி மனைவிக்கு
நியாயம் வாங்கிக் கொடுத்திடுவோம். உங்களுக்கு வாச்ச
மனைவி மகாலட்சுமி, உத்தமி. கண்டும் காணாம அவங்க
பொறுமையா இருந்து மனம் கொதிக்கப் போனவங்க.
அதையும் புரிஞ்சு கொள்ளுங்க; போதும் இந்த வேலை
எனக்கு. கணக்கர் ஐயா, ரொம்ப நன்றிங்க, நாங்க
வரோம்.'' கிளம்பினான்.

மீனா கண்களைத் துடைத்துக் கொண்டாள். ''நான்
ரொம்பப் படிச்சவ இல்லே. ஆனாலும் ஒரு உண்மையை
தெளிவாக்கிக் கொண்டவ. திருவிழா ராட்டினம் போல,
மனுசன் தப்புச்செஞ்சதும் அந்தக் கணத்திலே மேலேருந்து
கீழே இறங்கிடறான். காசில்லாட்டாலும், நல்ல குணம்
இருந்தா எங்களைப் போல நிமிர்ந்து மேலே இருக்கிறான்.
வாழ்க்கை ஒரு ராட்டினம்னு நினைச்சிக்கிட்டா நல்லது''
சொல்லிக் கொண்டே படிகளில் இறங்கி அவள் தோட்டத்
திற்குள் மகனுடன் மறைந்தாள்.

ராஜாராம் துண்டால் வாயைப் பொத்திக் கொண்டு
குலுங்கியபடி மாடிப்பக்கம் விரைந்தார். கணக்கர் தலை
யாட்டிவிட்டு விடைபெற்றுக் கொண்டு நழுவினார்.

திவ்யா தாயிடம் வந்தாள். ''அப்படிப் பார்க்காதீங்
கம்மா. எல்லாம் உங்களுக்காகத்தான் செஞ்சோம்,'' என்று
இருவரும் தாயைக் கட்டிக் கொண்டபோது அம்மா
குலுங்கி அழுதாள்.



''முட்டாப் பசங்களா, ஒரு வார்த்தை என்கிட்ட
சொல்லி இருந்தா இந்த அவமானம் வந்திருக்காதே.
அப்பா மனசும் புண்ணாகி இருக்காதே.''

''அப்பாவைத் திருத்தத்தான் இந்த அதிர்ச்சி வைத்
தியம் செய்தோம்மா. இன்னுமா புரியலே?''

''புரியுது. ஆனா அது தேவையே இல்லேயம்மா. அப்பா
விஷயம் எல்லாம் எனக்கு நல்லா தெரியும். அது அவர்
பலவீனம்னு நான் பொறுமையா இருந்தேன். இது தவிர
அப்பா எனக்கு என்ன குறை வச்சிட்டார்? இரண்டு
குழந்தைகளுக்குத் தாயா வாழறேனே, அது அவர் கொடுத்த
வாழ்வுன்னு மகிழ்ச்சியா இருக்கேனே. போய் அப்பா
கிட்ட மன்னிப்புக் கேளுங்க.'' அம்மா விசும்பினாள்.

கட்டில் அருகே காலடி சப்தம் கேட்டு ராஜாராம்
எழுந்து உட்கார்ந்தார். கண்களும் முகமும் சிவந்து
வீங்கியிருந்தன. ஆளுக்கு ஒரு பக்கம் வந்து உட்கார்ந்த
குழந்தைகளையோ, கால்மாட்டில் வந்து நின்ற மனைவி
யையோ நிமிர்ந்து பார்க்கப் பிடிக்காமல் படுக்கை விரிப்
பைப் பார்த்தார்.

''அப்பா, எங்களை மன்னிச்சிடனும். நாங்கதான்
சித்தார்த்தை அப்படி எழுதச் சொன்னோம். இந்தத்
திட்டத்தில் அவருக்கு ஒரு பங்கு உண்டு. எல்லாம்
நல்லதுக்குத்தான் செய்தோம்.''

தம் இரு கைகளாலும் இரு குழந்தைகளையும் அணைத்
துக் கொண்டே ராஜாராம் விம்மினார்.

''என் பிறந்த நாளுக்கு மறக்க முடியாத பரிசு கொடுத்
திட்டீங்க. நன்றி, ஒரு மனிதனுக்கு வீடு சுத்தமா இருக்
கணும். வெளி உலகத்தை அவன் அசுத்தப்படுத்தக்
கூடாது. தேங்க்யூ மை சில்ரன். தேங்க்யூ மை டியர் ஒய்ஃப்

யூ ஆர் எ வொண்டர்ஃபுல் ஒய்ப். இந்த அழகான குடும்பத்திற்கு இனியாவது தகுதியுள்ள தலைவனாக இருக்க முயல்கிறேன். சத்தியம்'' தழுதழுத்தார்.

அவர் கன்னத்தில் ஓடிய கண்ணீரை சுகுணா துடைத்து விட்டாள். ''சுதாரிச்சிக்கிடுங்க பிறந்த நாளும் அதுவுமா ...'' அன்புடன் கடிந்தாள்.

''அப்பா எங்களுக்குச் சதாசிவம், திலகவதியைப் பத்தியும் தெரியும். அவங்க எங்க சகோதரிகள், ஒத்துக்கறோம். இனி தாராளமாக அவங்க இங்கே வந்து போகலாம். நாங்களும் திலகவதி கல்யாணத்துக்கு வரதாத் தீர்மானிச்சிட்டோம்.'' என்றான் யோகேந்திரன்.

''சித்தார்த் சந்தோஷப்படுவாரப்பா. இதையெல்லாம் கேட்டால்! நம்ப குடும்ப வாழ்க்கையில் இனி ஒளிவு மறைவே வேண்டாம்ப்பா,'' என்றாள் திவ்யா.

''வேண்டாம், வேண்டவே வேண்டாம்.'' தம் இரு குழந்தைகளையும் மீண்டும் இறுக அணைத்துக் கொண்டார்.

தோட்டத்திலிருந்தும் வீசிய சண்பக மணத்துடன் ஒரு நீண்ட அமைதி.

முற்றும்

19121